ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	—	ரூ.	3—0
6 மாத சந்தா	,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு	,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ ஐப்பசி௴ 16௳ (1—11—1931) | மலர் 27

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசுபெற்றது,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

உலகப்பிரசித்திபெற்ற உண்மையான மருந்துகள்.

காமகேசரி குளிகை.

(தங்கபஸ்பம் சேர்ந்தது)

தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இம்மாத்திரைகள் தாதுபுஷ்டியையும் தளர்ந்த நரம்புகளைக் கெட்டிபடுத்துவதிலும் பிரசித்தி பெற்ற பலவித யூனானி சரகுகளும் அசல் தங்க பஸ்பமும் சேர்த்து சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டது.

வயது சென்றதாலும், மிதமிஞ்சிய சம்போகத்தாலும், பலவித துர் அப்பியாசங்களாலும் இழந்து போன ஆண் தன்மையானது இம்மாத்திரைகளை சாப்பிட ஆரம்பித்தவுடன், மீண்டும் அதிகரிக்கச் செய்கிறது. பலக்குறைவு, கைகால்அசதி, சோம்பல், இடுப்புவலி, சம்போக காலத்தில் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி, துரிதஸ்கலிதம், சொற்பனஸ் கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கும். சரீர புஷ்டியும், தேககாந்தியும், வீரிய விருத்தியும், மிகுந்த ஆண் தன்மையும் உண்டாகும். தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி இல்லற இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். யாதொரு பத்தியமில்லை.

80 மாத்திரைகள் விலை ரூ. 10—0—0

40 மாத்திரைகள் விலை ரூ. 5—8—0

மஹா சந்தனாதித் தைலம்.

(ஓர் யோகீஸ்வரரின் அனுபவ முறை)

இத் தைலத்தில் அநேகவித பச்சிலை மூலிகைகள் சேர்ந்திருப்பதால் சரீரத்திலுள்ள உஷ்ணத்தை யும் நீக்கிக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் கண்களில் உண்டாகும் பலவித வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்கிறது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்த தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் கூச்சம், கண்குத்தல் சதைவளர்தல், மேகநீர் வெள்ளெழுத்து, மண்டையிடி, ஒருதலைநோய், பீனிசம், காசநோய், காதுமந்தம், சரீரத்தில் அதிக உஷ்ணத்தினால் உண்டாகும் தேக காந்தல், கிறுகிறுப்பு, மயக்கம், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், மூளைகொதிப்பு, நித்திரை யின்மை, தலைமயிர் உதிர்தல் முதலிய சகலவித நோய்களையும் குணம் செய்வதுடன் சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இத்தைலததை ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம் இத்தைலத்தை உபயோகித்தவர்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்து குவிகிறது. ஒரு முறை இத்தைலத்தை உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0

12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம். முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்குக் கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் 5 ரூபாய் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி,

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி, ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி 'S. I'

குஷ்டநோய்க்கு அற்புத மருந்து.

உடம்பில் தோல் நிறம் மாறித் தோல் தடித்தல், மதமதப்பு, திமிர்தினவு, இரணம் முதலியன உண்டாகி அவயவங்கள் குறைந்து அழுகுதல் முதலிய குஷ்ட நோய்களுக்கு ஓர் சிறந்த சித்த மருந்து. இது தாம்பிரம், வங்கம் முதலிய களிம்புள்ள உலோகங்களின் செந்தூர பஸ்பங்களைப்போல் கெடுதி ஒன்றுஞ் செய்யாது. கடுமையான பத்தியமில்லை.

40-நாள் மருந்து ரூபாய் 12. 20-நாள் மருந்து ரூபாய் 7.

மதிப்புரை.

எனக்குக் கால் விரல்கள் ரணமாகியும் பாதத்தில் பெரியகுழிப்புண் உண்டாகி அழுகி நீர்வடிந்து கொண்டும் சுமார் இரண்டு வருஷமாகப் பலவகை இஞ்சக்ஷன்கள் செய்தும், வைத்தியங்கள் செய்தும் குணமாகாமல் மிகக் கஷ்டமடைந்தேன். சென்னை தங்கசாலைத் தெரு, தமிழ் வைத்திய சாலைத் தலைவரும் கார்ப்பொரேஷன் கவுன்சிலருமாகிய பண்டிட் ஆனந்தம் அவர்களின் அருமையான மருந்தால் என் ரணங்கள் ஆறிக் குழிப்புண்களும் ஆறிப், பழைய நிலைமையை அடைந்தேன். என்னுடைய நோய் தீராதென்று என் உயிரையே வெறுத்துக்கொண்டிருந்தேன். பயங்கரமான என்னுடைய நோய் நீங்கி நலமடைந்தேன். என்போன்றவர்களும் போலி மருந்துகளால மோசம் போகாமல் பண்டிதர் அவர்களிடம் நோய் நீங்கிச்சுகமடையக் கோருகிறேன்.

எஸ். ராதா கிருஷ்ணன்,
18—7—31 1/75, திருப்பள்ளித் தெரு, சென்னை.

பொது ஜனங்களுக்கு எனது விண்ணப்பம்.

எனக்கு ஏற்பட்டிருந்த தோல் தடிப்பு, நிறம் மாற்றம், தினவுரணம் முதலியவைகளோடு கூடிய குஷ்டநோய்குச் சென்னை பண்டிட் ஆனந்தரின் அற்புத மருந்தைச் சாப்பிட்டு கொடியநோய் அறவே நீங்கி வலிவும் அழகும் அடைந்திருப்பதை மிக மகிழ்ச்சியுடனே அறிவிக்கின்றேன்.

இனியேனும் என்போன்ற நோயாளிகள் போலி மருந்துகளை அருந்தி மோசம் போகாமல் பண்டிட் ஆனந்தரின் அரிய மருந்துகளை உண்டு அறவே நோய்கள் நீங்கி தேகநலத்தோடும் பலத்தோடும் வாழ வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்ளுகினறேன்.

இங்ஙனம்,
பி. டி. சுந்தரம்,
61, படைவேட்டம்மன் கோவில் வீதி,
18—7—31 புரசவாக்கம், சென்னை.

தந்தி விலாசம்:—"மருத்துவன்."
டெலிபோன் நெ. 2584.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்,
தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி. சென்னை.

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அனைவர் ஆப்டோன் படங்கள், அரியகட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் வருஷ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

காந்தீயமென்பது

தேசத்துரோகம்.

சுயமரியாதைச்சங்கத்தாருக்கு ஓர் வேண்டுகோள்.

(தோழர் ம. சிங்காரவேலு B. A, B L.)

சில மாதங்களாக, சுயமரியாதைக் கூட்டத்தாரின் மகாநாடுகளில் நடந்தேறிவரும் விஷயங்களையும், நோக்கங்களையும், மேற்படி சங்கத்து முக்கிய பத்திரிகையாகிய "குடி அர"சையும், அதில் வரைந்து வரும் சொற்பொழிவுகளையும் வாசித்து வருகின்றேன். முதலில், இந்தக் கூட்டம் ஆரம்பிக்கும் போது இதன் நோக்கம் நமக்கு விளங்கவில்லை. அது, எனது அவசரத்தாலோ, அல்லது நியாயமாகவோ, என்பதை சொல்ல முடியாது. ஆனால் அந்தக் கூட்டத்திற்குத் தலைமையாக நின்று உழைத்து வரும் நமது தோழர்கள், இராமசாமி, இராமநாதன் இவர்கள் இருவரும், நம்முடன் கூட காங்கிரஸ் விஷயமாக, காந்தியாருடன் உழைத்து வந்த அவர்கள் சில காரணங்களால், காங்கிரஸை விட்டு விலகியதும், காந்தீயத்திற்கு நேர்மாறாக தற்போது உழைத்து வருவதும் சிறிதுகாலத்திற்கு முந்திதான் நமக்கு விளங்கியது. காங்கிரசின் கொள்கைகளுக்கு நான் மாறுபட்ட விஷயம் யாவருக்கும் தெரிந்ததே. முதலாவது, காங்கிரஸ், தொழிலாளர் நன்மைக்கென நடிக்கின்றதே யொழிய, உண்மையில், அவர்களுக்காக ஒன்றும் நடத்தப் போவதில்லை. குடியானவர்களுக்கும், காங்கிரஸ் மூலமாகவாவது நிலமோ, நீரோ கிடைக்கப் போவதில்லை. சொத்தின் உரிமை முதலாளி வசம் இருக்கும் வரை, பாமர மக்களுக்கு, வீடோ, வாசலோ, கிட்டப் போவதில்லை. இந்த மூன்று முக்கியார்த்தங்களும், இந்தியருக்குக் கிடைக்காத வரையில் எந்த உண்மைச் சுதந்திரமும், சமத்துவமும் வராதென்பதே நிச்சயம். இவைகளற்ற சுதந்திரமோ, அல்லது பூரண சுயராஜியமோ, எதுவும் பயனில்லை என்பதே நமது துணிபு. ஆதலின், கோடான கோடி பாமர மக்களுக்கு வீடும், வாசலும், நீரும், நிலமும் சமமாக கிடைத்தா லொழிய எந்த அரசிடல் இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஒன்றே.

கல்வி கேள்வியிலும், காங்கிரசின் சுயராஜியத்திலாவது, அல்லது காந்தியின் இராமராஜியத்திலாவது பாமர மக்களுக்கு, ஏதாகிலும் பலனுண்டாகு மென்பதும், பகற் கனவேயாகும். இராவணனையும், இலங்கையையும் ஒரு பெண்ணை சிறை கொண்டதற்கு அழித்த இராஜியம் என்ன இராஜியமென்று கூறுவது? இதன் விஷயமாகக் கற்பிப்பதெல்லாம், குழந்தை விளையாட்டே. பூர்வ கிரந்தங்களை காவியங்கள் மூலமாகப்படித்து, அதன் சொற் பொழிவையும், அலங்காரங்களையும் கண்டு ஆனந்தங் கொள்ளலாமே யொழிய, அக்காவியங்களை, நமது வாழ்வுக்குத் துணைக் கொள்ளல் பைத்தியக்காரத்தனமாகும். இந்த ஆபாசங்களை, பாமரமக்களுக்குத் தெரியுமாறு வெளியாக்குவதில் சுயமரியாதைச் சங்கம் உழைத்து வருவது போற்றத் தக்கதே.

நமது நாட்டில், ஜாதி மதங்களை; ஞாய வாயிலாகக் கண்டிப்பவர்கள் சிலரே. சென்ற 50 வருஷமாக, பண்டைக்காலதுர்பழக்கவழக்கங்களை கண்டித்தவர்களை அதிகமாகக் கிடையாது. தற்காலம் தென்னாட்டில் பெரிய சுயமரியாதைக்கூட்டத்தார் மத சமூக வாழ்க்கையிலுள்ள தோஷங்களையும் ஆபாசங்களையும் கண்டிக்க முன்வந்த விஷயம் நமது நாட்டின் பாக்கியமேயாகும். இதுவுமன்றி, பொது ஜனங்களுக்கு மதக்கண்டனையும், ஜாதிக்கண்டனையும் எடுத்து காட்டியவர்கள் சுயமரியாதைக் காரரைத் தவிர இது காறும் யாருமில்லை. புத்தர், சங்கரர், இராமானுஜர், விவேகானந்தர் காந்தி முதலிய பெரியோர், மதச் சார்பாகவே நின்று உழைத்து வந்தவர்கள் ஆவார்கள். இவர்கள் உழைப்பால், மதச் சண்டைகளும், மாச்சர்யங்களும் ஜாதி வேற்றுமைகளும் ஒழியாமல், பெருகி தினமும் வருகின்றனவே யொழிய நின்றபாடில்லை. உலகினின்று, மதங்களும், ஜாதிகளும், தேசீயங்களும் ஒழிந்தாலொழிய, உண்மையில் சுதந்தரம், சகோதரத்துவம், சமத்துவம் நிலைக்காது.

பொருளாளி திட்டத்தில் பணக்காரனைத் தவிர மற்ற யாருக்கு சுதந்திரமுண்டு? ஜாதியுள்ள ஊரில் யாருக்கு சகோதரத்துவமுண்டு? உயர்வு தாழ்வு நிறைந்த நாட்டில், யாருக்குச் சமத்துவமுண்டு? இவைகள் அழிந்தாலன்றோ, உண்மை சுதந்தரமும், சகோதரத்துவமும் சமத்துவமும் உண்டாகும்? இதனை அறியாமல், நமது நாட்டிக்கு எவ்விதம் சுதந்தரமும், சமத்துவமும் எவரால் கொண்டு வரமுடியும்?

ஜாதி ஒழிய வேண்டியது அவசியமே. சமயமும் ஒழிய வேண்டியதும் அவசியமே. ஆனால், இவைகளுக்கெல்லாம் அடிப்படையாயுள்ளது வொன்றுண்டு. அது தொலையாமல், ஜாதி ஒழிந்தும் பயனில்லை. சமையமும் வொழிந்தும் பயனில்லை. அதாவது பொருளாதார வேற்றுமை. இந்த வேற்றுமையை வைத்துக் கொண்டு, மத சீர்திருத்தம், ஜாதி சீர்திருத்தம், அரசியல் சீர்திருத்தம் முதலிய சமூக சீர்திருத்தங்கள் செய்தாலும், யாதும் பயன் படாது. மதத்தை தவிர்த்த அரசாங்கங்கள் பலவுள. ஜாதி இல்லா அரசாங்கங்கள் பலவுள. குடி அரசு அடைந்த அரசாங்கங்கள் பலவுள. இருந்தும், பாமர மக்கள்கதி என்னவாயிற்று? வறுமையும், நோயும், நிலமில்லாமையும், வீடில்லாமையும், கல்வி இல்லாமையும், கேள்வி இல்லாமையும், வேலையில்லாமையுமே உலகிலுள்ள பெரும்பான்மையோருடைய வாழ்வாகும்! இந்த முக்கிய வித்தியாசத்தை நேர் அறக்காமையால் தான், தற்போது உலகில் காணும் கொடுமைகள் யாவும் நீண்டு வளர்ந்து வருகின்றன. இந்தக் கோடாலிக் காம்பு தான் மனித குலத்திற்கு ஈனமாகவுள்ளது. இந்த உலகில் நிறைந்துள்ள பொருளாதார வித்தியாசத்தால் தான், புத்தரும், சங்கரரும், வேத வேதாந்திகளும் முயற்சித்து வந்த சீர்திருத்தங்கள் யாவும், உலகை நாளது வரை கஷ்ட நிலைமையிலேயே வைத்திருக்கின்றது. இந்த பொருளாதார தார தன்மையை நீக்காததனால் தான், பிரஞ்சு தேசத்து புரட்சியும், அமெரிக்கா தேசத்துப் புரட்சியும், சாமான்ய ஜனங்களுக்கு நாளது வரையிலும் வொரு பிரயோசனத்தையும் தராமல் போயின. இந்த பொருளாதார சமத்துவத்தை உண்டாக்காததனால் தான், இன்று நிலத்துள்ள பல அரசுகளும், கோடான கோடி மனிதருக்கு உபயோகமற்றக் கிடக்கின்றன. பொருள் இருக்கின்றவனுக்கும் இல்லாதவனுக்குமுள்ள வித்தியாசத்தை, உண்மையில் போக்க திட்டமொன்றும் செய்யாததினால் தான், இந்த தேசத்தில் வழங்கும் காந்தீயமும், வேஷத்தனமாய் விட்டது. ஆதலின் எந்த மத வேற்றுமையைப் போக்கினாலும் எந்த ஜாதி வித்தியாசத்தைப் போக்கினாலும், எந்த வித அரசியல் வந்தாலும், சமதர்மம், அதாவது, பொதுவுடைமை வருகின்றவரை வறுமையும், பிணி, மூப்பு, சாக்காடும், கலகமும், சண்டையும், போரும் உலகில் விளைந்தே வரும்.

உலகில் சுதந்திரத்திற்கும், சகோதரத்துவத்திற்கும் அடிப்படையாயுள்ளது பொருளாதார சமத்துவமே. இந்த சமத்துவம் ஏற்படுகின்றவரை, எந்த சீர்திருத்தமும் பயன்படாவென அறிக. உலகம் ஜாதி சமயமற்ற நாஸ்திகமாய் நின்றாலும், பொருளாதார வித்தியாசங்கள் இருக்கும் வரை, சீர் படாதென்று துணிந்து கூறுவோம்.

ஆதலின், சுயமரியாதை சங்கத்தார், ஜாதி சீர்திருத்தம் சமய சீர்திருத்தத்துடன் நின்று விடாமல், பொருளாதார சீர்திருத்தத்தையும் கைகொள்ள வேண்டி வரும். இதன் சம்பந்தமாக ஒரு திட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு, அரசியல் சீர்திருத்தத்துறையில் இறங்குவார்களே யானால், மற்ற சீர்திருத்தங்களும் கஷ்டமில்லாமலே உண்டாய்விடும். எந்த அரசியலாய் இருந்தாலும்சரி, பிரிட்டிஷ் அரசியலாய் இருந்தாலும்சரி, அல்லது ஏகாதிபத்திய அரசியலாய் இருந்தாலும்சரி, அல்லது சுயராஜிய அரசியலாய் இருந்தாலும்சரி, பொருளாதார வேற்றுமையை பற்றறச்செய்யும் அரசியலே ஒத்துழைப்பதுவே ஒவ்வொருவருடைய கடமையாகும்.

இந்த நோக்கத்துடன், சுயமரியாதைக் கூட்டத்தார் அரசியல் திட்டம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு மற்ற தேசத்திலுள்ள சமூக கட்சிக்காரர்களை, கண்டிப்பது பொருத்தமாகும்.

உயிருக்கு முக்கிய ஆதாரம் பொருளாகும். பொருளாதாரத்தை விட்டு விட்டு, மற்ற அற்ப சொற்ப ஆதாரங்களைப்பற்றி வாதாடுவது உசிதமாகாது. இதனை கவனியாதவரையும், தீண்டாமையையும், பகிஷ்காரங்களை கட்டிக்கொண்டு அழுங் காங்கிரஸ்காரர் முயற்சி எல்லாம், நகைப்புக்கு இடமாகின்றன. செல்வச்சாலைகளை எல்லாம் பொதுவுடைமையாக்கி, தொழிலாளர் ஆதிக்கத்தில் அவைகளை விட்டுவிடும் பட்சத்தில், நாட்டில் உடைக்கு பஞ்சமேது? தாழ்த்தப்பட்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் நிலமும், நீரும் அளித்து, தான் பயிரிடும் நிலத்திற்கு அவனை சொந்தக்காரனாக்கும் பட்சத்தில், தீண்டாமை ஏது? வீடும், வாழ்க்கையும் உயர்த்தப்படுமே யானால், யார்தான் முடிந்துவெறியர்கள் ஆவார்கள்? ஜனசமூகத்திற்குவேண்டிய தொழில்களை சரியாகவினியோகப்படுத்தினால், வேலை இல்லாமைஏது? அதற்கு முழுப்பயனை அவனவன் அடைந்தால் வறுமை ஏது? நிலமில்லாதாருக்கு நிலமும், வேலை இல்லாதார்க்கு வேலையும், வீடில்லாதாருக்கு வீடும உலகிலோ, அல்லது எந்த நாட்டிலோ ஏற்படுமே யானால் அந்த உலகிற்கோ, அந்த நாட்டிற்கோ, எந்த இராஜியம் இருந்தாலுமென்ன? வந்தாலுமென்ன? இந்த திட்டத்தை கையாளுவார்களேயாகில் தற்காலம் ஆட்சிசெய்யும் பிரிட்டிஷாரோடு கலந்து உழைப்பதற்கு என்ன தடை?

முதலில், நமது நாட்டில் வாழும் பாமர மக்களுக்குள்; தங்கள் வாழ்வை உயர்த்திக்கொள்ள விருப்பம் உண்டாக்க வேண்டும். நமது நாட்டு மக்களுக்கு வேண்டியது ஜாதியுமல்ல, சமயமுமல்ல. உழைப்பதற்கு வேலையும் அதன் பயனுக்குயிர் உண்ண உணவும் இருக்கவீடும், விஷயஞானத்தைப்பெறக்கல்வியும் வேண்டும். இதனை அரசாங்கத்தார் அமைத்துக் கொடுக்கவேண்டியது அவர்களுடைய முக்கிய கடமையாகும். இதனை அடிக்கடி, பல காலங்களிலும், அரசியல் ஸ்தாபனங்களில் வற்புறுத்த வேண்டும். பொதுக்கூட்டங்களில் எடுத்துக் காட்டவேண்டும். நமக்கு பட்டமும் வேண்டாம், பதவியும் வேண்டாம், பேரும் வேண்டாம், கீர்த்தியும் வேண்டாம். பாமர மக்கள், வயிறார உண்ண உணவும், உடுக்க ஆடையும்,

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

வகுப்புப் போராட்டங்கள்.

(Dr. R. P. பரஞ்சிபே எழுதிய "இந்தியாவின் தேவை" என்னும் புத்தகத்தில் காணப்படும் சாரங்கள்.)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இந்துக்கள் என்பவர்கள், இம்மாதிரியாக தங்களுடையமதத்தையும், வகுப்பையும், தொழிலையும், தாங்கள் வாசம் செய்யும்படியான இடத்தையுமே ஆதாரமாகக்கொண்டு,பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்நான்கு தன்மைகளில் இருந்து மற்றும் அனேக ஜாதிகள் தோன்ற இடமேற்பட்டன. ஆனால், இவைகளினாலேற்பட்ட உட் பிரிவுகளாகிய அனேக ஜாதிகளுக்கும் முக்கிய காரணமெதுவாயிருந்த போதிலும் கூட, அவைகளுக்கெல்லாம் மத சம்பந்தமான கருத்துக்களையே முக்கியமாக்கப்பட்டன. மற்றும் ஜாதி விஷயங்களில் ஒருவன் பிரவேசிப்பதென்றால் அது மதத்திற்கு நேர் விரோதமென கூப்பாடு போடப்பட்டும் வந்தது. ஆகையினாலே புதிய புதிய ஜாதிகள் அடிக்கடி தோன்றுவதற்கும், ஏற்படுவதற்கும் முடிந்ததேயல்லாமல், இருக்கக் கூடிய ஜாதிகள் யாவும் ஒன்று சேர்ந்து, ஒற்றுமையடைந்து, சிநேகித பான்மையுடன் ஒன்றாக ஐக்கியமடைவதற்கான அறிகுறிகள் இல்லாமலே போய் விட்டது. சில சீர்திருத்த வாதிகள் எல்லா மக்களும் ஒற்றுமையடைய வேண்டுமெனவும், ஒன்று சேர வேண்டுமெனவும் வாயில் பேசுகின்றார்கள். ஆனால், அதை அடைவதற்கு மக்கள் யாவரும் தத்தம் ஜாதிகளை அடியோடு ஒழித்து விட்டு, யாவரும் ஒரு குடும்பத்திலுள்ள சகோதரர்கள் போல வாழ வேண்டுமென உரைத்து விடுவார்களேயாகில், அப்பொழுது அவர்கள் பாடு மிகக் கஷ்டமாகி விடும். மூலைக்கு மூலை பல எதிர்ப்புகளும் ஏற்பட்டு விடும். அன்றியும் சீர் திருத்த விரோதிகள், மற்ற நாடுகளில் கல்வியினாலும் பணத்தினாலும் மக்களுக்குள் இருந்து வரும் வித்தியாசத்தை எடுத்துக் காட்டி பாமர மக்களை ஏமாற்றி நமது நாட்டின் ஜாதி வித்தியாசத்தைக் காப்பாற்ற முயற்சிப்பார்கள். ஆனால் இந்து மதத்தின் ஜாதியானது மற்ற நாட்டு வித்தியாசத்தைப் போன்றதல்ல. அதாவது இந்து மதக்காரர்களில் அனேகர் தாங்கள் என்ன தான் கஷ்டப்பட்டு, அரும்பாடுபட்டு, தங்களுடைய சுய முயற்சியால் கல்வியிலும் செல்வத்திலும் முன்னேறினாலும், மற்றவர்களுக்கு இருக்கும்படியான உன்னத நிலைமையை தாங்கள் எப்பொழுதுமே, எக்காலத்திலுமே, எக்காரணத்தைக் கொண்டுமே யடைய முடியாதபடியான நிலைமையில் இந்து மதத்தின் ஜாதி வித்தியாசமானது இருந்து கொண்டு வருகின்றதென்பதை அறிந்தும், தெரிந்தும் கொள்ளாதவர்களாகவே தான் காணப்படுகின்றார்கள். பிரம்ம சூத்திரத்தின் படி, இவ்வுலகத்தைப் படைத்த பிரம்ம தேவனுடைய சிரசிலிருந்து பிராமணர்களும், புஜங்களிலிருந்து க்ஷத்திரியர்களும், தொடைகளிலிருந்துவைசியர்களும், பாதங்களிலிருந்துசூத்திரர்களும் வரிசைக்கிரமமாக பிரமாவினாலேயே படைக்கப் பட்டிருப்பதாகக் ஏற்படுகின்றது. இவ்வாறு உரைப்பதனால் அறிவாளிகளும், யுத்தம் புரிபவர்களும், தொழில் செய்பவர்களும், கூலி வேலை அதாவது அடிமைத் தொழில் புரிகின்றவர்களுமென கூறப் படுவதற்கனுசரணையாகக் காணும்படியான நான்கு பிரிவுகளையும் ஏற்படுத்தினார்கள். அப்பிரிவுகள் எக்காரணத்தை மூலாதாரமாகக் கொண்டு ஏற்படுத்தப் பட்டிருந்த போதிலும், இப்பொழுது காணப்படும்பல்வேறு ஜாதிகளின் எண்ணிக்கைகளையோ அளவெடுத்துரைப்பதற்கேயில்லை. மேலும், ஒரு தேகத் தத்துவநிபுணன், அந்தபிரம்ம தேவனின் ஒவ்வொரு அங்கத்தையும் ஒவ்வொரு வகுப்பினர்களுக்கும் ஒவ்வொன்றாக பங்கிட்டு, அவ்வங்கமே அந்தஜாதிஉற்பத்தியானதற்குக் காரணமென உரைப்பதற்கும்கூட கொஞ்சமும் சாத்தியப் படாத அளவிலேயே தான் இப்பொழுது காணப்படும் பல்வேறு ஜாதிகளும் பெருகியிருக்கின்றன. அவ்வாறு அந்த பிரம்மதேவனின் ஒவ்வொரு அங்கத்தையும் ஒவ்வொரு ஜாதியாருக்கும் பங்கிட ஆரம்பித்தோமேயானால், அப்பொழுது ஒவ்வொருஜாதிக்கும்அப்பிரம்மதேவனின் தேகத்திலுள்ள ஓர் அவயவமாவது, அல்லது சிறு சிறு மாமிசத்துண்டமாவது, அல்லது சிறு நரம்பாவது, அல்லது ஓர் சிறிய இரத்த அணுவாவது அவரவர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்க முடியுமா என்பது ஓர் பெரிய சந்தேகமாகவேதான் இருந்து கொண்டு வருகின்றது!

பல்வேறு வகுப்பினைச் சார்ந்த மக்களுக்குள்ளும் கலப்பு விவாகமென்பது முழுவதும் தடுக்கப் பட்டேதானிருக்கின்றது. கலப்புவிவாகமென்பதை கனவிலும் ஒருவரும் கருதவே கூடாது. தங்கள் மதத்தைச் சாராதவர்களின் எதிரிலாவது, அல்லது அவர்கள் காணும்படியாகவாவது ஏதாகிலும் சாப்பிடுவதென்பது கூட அறவே தடுக்கப் பட்டுத்தானிருக்கின்றது. மேலும், இன்னும் சில ஜாதிகளோ, தங்களுடைய இனத்தவர்கள் அல்லது தங்களுடைய ஜாதியைச் சார்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய சுமார் நூறு குடும்பங்களை மட்டும் கொண்டிருக்கும் படியான அவ்வளவு சிறிய தொகையையுடையவர்களாகத்தான் யிருக்கின்றார்கள். ஆகையினாலே, அவர்களுடைய குடும்பத்திற்குள்ளேயே அவர்கள் தங்களுடைய ஆண்களுக்கும், பெண்களுக்கும் தகுந்தபடி விவாகம் செய்வதற்கில்லாமல் போய் விடுகின்றது. சில சமயங்களில், சில வகுப்பினருக்குள் பெண்களே அபரிமிதமாகக் காணப் படுகின்றார்கள். இன்னும் சில வகுப்பினருக்குள்ளோ ஆண்களே அவ்வாறு அபரிமிதமாகக் காணப்படுகின்றார்கள். இக்காரணத்தால் தான் ஏராளமான ஸ்ரீதனங்களை அளிப்பதனால் உண்டாகக் கூடிய தீமைகளும், பெண்களை விற்பனை செய்வதும், பலதாரங்களை விவாகங்கள் செய்து கொள்ளுவதும், கொஞ்சமேனும் ஒருவருக்கொருவர் பொருத்தமில்லா விவாகங்களுமாகிய செய்கைகள் நாட்டில் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

மேலும், ஒவ்வொரு, சமூகமும் வேறு சமூகங்களோடு சம்பந்தம் செய்து, சிநேகித பான்மையுடனிருப்பதற்கில்லாத விதத்தில் பலவித தடைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்ற படியினால், பல்வேறு சமூகங்களும்தங்கள், தங்களுடைய ஜாதியாசார, யனுஷ்டானங்களுக்குறிய கட்டுதிட்ட வரம்பிற் குள்ளாகவேயிருக்கும்படியாக நேரிடுகின்றது. இக்காரணத்தால் அவர்களுக்குள்ளாக ஒருவர் மீதொருவர் தப்பெண்ணங்கள் கொள்ளவும், பொறாமைப் படவும் மிக்க வசதிகளேற்படுகின்றன. தங்களுடைய ஜாதிக்குப் புறம்பானவர்களைக் காணுமிடத்து, அவர்கள் தங்களுடன் போட்டியிடுவதற்கு உற்பத்தியாயிருக்கக் கூடியவர்களென நினைத்து, அவர்களுடைய ஜாதி உற்பத்தியானதற்கு பல இழிவானதும், தாழ்வானதுமான காரணங்கள் கூறப்பட்டு, அடிக்கடி பல சச்சரவுகளும்,சண்டைகளும் நேரிட்டு, அருவருக்கத் தக்கதும், வெறுக்கத் தக்கதுமான அடைமொழிப் பதங்கள் பல, அநேக சந்தர்ப்பங்களில் வினியோகிக்கப் படுகின்றன. சில சமயங்களில், அவ்வாறு அவர்கள் உற்பத்தியாவதற்கு விபசாரமும், துஷ்கிருத்திய செய்கைகளுமே காரணமெனவும் கூறப்பட்டு வரப்படுகின்றது. உதாரணமாக, மேற்கு இந்தியா பிரதேசத்தில் வசித்துக் கொண்டு வரும் பிராமண வகுப்பாரில் சிலர் அன்னியர்களை விஷமூட்டிக் கொன்று விடுவதில் மிக்க உற்சாக முள்ளவர்களெனவும், அவர்கள் முக்கியமாக தங்களுடைய மருமகன்மார்களை ஓர் வித பெண் தெய்வத்திற்குப் பலியிட்டு விடக் கூடியவர்களெனவும் கருதப் பட்டு வருகின்றது. ஆனால் இவர்களுடைய இத்தகைய செய்கைகளுக்கு எந்த விதமான ஆதாரங்களும் காணப்படாமலிருந்த போதிலும் கூட, சில ஆண்டுகளுக்கு முன்னதாக இவ்வர்த்தமானமானது உண்மையாயிருக்கக் கூடுமென பாமர மக்களால் பொதுவாகவே கருதப்பட்டும், நம்பப்பட்டும் வந்ததினால் ஏனைய வகுப்பினர் அந்த வகுப்பைச் சார்ந்த ஓர் ஆடவனிடத்திலிருந்தும் தாகத்திற்குக் கூட தண்ணீர் வாங்கி, அருந்த பயந்து கொண்டேயிருந்து வந்தார்கள்.

மக்கள் நாளா வட்டத்தில் அறிவு விர்த்திக்கான கல்வித் துறையில் முன்னேற்ற மடைந்து கொண்டே வந்து கொண்டிருப்பதனாலும், போக்கு வரத்திற்குறிய சாதனங்கள் பல அபிவிருத்தி யடைந்து கொண்டே வந்து கொண்டிருப்பதனாலும், மக்கள் தங்களுடைய ஜாதி வரம்பிற்குட் பட்ட குறித்த ஓர் எல்லையைக் கடந்து, உலக வர்த்த

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)

திரு. ராமாநந்தசட்டர்ஜிக்கு திரு. S. ராமநாதன் பதில்.

செப்டம்பர் மாதத்திய "மாடர்ன் ரிவ்யூ" என்னும் ஆங்கில மாதாந்திரப் பத்திரிகையில், அதன் ஆசிரியர் திரு. இராமானந்த சட்டர்ஜி அவர்களால் "சுயமரியாதை"ச் சங்கத்தைப் பற்றிய குறிப்புகள் என எழுதியிருக்கப்பட்ட குறிப்புகளுக்கு, சுயமரியாதை சங்கத்தின் பொதுக்காரியதரிசியான திரு. இராமநாதன் M. A, B. L. அவர்களால் அப்பத்திரிகைக்கு எழுதியனுப்பப்பட்ட மறுப்பு பின் வருமாறு:—

பெருமைதங்கிய ஐயா,

தங்களுடைய செப்டம்பர் மாதத்திய சஞ்சிகை, பக்கம் 358 ல் தாங்கள் சுயமரியாதை சங்கத்தைப் பற்றி சில குறிப்புகள் எழுதியிருக்கிறீர்கள். அவைகளுக்கு விடையளிக்க அனுமதி அளிக்க வேணுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன். தங்களுடைய கண்டனங்கள் யாவும் ஏதோ ஒரு பத்திரிகையில் காணப்பட்டதும், உண்மையற்றதுமான வதந்திகளையே ஆதாரமாகக் கொண்டிருப்பதால், மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நகல் ஒன்றை நான் தங்களுக்கு இத்துடன் அடக்கம் செய்து அனுப்பியிருக்கிறேன். தங்களுடைய ஆக்ஷேபணைக்கு அஸ்திவாரமாக தங்களால் எடுத்துக் காட்டப்பட்டத் தீர்மானம் பின்வருமாறு:—

1 (a) மனிதத் தன்மையைத் தடைபடுத்துவதற்கு மதங்களின் பேரால்ஏற்பட்டுள்ள பழக்க வழக்கங்களே காரணமாயிருப்பதால் அப்படிப்பட்ட எல்லா மதங்களும் மறைந்துபோகவேண்டுமென்றும், மதங்கள் ஒழியும்வரை மனிதர்களுக்குள் சகோதரத்துவம் வளராதென்றும் இம் மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

(b) இந்திய தேசத்தில் தோன்றியுள்ள மதவேற்றுமைகளும், பகைமைகளும் அழியவேண்டுமானால் அறிவுள்ள இந்தியர்கள் முதலில் மத உணர்ச்சியை புறக்கணிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

(c) தற்கால லௌகிக முன்னேற்றத்திற்கு அனுகூலமாக சட்டசபைகளில் வரும் முக்கியமான சீர்திருத்தச்சட்டங்களையெல்லாம் பிற்போக்கானவர்கள் மதத்தின் பேரால் ஆக்ஷேபிப்பதால், இம்மகாநாடு அரசாங்கத்தார் அனுசரித்துவரும் மத நடு நிலைமையை ஆதரிக்கும் எந்த அரசியல் சமுதாயக்கக்ஷிகளையும் ஒப்புக்கொள்ள முடியாதென்றும், எதிர்கால இந்திய அரசியல் சீர்திருத்தத்தில் "மதநடுநிலைமை" என்னும் கொள்கை நீக்கப்படவேண்டும் என்றும் வற்புறுத்துகின்றது.

(d) சர்க்காரார் விடுமுறை என்று பண்டிகைகளைப் பிரதானமாய்வைத்து லீவுகள் கொடுப்பது என்பது ஒருவகையில் மூடப்பழக்க வழக்கத்தில் கட்டுப்பட்டதாய் இருப்பதால் சர்க்காரார் அந்த வழக்கத்தை விட்டுவிடவேண்டுமென்றும் அவசியமிருப்பவர்கள் தனி லீவு எடுத்துக்கொள்ளலாம் என்றும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

இத்தீர்மானமானது 'மதத்தின்பேரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பழக்க வழக்கங்களையும், நடத்தைகளையும், ஒழுக்கங்களையும், ஸ்தாபனங்களையும்' மட்டும் குறிக்கின்றதேயல்லாமல், தாங்கள் கருதுவதுபோல மதபக்தியையோ, அல்லது கடவுள் பக்தியையோ பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கும் ஒரு தனிப்பட்ட மக்களைக்குறிப்பிடவேயில்லை. 'மதத்தை உருவாக்கியிருக்கும் சக்திகளே' சீர்திருத்தங்களுக்கு விரோதமாகயிருக்கின்றன என தாங்கள் உரைத்திருப்பதுபோலவேதான், மகாநாட்டிற்குத்தலைமை வகித்த திரு ஆர். கே ஷண்முகம் அவர்களும் கூறியிருக்கின்றார். மதஸ்தாபனங்களையும், மதத்தின் பேரால் நடை பெற்றுக்கொண்டுவரும் அப்பியாசங்களையும், அனுபவங்களையும், சம்பிரதாயங்களையும், பழக்க வழக்கங்களையுமட்டும் தகர்த்தெரியவேண்டுமென சுயமரியாதை இயக்கம் பாடுபட்டு வருகின்றதேயல்லாமல், மதபக்தியினால் ஈஸ்வரஞானம் பெற்றிருப்பதாகக்கூறிக்கொள்ளும் தனிப்பட்ட மக்களிடத்தில் அதுபோராடவில்லை.

மதபக்தியினால் ஈஸ்வரஞானம் அடைந்ததாகக்கூறும் சில குறிப்பிட்ட மக்கள் சமயாசமயங்களில் எப்பொழுதாகிலும் காருண்யத்தினால் தூண்டப்பட்டவர்களாகி மானுஷீகத்தன்மை நிரம்பியுள்ள காரியாதிகளைச்சாதித்திருக்கலாம் ஆனால், மானுஷீகத்தன்மை நிரம்பியுள்ளதாகக்கருதப்படும் அவர்களுடைய அத்தகையச் செய்கைகள் யாவும் வெளிப்படையாகக் காணப்படுவதற்கு, அவர்களுடையஜீவியத்தில் அவர்களது மதமானது அவர்களை அவ்வித காரியங்களைச்செய்யத் தூண்டிற்று என்று சொல்லிவிட முடியாது. பல்வேறு ஆச்சரியகரமானதும், ஒன்றுக்கொன்று விரோதமானதுமான சுபாவங்களும், ஏதுக்களும்மனித இயற்கையில் கலந்து நிற்பதனால் அது சில சமயங்களில், அத்தகைய மானிடர்களை, தங்களைச் சூழ்ந்துகொண்டு நிற்பவைகளின் தூண்டுகோலுக்கு நேர்விரோதமாகவும், ஜன்மபரம்பரையாக அவர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் தங்களுடைய பழக்கவழக்கங்களுக்கு நேர்விரோதமாகவும் காரியாதிகளைப் புரியும்படியாகச்செய்து கொண்டுவருகின்றது. மேலும், ஆடவர்களின் மனித சுபாவங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஸ்திரீ தன்மையானது அடிக்கடி ஆவேசம்போல் வெளிக்கிளம்பி, சமயக்கோட்பாடுகளின் எல்லைகளினளவை தகர்த்தெரிகின்றது.

சுயமரியாதை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்களை அனுசரித்தவரையிலும், மேலேகூறப்பட்டவைகளினளவு செல்ல வேண்டிய அவசியமேயில்லை. மானுஷீகத் தன்மையும், காருண்யமும் நிறைந்துள்ள செய்கைகளைப் புரிந்திருப்பதாகக் கூறப்படும் மக்கள் பலரும் மதபக்தியாலும், மதநம்பிக்கையாலுமே தூண்டப்பட்டு அத்தகைய காரியாதிகளைச் செய்தார்களேயல்லாமல், மற்றபடி அவர்களுடைய மானிடத்தன்மையின் மனோவெழுச்சியானது வெளிக்கிளம்பியதின் காரணமாய் அவர்கள் அத்தகையக்காரியங்களைச்செய்யவில்லையென்று தாங்கள் கூறும் கூற்றை சரியென்று ஒத்துக்கொண்டே பார்ப்போம்.

திரு ராஜாராம் மோகனராய் அவர்கள், பெண்கள் தங்களுடைய இறந்தகணவர்களுடன் தாங்களும் உயிருடன் உடன்கட்டையேறல் என்னும் கொடிய பழக்கமாகிய 'சதி' என்னும் வழக்கத்தை நிறுத்தியதற்கு அவரால் தோற்றுவிக்கப்பட்ட பிரமசமாஜத்தின் சித்தாந்தங்களேதான் காரணமாகுமேயல்லாமல், மற்றபடி உதவியற்ற அந்த விதவைகள் சித்திரவதை செய்யப்படுவதைக்கண்டு மனமிரங்கியது காரணமாகாதென உரைக்கப்படுவதையும் தர்க்கத்திற்காக ஒத்துக்கொள்ளுவதாகவே வைத்துக்கொள்ளுவோம்.

மேலும், சுவாமி விவேகானந்தர் அவர்கள், தமது தென்னிந்தியா சுற்றுப்பிரயாணத்தின்போது, தென்னிந்தியாவில் தாண்டவமாடிக்கொண்டிருக்கும் தீண்டாமையைக்கண்டு, அருவருப்படைந்து, திகிலடைந்து, எடுத்துரைத்த வாக்கியங்கள்யாவும், இரகசியமானதும், ஆழ்ந்த கருத்துள்ளவைகளுக்கும்—பகிரங்கமானதும், எல்லாஜனங்களுக்கும் தெரிவிக்கக்கூடியவைகளுக்குமுள்ள தாரதம்மியங்களையும், வித்தியாசங்களையும், வேறுபாடுகளையும் பிரசித்தப்படுத்தி பரவச்செய்யக்கூடியதும், பரமார்த்தீகமாக தன்னைத்தானே ஒருவன் அறிந்துகொள்ளுவது—அதாவது 'அஹம்—பிரமம்—அஸ்மம்' என்னும் மந்திரமானது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில மக்களால் காப்பாற்றப்பட்டும், ஏனைய பெரும்பான்மையான மக்களை அறியாமையிலும், மூடக்கொள்கைகளிலும், மூடப்பழக்கவழக்கங்களிலும் ஆழ்ந்திருக்கும்படி அடித்துத் துரத்துவதுமானதுமான அவரால் பின்பற்றப்பட்ட அந்த வேதாந்த மதந்தான் காரணமாகுமேயல்லாமல், மற்றபடி அவருடைய மனசாக்ஷியானது பாதிக்கப்பட்டு துன்பமடைந்தது அதற்குக் காரணமாகாதென்பதையும், வேண்டுமானால், தர்க்கத்திற்கென ஒத்துக்கொள்ளுவோம்.

தங்களால் கூறப்பட்ட பல்வேறு நற்செய்கைகளின் அஸ்திவாரத்திற்கும், அச்செய்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

கம்யூனிஸம்.

சோஷியலிஸம்.

சமதர்ம அறிக்கை.

(சென்றவாரத் தொடர்ச்சி.)

நவீன தொழில் முறைகளின் பயனாய் ஏற்பட்டபோக்கு வரவு சாதனங்களின் அபிவிருத்தியால் மேற்கண்ட தொழிலாளர்களின் ஒற்றுமையானது விருத்தியடைந்துவந்தது. பல ஊர்களில் உள்ள தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் சம்பந்தம் வைத்துக்கொள்ள வசதிகள் ஏற்பட்டன. இதன் மூலம் பலஊர்களில் ஆங்காங்கு நடைபெற்ற சச்சரவுகள் எல்லாம் ஒன்றாகத்திரண்டு முதலாளி தொழிலாளி என்பதான வகுப்பு சண்டையாக மாறியது.

ஆனால் வகுப்புச்சண்டை என்பது ஒரு அரசியல் போராட்டமேயாகும். மத்தியகாலத்தில் இவ்வித போராட்டங்களுக்கு வேண்டிய ஒற்றுமை அடைவதற்கு நூற்றுக்கணக்கான வருஷங்கள் பிடித்தன. அக்காலத்தில் இருந்த கெடுதியான பாதைகளுக்குப்பதிலாக இப்பொழுது ரயில்வேக்கள் ஏற்பட்டிருப்பதால் அவ்வித ஒற்றுமையானது வெகு சில வருஷங்களிலேயே ஏற்பட்டுவிட்டது. இவ்விதமாக தொழிலாளர்கள் சகலரும் ஒன்று சேர்ந்து ஒரே வகுப்பினராகவும், ஒரே அரசியல் கக்ஷிக்காரராகவும் செய்யும் முயற்சியில் அவர்களுக்குள்ளாகவே ஏற்படும் போட்டிகளால் சிலதடவைகளில் தடைகளும் ஏற்படுகின்றன. ஆனால் இம்மாதிரி தடைகள் நாளடைவில் நீங்கி தொழிலாளர்கள் இயக்கத்தில் ஒற்றுமையும் பலமும் பெருகிக்கொண்டே வருகிறது.

சட்டசபைகளில் முதலாளிகள் கூட்டத்தில் ஒருவர்மீதொருவருக்கு ஏற்பட்டிருக்கும் அபிப்பிராய பேதங்களின் காரணத்தால் தொழிலாளர்களுக்கு நன்மையான சிலசட்டங்களும் நிறைவேற்றப் படுகின்றன.

இந்தக்காரணத்தைக்கொண்டே இங்கிலாந்தில் ஒரு தொழிலாளி தினம் 1க்கு 10 மணிநேரந்தான் வேலை செய்யவேண்டும் என்ற சட்டமேற்பட்டது. ஆதியில் இருந்தே ஏற்பட்டுவந்த மற்ற வகுப்பாருக்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகள் எல்லாம் தொழிலாளர் இயக்கத்திற்கு உதவி செய்தே வந்தன.

முதலில்முதலாளிகள்நிலமீன்தாரர்களை எதிர்த்துசண்டையிட்டுவந்தார்கள் பிறகுமுதலாளிகள்தொழிலபிவிருத்தியைதடைப்படுத்தும்படியான பிரபுக்களுடனும்சண்டைபோடவேண்டிநேர்ந்தது. மேலும் ஒவ்வொரு தேசத்து முதலாளிகளும், தங்களுடைய வியாபாரத்தில் போட்டிபோடும் அன்னிய தேசத்து முதலாளிகளுடனும் போட்டிபோடவேண்டியதாயிற்று. இவ்வித சண்டைகளிலெல்லாம் முதலாளிகள், தொழிலாளர்களின் உதவியை நாடி தொழிலாளிகளை அரசியல் துறையில் ஈடுபடுத்தினார்கள். இதன் பயனாக தொழிலாளர்களுக்கு முதலாளிகளே அரசியல் ஞானம் கொடுத்தவர்களானார்கள். அதாவது தங்களையே எதிர்க்க பயன்படும்படியான ஆயுதத்தை முதலாளிகள் தாங்களாகவே தொழிலாளிகளுக்கு உதவியவர்களானார்கள். மேலும் முதலாளிகள் கூட்டத்தில் இருந்து சிலர் நாம் மேலே கூறியபடி தொழிலாளர் கூட்டத்திற்கு வந்து சேரவேண்டியவர்களாக ஏற்பட்டவர்கள் மூலமும், தொழிலாளர்களுக்கு அரசியல் ஞானம் பெருக இடமேற்பட்டது.

கடைசியாக முதலாளி தொழிலாளி என்பதான வகுப்பு உணர்ச்சி பெருகி வெளிப்படையாக வகுப்புப் போர் ஆரம்பமாகும் தருவாயில் முதலாளி கூட்டத்தில் அறிவுள்ள சிலருக்கு முதலாளி வகுப்பானது தற்கால முறைக்கு ஏற்றதல்லவென்றும், அந்த வகுப்பு (முதலாளி வகுப்பு) நாசமடைந்தேதான் தீருமென்றும், நிச்சயமான நம்பிக்கை ஏற்பட்டு அவர்கள் தாங்களாகவே எதிர்காலத்தில் ஜெயம் பெற்று விளங்கப்போகும் தொழிலாளி வகுப்பில் வந்து தாங்களாகவே கலந்துகொள்ளவேண்டியவர்களானார்கள்.

முற்காலத்தில்பரம்பரைபிரபுக்களாயிருந்தவர்கள் தங்கள்கூட்டம் பிற்போக்கடைந்து க்ஷீணதசையடைந்து வருவதையும்தற்காலநவீனமுறைகளில் ஈடுபட்டிருக்கும் முதலாளிகள்மேலும் மேலும் முற்போக்கடைவதையும் கண்டு தாமாகவே முதலாளிகள் கூட்டத்தில் சேர்ந்து கொண்டதுபோல தற்காலத்தில் முதலாளிகள் தங்கள் கூட்டம் தோல்வி அடைவதும், தங்களை எதிர்க்கும் தொழிலாளிகள் வெற்றியடைவதும், நிச்சயமெனக் கண்டு தாங்களாகவே தொழிலாளிகளுடன் சேர்ந்துகொள்ளுகிறார்கள்.

இப்படி புதிதாக தொழிலாளிகளுடன் சேர்ந்துகொள்ளும் கூட்டத்தில் தக்க அறிவாளிகளும், சரித்திரத்தை ஆராய்ச்சிசெய்து சமூக முன்னேற்றத்தின் தத்துவத்தை கண்டுபிடித்தவர்களும் இருக்கிறார்கள்.

தற்சமயம் முதலாளிகளுக்கு நேருக்கு நேராய் எதிர்த்து நிற்கும் வகுப்பாரில் தொழிலாளிகளேதான் ஒரு சமூகப்புரட்சியை உண்டாக்கி வெற்றி பெற சக்தி உள்ளவர்களாவார்கள். மற்ற வகுப்பார் எல்லாம் நவீன தொழில் முறைகளின் பயனாய் நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து மறைந்து போகவேண்டியவர்களாவார்கள்.

தொழிலாளர்கள் மாத்திரந்தான் நவீன தொழில்முறைகளைக் கைப்பற்றி முன்னேறக்கூடிய சக்தி உள்ளவர்களாவார்கள். சில்லரைப்பணக்காரர்களும், சில்லரைக்கடைக்காரர்களும், சிறு சிறு தொழில்களில் ஈடுபடும் முதலாளிகளும், கொஞ்ச நிலங்களை வைத்துக்கொண்டு பயிரிடும் குடியானவர்களும், தாங்களும் முதலாளிக்கூட்டத்தில் சேர்ந்து இருக்க வேண்டுமென்று எவ்வளவு பாடுபட்டாலும்கூட அவர்கள் நசித்துப்போவார்கள் என்பது நிச்சயமாகும். ஏனெனில் அவர்கள் முற்போக்காளர்கள் அல்ல. அவர்கள் பிற்போக்குக்கே பாடுபடுகின்றவர்களாயிருக்கிறார்கள். உலகத்தில் ஏற்படும் முற்போக்கை தடைப்படுத்தி மனிதவர்க்கத்தை பின்னுக்கு இழுத்துச் செல்வதுதான் அவர்களது நோக்கமாகும். இவர்கள் முற்போக்கடைய வேண்டுமானால் தங்களுடைய நிலையில்லாத முதலாளி ஸ்தானத்தை விட்டுவிட்டு தொழிலாளிகளுடன் கூடிய விரைவில் சேர்ந்துவிடவேண்டும்.

பழையகாலம் முதலே சமூகத்தில் ஒதுக்கி இழிவாய் கருதப்பட்டவர்களும், தனக்கு என ஒரு தொழிலும் இல்லாமல் திரிந்துகொண்டிருப்பவர்களும், சரீரத்தில் வேலை செய்யாமலே ஜீவிக்க வேண்டும் என்கின்றதான ஆசையுடையவர்களுமான ஒரு சோம்பேறிக்கூட்டத்தார் புரட்சிக்காலங்களில் தாங்கள்தொழிலாளிகளுடன் சேர்ந்துகொண்டு மிக அனுதாபம் இருப்பதாக காட்டிக்கொண்டும் இருப்பவர்களாகக் காணப்படுவார்கள். ஆனால் இவர்களுடைய வாழ்க்கையின் நிலையானது அவர்களை மற்றவர்களுடைய உபயோகத்திற்காகவும் பிற்போக்காளர்களுக்கு கூலிக்கு கிடைக்கும் ஆயுதங்களாகவும், (அதாவது சுயநலத்திற்கென்று கூலிக்கு எந்த வேலையும் செய்யும்) ஆட்களாகவே இருக்கவேண்டியதாகும். ஆனால் இந்தக்கூட்டமானது தொழிலவர்கள் கூட்டத்திற்கு ஒருவேளை வாளிகளாகவும் அவர்களைக்காட்டிக் கொடுப்பவர்களாகவும், ஒரு நரையான் போலவும் இருப்பவர்களாவார்கள்.

தொழிலாளிகளுக்கு தற்சமயம் ஏற்பட்டிருக்கும் வாழ்க்கையின் மூலம் சமூகத்தில் பழைய காலத்தில் ஏற்பட்டிருந்த பந்தங்களும், பத்திகளும் இல்லாமல் போய்விட்டன. தொழிலாளிகளுக்கு எப்போதும் சொந்தசொத்தென்பதே கிடையாது. தொழிலாளி தனது பெண்டுபிள்ளைகளுடன் நடந்து கொள்ளும் மாதிரிகளுக்கும் முதலாளிகள் தங்கள் பெண்டுபிள்ளைகளுடன் நடந்து கொள்ளும் மாதிரிக்கும் கொஞ்சமும் சம்பந்தமே கிடையாது. தொழிலாளி முதலாளியிடம் அடிமைப்பட்டிருக்கும் நிலைமையானது ஒரேமாதிரியாகவே அதாவது இங்கிலாந்திலிருப்பதுபோலவே பிரான்சிலும், அமெரிக்காவிலும், ஜர்மனியிலுமிருப்பதால் தொழிலாளியிடம் தனித்தனிதேசம் தங்கள் தங்கள் தேசம் என்பதான தேசிய உணர்ச்சியோ, தேச பக்தியோ இருப்பதற்குஇடமில்லாமல் போய்விட்டது சட்டம்,ஒழுக்கம், மதம், தேசம்என்பவைகள் எல்லாம் முதலாளிகளினால் அவர்கள் சௌகரியத்திற்கு ஏற்றபடி ஏற்படுத்தப்பட்ட எண்ணங்களேயாகும். இந்தஒவ்வொருஎண்ணங்களுக்கும்முக்கியகாரணங்களாய்முதலாளிகளின்சுயநலங்களேதான்பின்னால்ஒளிந்துகொண்டிருக்கின்றன.

இதுபோலவேதான் ஏற்கனவே ஆதிக்கம் பெற்றிருந்த வகுப்புகள் எல்லாம் தாங்கள் மற்ற வகுப்பாரை அடக்கி ஆள்வதற்கு என்ன என்ன சௌகரியங்கள் வேண்டுமோ அவற்றையெல்லாம் சமூக அமைப்பின் பொது சட்டங்களாகவே நிர்மாணித்து வைத்திருந்தார்கள். அந்தப்படி ஏற்பட்டிருந்த அமைப்பில் தொழிலாளிகளாய் உள்ளவர்கள் மற்ற வகுப்பாருக்கு அடிமைப்பட்டிருப்பதன் மூலமாகத்தான் ஜீவிக்க முடிந்தது.

இந்தப்படி தொழிலாளிகள் அடிமைப் பட்டிருப்பதன் மூலமேதான் அந்த சமூகமும் ஜீவித்திருக்க முடிந்தது. ஆகையால் தொழிலாளிகளுக்கு விடுதலை கிடைக்கவேண்டுமானால் தங்களுடைய ஜீவன மார்க்கத்தையே மாற்றிக்கொள்ளவேண்டும். அதன் மூலம் மற்றவகுப்பாருடைய ஜீவன மார்க்கத்தையும், பொதுவாக பழைய ஏற்பாடுகள் அனைத்தையும் மாற்றித் தீரவேண்டும். தொழிலாளிகள் தங்களுக்கென பிரத்தியேகமான உரிமை எதுவும் தற்சமயம் இல்லாத படியால் சுயநலத்தை முன்னிட்டு எதையும் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்கின்ற அவசியம் அவர்களுக்கு இல்லை. ஆனால் மற்ற வகுப்பாருடைய சுயநலத்தை உத்தேசித்து ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கும் சொத்துக்களையும், உரிமைகளையும், தகர்த்தெறிய வேண்டிய கடமைகளை தொழிலாளிகள் மேற்கொள்ளவேண்டும்.

பழைய காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த இயக்கங்கள் எல்லாம் சிறுபான்மையாய் உள்ள வகுப்பாரின் நன்மைக்காகவே ஏற்பட்டன. ஆனால் தற்காலம் தொழிலாளர்கள் சுய அறிவுடனும், சுயேட்சையுடனும் ஏற்படுத்தும் இயக்கமானது ஏராளமான பெரும்பான்மை மக்களின் நன்மைக்காகவே ஏற்படுத்தப்படுவதாகும்.

சமூக அமைப்பில் தொழிலாளர்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

பண்டிகைகளால் பயன் என்ன?

(சாமி சிதம்பரனார்.)

இந்தியர்களின் செல்வத்தைச் சுரண்டி வருவன பண்டிகைகள் என்பதை நாம் கூற வேண்டியதில்லை. பண்டிகைகள் எல்லாம் மதத்தின் பேரால் ஏற்பட்டு மக்களைத் தொல்லைப் படுத்துகின்றன என்பதற்காகவே, மதங்களையே அடியோடு ஒழிக்க வேண்டுமென்று கூறுகின்றோம்; பிரசாரமும் செய்து கொண்டிருக்கின்றோம்.

மதமும், பண்டிகைகளும் ஒழிய வேண்டுமென்பதற்கு நாம் கூறும் காரணம், பணச் செலவை ஒழிக்கவேண்டும்என்ற ஒன்று மட்டும் அல்ல. எல்லா மக்களுடைய மூடநம்பிக்கையையும் போக்கவேண்டும் என்னும் காரணமும் ஆகும்.

சமீபத்தில் வரப்போகும் தீபாவளிப் பண்டிகையை எடுத்துக் கொள்ளுங்கள். இதனால் மக்கள் படும் அல்லலையும், மக்கள் மனத்திலிருக்கும் மூடநம்பிக்கை இன்னும் உறுதிப்படும் நிலையையும் யார் மறுக்க முடியும்?

தீபாவளிப் பண்டிகை தோன்றுவதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்தால் இவ்வுண்மை விளங்கும்.

“பூமி தேவிக்கும், மகாவிஷ்ணுவிற்கும், நரகாசுரன் என்னும் ஒரு மகன் பிறந்தானாம். அவன் மிகவும் பலவானாகித் தேவர்களை மிகவும் துன்பப் படுத்திக்கொண்டிருந்தானாம். அதனால் தேவர்கள் துன்பம் சகிக்க முடியாமல், மகா விஷ்ணுவினிடம் போய் முறையிட்டார்களாம். மகா விஷ்ணு, அந்த நரகாசுரனைக் கொன்று, தேவர்களின் துன்பத்தை நீக்குவதாகக் கூறினாராம். அப்பொழுது பூமி தேவி “நரகாசுரனைக் கொல்லும்போது தன்னையும் உடன் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்” என்றுவேண்டிக் கொண்டாளாம். அதன்படி மகாவிஷ்ணு கிருஷ்ணவதாரம் எடுத்த பொழுது, தானும், பூமிதேவியின் அம்சமாகிய தனது மனைவி சத்தியபாமையும் நரகாசுரன் இருக்கும் இடம் போய், சத்தியபாமையின் எதிரிலேயே நரகாசுரனைக் கிருஷ்ணன் கொன்றானாம். நரகாசுரன் இறக்கும்பொழுது, தான் இறந்தநாளை உலகினர் கொண்டாட வேண்டுமென்று வேண்டிக் கொண்டானாம். அப்படியே கிருஷ்ணனும் வரங் கொடுத்தானாம்” இதுதான் தீபாவளிப் பண்டிகைக்குக் கூறப்பட்டிருக்கும் புராணக்கதை. பெரும்பாலும் இந்துக்கள் இக்கதையை நம்பியே தீபாவளியைக் கொண்டாடுகின்றனர். நரகாசுரன் இறந்தநாளைக்கொண்டாடும் காரணத்திற்காகவே விடியற்காலத்தில் எண்ணெய் தேய்த்து முழுகுகின்றனர்; வாணங்களைக் கொளுத்துகின்றனர். எண்ணெய்ப் பலகாரங்களைத் தின்கின்றனர். இவை மாத்திரமா? பலகாரம் சாப்பிடுவதற்கு முன், பலகாரங்களை சாமிக்குப் படைக்கின்றனர். நரகாசுரனைக் கொன்ற நாளானதால் தான், தீபாவளிக்கு நரக சதுர்த்தி என்ற பெயரும் வழங்குகின்றது

ஆகவே இந்தக் கதையை ஒப்புக் கொண்டு தீபாவளிப் பண்டிகையை நடத்துகின்றவர்கள், கடவுள் அவதாரம், தேவர்கள் மோட்சம் நரகம் முதலியவைகளை ஒப்புக் கொண்டவர்களாகின்றனர். ஆகையால் பகுத்தறிவுடையவர்கள், தீபாவளிக் கதையை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

முதலில் பூமி ஒரு பெண்ணா? அதற்கும் மகாவிஷ்ணுவுக்கும் எப்படிப் பிள்ளை பிறந்திருக்க முடியும்? என்பதை மட்டும் யோசித்துப் பார்த்தாலே கதை பொய்யென்பது நன்றாய்த்தெரியும். மற்ற கதைகளைப் பற்றி நீங்களே யோசித்துப்பாருங்கள்.

இப்பொழுது பண்டிதர்களிற் பலரும், ஆஸ்திகர்களிற் பலரும் புராணங்கள் பொய் என்பதை ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால் அக்கதைகளுக்கு தத்துவார்த்தங்கள் கூறி ஒருவாறு பண்டிகைகளை நிலை நிறுத்தப் பார்க்கின்றனர். ஆனால் தீபாவளிப் பண்டிகைக்கு என்ன தத்துவார்த்தம் கூறுவார்களோதெரியாது.

தீபாவளிப்பண்டிகை கொண்டாடுவதனால் ஏதாவது சுகாதார முறை இருக்கிறதா என்பதையாவது ஆலோசியுங்கள். நல்ல மழை பொழியும் ஐப்பசி மாதத்தில் விடியற்காலையில், எண்ணெய் தேய்த்து ஸ்நானம் பண்ணி விட்டு எண்ணெய்ப் பலகாரங்களை உண்பதால் மக்களுக்குக் கெடுதியா? நன்மையா?

தீபாவளி யன்று மறுநாள் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பாருங்கள். எவ்வளவு பேர் சுரத்திற்கு மருந்து வாங்கவும், தலைவலிக்கு மருந்து வாங்கவும், வயிற்றுவலிக்கு மருந்து வாங்கவும், வயிற்றுபோக்குக்கு மருந்து வாங்கவும், அஜீரணத்துக்கு மருந்து வாங்கவும் வருகிறார்களென்று பாருங்கள். இதிலிருந்து தீபாவளிப் பண்டிகை மக்களுக்குச் செய்யும் நன்மை வெட்ட வெளிச்சமாகுமன்றோ?

தீபாவளிப் பண்டிகையின் பேரால் பிச்சை யெடுக்க வரும் பிச்சைக்காரர்கள்எவ்வளவு பேர்? தீபாவளிப் பண்டிகை வந்து விட்டதே என்று, அதற்காகப் புது வேஷ்டி வாங்கவும், பலகாரங்கள் செய்யவும், வெடிகள் வாங்கவும் பரிதவிக்கும் ஏழைகள் எவ்வளவு பேர்? இவற்றிற்காகப் பணமில்லாமல், கடன் வாங்கிச் செலவு செய்து விட்டுப் பிறகு அக்கடனைக் கொடுக்க வழியின்றித்தவிக்கும் தரித்திரர்கள் எவ்வளவுபேர்?

தீபாவளிப் பண்டிகையின் பெயரைச் சொல்லி, ஏழைமக்களை மூடநம்பிக்கையில், ஆழ்த்துகின்றகதர்ப்பிரசாரம் செய்யும் காங்கிரஸ்காரர்கள் தொல்லை வேறு. தேச மக்களை முன்னேற்ற மடையச் செய்வதாகக்கூறிக் கொள்ளும் காங்கிரஸ்காரர்கள் தீபாவளிப் பண்டிகையைப் பற்றியும், அதற்குக் கதர்வாங்க வேண்டியதைப் பற்றியும் பிரசாரம் செய்வது இன்னும் மக்களை அறியாமையில் அமிழ்த்தி வைப்பது அல்லவா?

இது போகட்டும், ஒன்றுக்கும் பயனில்லாமல் வாணங்களை வாங்கிச் சுடுவதில் நமது நாட்டுப் பணம் எவ்வளவு தொலைகிறது? அந்நிய நாட்டிற்கு நமது பொருள் போகிறது ஆகையால் கதர் வாங்கவேண்டுமென்று சொல்லுகின்றவர்கள் ஏன்.வெடிகள் வாங்குவதைப் பற்றி ஒன்றும் சொல்லுவதில்லை? ஏன் வெடிகள் வாங்குவதைத் தடுப்பதற்காக மறியல் செய்வதில்லை?

நமது நாட்டில் இப்பொழுது இருக்கும் பண்டிகைகள் போதா என்று இன்னும், காந்தி ஜெயந்திப் பண்டிகை, திலகர் ஜெயந்திப் பண்டிகை, தரித்திர நாராயணப் பண்டிகை (ராட்டினம்) தேசியக் கொடிப் பண்டிகை,பாரதமாதா வணக்கப்பண்டிகை, டாண்டி சத்தியாக்கிரகப் பண்டிகை போன்ற இன்னும் அநேக பண்டிகைகளை ஏற்படுத்தி ஏழைகளிடம் பொருள் வசூல் செய்யும் தேசாபிமானிகள் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடாமல் இருப்பார்களா? இருக்கும் பண்டிகைகள் போதா என்று புதுப்பண்டிகைகளை ஏற்படுத்துகிறவர்கள் பழம் பண்டிகைகளை எப்படி மறப்பார்கள்?

அதிலும் தீபாவளிப் பண்டிகையை மறந்தால் கதர் விற்பனைக்கு வழியேது?

எந்த வகையிலும் பண்டிகைகளைக் கொண்டாடுவது தெய்வீகத்தைக் கற்பிப்பதாகவே இருக்கிறதே யொழிய வேறு,அறிவையோ-அல்லது பயன்படத்தக்க ஒருகொள்கையையோ போதிப்பதாக இல்லை என்பதை இதுவரையிலும் கூறியவற்றால் உணரலாம்.

இந்த தீபாவளியைப் பற்றி மற்றைய தேசீயப் பத்திரிகைகள் எல்லாம் புகழ்ந்து எழுதும் என்பதை நாம் அறிவோம். தீபாவளி ஒரு புண்ணிய தினமென்றும், அதிலும், தேவர்களின் கஷ்டத்தை நீக்கி அவர்களுக்கு விடுதலை அளித்த நாளென்றும், ஆகையால் அந்த விடுதலைநாளைக் கொண்டாடுவதன் மூலம் மக்களுக்கு விடுதலை உணர்ச்சி உண்டாகலாமென்றும், மதாபிமான தேசீய வாதிகள் கூறுவார்கள். மதாபிமான தேசீயப் பத்திரிகைகள் எழுதும். அவற்றை யெல்லாம் கொஞ்சமும் பொருட்படுத்த வேண்டாம்.

இன்னுஞ் சிலர்’ எப்பொழுதும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஜனங்கள், பண்டிகை நாளை முன்னிட்டாவது, வயிறார உண்டு உடுத்திக் களித்திருக்கப் பண்டிகை உதவிசெய்கிறது. ஆகையால் அதைக்கொண்டாடுவதில் என்ன குற்றமிருக்கிறது? என்று கேட்கலாம். ஆம்! மக்கள் உண்டு உடுத்திச் சந்தோஷமாக இருக்க வேண்டியது என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இதற்கென்று ஒரு நாள் இப்படியிருக்கவேண்டுமென்றால் மற்ற நாட்களில் கஷ்டப்படவேண்டுமென்பது அர்த்தமல்லவா? நாம் கூறுவது எப்பொழுதும் சந்தோ

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க

வட்டமேஜை நடவடிக்கைகள்.

சிறுபான்மைக் கமிட்டியின் சென்ற கூட்டத்திற்குப் பிறகு ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், இந்திய கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்டோர், முதலியவர்களின் பிரதிநிதிகள் கூடித் தமது கோரிக்கைகளைப் பற்றிய ஒரு பொது ஏற்பாட்டைச் செய்ய ஆலோசனை புரிந்துவந்திருக்கின்றனர்.

தனித்தொகுதிகள் வேண்டும்.

இப்போது உள்ள சட்டசபைகள் முதலியனவற்றில் பிரதிநிதித்துவம் வகித்திருக்கும் கட்சிகள் இனிமேல் தனித்தொகுதிகளில் உதவிகொண்டே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும், அந்தக் கட்சிகள் தாமாகவே அவற்றை வேண்டாமென்று கைவிடும் வரையில் அந்த முறையே அனுஷ்டிக்கப்பட வேண்டும், என்றும் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

சிறுபான்மை வகுப்பினர்களின், அதாவது தீண்டப்படாதார், ஐரோப்பியர், ஆங்கிலோ-இந்தியர், இந்திய கிறிஸ்துவர்களின் பிரதிநிதிகளடங்கிய சிறுபான்மை கமிட்டியானது, அவர்கள் கடைசியாக கூடியகாலம் முதல் கொண்டு நாளது வரையிலும் எல்லாவித மக்களுக்கும் திருப்தியையளிக்கத்தக்க விதத்தில் தங்களுடைய கோரிக்கைகளை பொதுவாக எப்படி நிறைவேற்றிக் கொள்ள முடியுமென்பதற் குறித்தான மார்க்கங்களைக் குறித்தே ஆராய்ச்சி செய்து கொண்டு வருகின்றார்கள்.

ஏதாவதொரு சமூகத்திற்கோ, அல்லது ஒரு ஸ்தாபனத்திற்கோ எந்த சட்ட சபையிலாவது பிரதிநிதித்துவம் தற்காலமளிக்கப் பட்டிருக்குமானால், அவர்கள் இனிமேல் தங்களுடைய பிரதிநிதிகளை தனித்தொகுதி தேர்தலின் மூலமே தேர்ந்தெடுக்க வேண்டுமெனவும், அக்குறிப்பிட்ட சமூகமோ அல்லது ஸ்தாபனமோ தாங்களே அம்முறையை வேண்டாமென கூறி, விட்டு விடும் வரையிலும் இம்முறையையே தான் அனுஷ்டித்துக் கொண்டு வர வேண்டுமெனவும் கேட்டுக் கொள்வதென உறுதி செய்து, இத்தீர்மானமே இப்பொழுது எல்லோராலும் அங்கீகரிக்கப் பட்டு விட்டதாகவும் தெரிய வருகின்றது.

"தீண்டாதா"ருக்குத் தனித் தொகுதி அளிக்கப்படுவதை திரு. காந்தி அவர்கள் ஆட்சேபித்துக் கொண்டு வருவதற்கு தம்முடைய காரணத்தையும், நிலைமையையும் விளக்கி, ஓர் இந்திய மாணவனுக்கு பதிலளிக்கும் போது, தனித்தொகுதி தேர்தல் முறையானது உயர்ஜாதி இந்துக்களுக்கும், "தீண்டாதா"ருக்கும் விரோதத்தையும், பிணக்கையும் தான் வளர்த்துக் கொண்டு வருமெனவும், மேலும் உயர்ஜாதி இந்துக்களால் தீண்டப் படாதாரின் ஜீவிய வாழ்க்கையானது இன்னும் அதிகமாகவே பாதிக்கப் படக்கூடுமெனவும் கூறியிருக்கின்றார்.

காந்தி மீதும் காங்கிரஸ் மீதும் நம்பிக்கையில்லை.

பம்பாய் தாராவியில் 21-10-31 இரவு 9-மணிக்கு தொழிலாளர் சங்க ஹாலில் ஆதிதிராவிட மகாஜன சபையின் விசேஷ கூட்டம் திரு. எஸ். கே. கொம்பமுத்து நாயக் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது 700 பேர்கள் வரை விஜயம் செய்திருந்தனர். காங்கிரசும், காந்தியும் ஆதிதிராவிடர்களுக்கு செய்து வரும் சூட்சியையும் தனிப்பிரதிநிதித்துவம் அவசியம் என்பதைப் பற்றியும் பல அன்பர்கள் விரிவாக சொற்பொழியாற்றினார்கள். பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்:—

1. திரு. காந்தி அவர்களும், மாளவியா அவர்களும் முஸ்லீம்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனிப்பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொண்டு தீண்டப் படாதவர்களுக்கு மாத்திரம் தனிப் பிரதிநிதித்துவம் கூடாதென்று ஆட்சேபித்ததை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது.

2. குடி அரசு ஆசிரியரும் நமது மக்களுக்காக பாடுபடுபவருமாகிய திரு ஈ. வெ. இராமசாமி அவர்கள் தேக சௌக்கியமில்லாததை முன்னிட்டு இக்கூட்டம் வருந்துவதுடன் அவர் கூடிய சீக்கிரம் குணமடைந்து பூர்ண சுகத்துடன் இருக்கவேண்டுமென்று இக்கூட்டம் ஆசைப்படுகின்றது.

ஆதிதிராவிடர் கூட்டம்.

நான்குநேரி தாலூகா ஆதிதிராவிட மகாஜன சபையின் மூன்று வது ஆண்டு பதினேழாவது மாதாந்திரக் கூட்டம் பம்பாய் தாராவி தொழிலாளர் சங்க ஹாலில் திரு. மாயாண்டியா பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வட்டமேஜை மகாநாட்டில் திரு. காந்தி அவர்கள் நடந்து கொண்ட மாதிரி என்பது பற்றியும், காங்கிரஸ்காரர் சூட்சி என்பது பற்றியும் இன்னும் பல அரிய விஷயங்களைப்பற்றியும் பல அன்பர்கள் உருக்கமாகவும், தெளிவாகவும் பேசியபின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்கள்:—

1. லண்டன் வட்டமேஜை மகாநாட்டில் திரு. காந்தி அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் வேண்டுவதில்லை என்றும் காங்கிரசே அவர்களுக்கு வேண்டியதை சாதித்துவிடுமென்றும் நமது பிரதிநிதிகளாகிய டாக்டர் அம்பெட்கார், ஆர். சீனிவாசம் ஆகியவர்களை நம் பிரதிநிதிகள் அல்லவென்று கூறிய செய்கைகளை இக்கூட்டம் கண்டிக்கிறது.

2. நமது மக்களின் நன்மைக்காக பாடுபடுபவரும் 'குடி அரசு' ஆசிரியருமான திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் உடல் நலமின்றி இருப்பதை அறிந்து வருந்துவதுடன், அவர் கூடியசீக்கிரம் பூரண சுகமடையவேண்டுமென்றும் ஆசைப்படுகிறது.

ஆதிதிராவிடர் கூட்டம்.

தென்னிந்திய ஆதிதிராவிட வைதீக மகாஜன சமாஜத்தின் பொதுகூட்டம் பலமக்கோட்டையில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு ஆதிதிராவிட இந்து கிறிஸ்தவர்கள என்ற மதபேதமின்றி ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர். கூட்டத்திற்கு சமாஜத்தின் தலைவர் தலைமை வகித்ததும் சமாஜத்தின் கௌரவ காரியதரிசி கூட்டம் கூட்டப்பட்டதின் முக்கிய நோக்கத்தைத்தெரிவித்தபோது லண்டனில் நடக்கும் வட்டமேஜை மகாநாட்டிற்கு போயிருக்கும் பிரதிநிதிகளுள் நடக்கும் சம்பாஷணைகளில் திரு காந்தி ஆதிதிராவிடர்களுக்கு தன் உயிர் போமளவும் தனித்தொகுதி கொடுப்பதை மறுத்தே தீருவேன் என்று பேசியிருப்பதை பலமாக, கண்டித்து அவர் நயவஞ்சக சூட்சியை எடுத்துக்காட்டிப் பேசினார். பின் பல அன்பர்கள் திரு. காந்தியின் ஏமாற்றும்தன்மையைகண்டித்து உருக்கமாகவும் அழகாகவும் பேசியபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

டாக்டர் அம்பேத்கார்மீது நம்பிக்கை யுண்டு.

நடந்த 25—10—31ல் கோலார் தங்கவயல் ஊர் காம்டிராவலர்ஸ் பங்களாவிற்கருகாமையிலுள்ள மைதானத்தில் தமிழன் ஆசிரியர் உயர்திரு ஜி. அப்பாதுரையார் அவைத்தலைமையின்கீழ் தனித்தொகுதியே தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கு அவசியமென்றும் காந்தியின் மீதும் நம்பிக்கை சிறிதளவேனுமில்லை யென்றும் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் மீது நம்பிக்கையுண்டு என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு லண்டன் வட்டமேஜை மகாநாட்டிக்குத் தந்திமடிக்க கூட்டம் ஆமோதிக்கப்பட்டு தலைவரால் டாக்டர் அம்பேத்காருக்கும் பிரதம மந்திரி ராம்சேமெக்டனல்ட் அவர்களுக்கும் தந்தி கொடுக்கப்பட்டன என ஒரு நிருபர் எழுதுகிறார்.

காண்பூர் ஒடுக்கப் பட்டவர்களின் கூட்டம்.

திலகர் மெமோரியல் கட்டடத்தில் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர்களின் பெரிய கூட்ட மொன்று 24-10-31 ந் தேதி யன்று கூடி, திரு. அம்பட்கார் அவர்களிடத்தில் தாங்கள் நம்பிக்கையுடையவர்களா யிருப்பதாகவும், அவரே தங்களுடைய உண்மையான பிரதிநிதி யெனவும், திரு. காந்தி அவர்கள் தங்களுடைய பிரதிநிதியல்ல வென்றும், அவரிடத்தில் தங்களுக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை யெனவுமாகிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

அம்ரோதி ஒடுக்கப்பட்டவர்களின் கூட்டம்.

ஒடுக்கப் பட்ட வகுப்பினர்களின் கூட்டமொன்று 24-10-31ல் கூடி திரு. அம்பட்கார் அவர்களே ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களின் உண்மையான பிரதிநிதி யெனவும் காங்கிரசிடத்தில் தங்களுக்கு நம்பிக்கையில்லை யெனவும் காங்கிரசுக்காரர்கள் தங்களுடைய பிரதிநிதிகள் அல்ல எனவுமாகிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டு, இத்தீர்மானங்கள் யாவும், பிரிட்டிஷ் முதன் மந்திரிக்கும், சர். சாமுவேல் ஹோருக்கும், டாக்டர் அம்பட்கார் அவர்களுக்கும் தந்தி மூலம் அறிவிக்கப் பட்டது.

திருமணம்.

திங்களூர் அப்பச்சிமார் மடாதிபதி திரு. எம. ஏ. ஆண்டமுத்துக்கவுண்டரவர்களின் சகோதரர் திரு. காளியண்ணனுக்கும்; புளியம்பட்டி திரு. டி. வேலப்ப கவுண்டர் புதல்வி திருமதி வள்ளியம்மைக்கும் மணமகள் இல்லமாகிய புளியம்பட்டியில் 2-11-31ல் திருமணம் நடைபெறுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சுயமரியாதைத் தலைவர்கள்.

நமது இயக்கத் தந்தையாகிய பெரியார் உயர் திரு. ஈ. வெ. ரா. இயக்கத் தலைவர் உயர்திரு. W. P. A. சௌந்திர பாண்டியன் இவர்களின் போட்டோ பேட்ஜ்கள் (Photo Lockets) 1'' இஞ்சி $1\frac{1}{4}$'' இஞ்சி ரவுண்டு சைஸ்களிலும உயர் திரு. ராமசாமிப் பெரியார், அவர்களின் டேபிள் போட்டோ (Photo Medallion oval size with Easel) 5'' × $3\frac{5}{8}$'' சைஸில் ஒவ்வொரு சுயமரியாதை இயக்க அன்பர்களின் டேபிள்களின் பேரிலும் அமர்ந்து உற்சாகத்தை ஊட்டும் முறையில் தயாராகி வந்து விட்டது. விலை விபரங்களுக்கு எழுதவும்.

அ. ப. அர்த்தனாரிப்பிரதர், ஜலகண்டபுரம். (சேலம் ஜில்லா.)

அசல் இஸ்லாமா? கலப்பு இஸ்லாமா?

30-10-31-ந் தேதி தாருல் இஸ்லாம் தலையங்கசுருக்கம்

தென் இந்திய முஸ்லீம்களுட் பெரும்பாலோர் தங்கள் மதம் இதுதன்மைத்தாயதென இன்னமும் இதுநாள்வரை அறிந்து கொள்ளாது, சர்வ சாமான்யர்களாகவே இருந்து வருகின்றார்கள் என்று நாம் அன்றுமுதல் இன்றுவரை இயம்பி வருவதை ஆதரிப்பது போன்று ஆங்காங்கு இஸ்லாத்தின் பெயரால் இஸ்லாமல்லாத பல அநாகரிகச் செயல்கள் இஸ்லாமியர்களாலேயே செய்யப்பட்டு வருகின்றன. சமீபத்தில் சென்னை நகரிலிருந்து மற்றுமொரு புதுமையான—இஸ்லாமல்லாத—வழக்கம் ஓரறிக்கையின் மூலம் வெளியாயிருக்கின்றது. அஃதாவது:—

'இதனால் நம் முஸ்லிம் கனவான்களுக்குத் தெரியப்படுத்துவது யாதெனில் நான் யாசித்து நாகூர் ஆண்டகையின் தர்கா ஷரீபுக்குப் போவதாக பிரார்த்தனை செய்திருக்கிறபடியால் தாங்கள் தங்களால் இயன்ற பொருள் ஏதேனும் கொடுத்து உதவி புரிவீர்கள் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு, முஹம்மத் யூசுப்.'

இந்த அறிக்கையைக் கண்ணுற்றதும் நமக்குப் பிறிதொரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது; ஹிந்துக்களுள் பெரும்பாலோர்—வைஷ்ணவ சம்பிரதாயப் பற்றுடையோர்—திருப்பதிக்கு யாத்திரையாகச் சென்று முடி கொடுப்பதாக நேர்ச்சை செய்து கொள்வது அவர்களுள்ளிருக்கும் சர்வ சாதாரணமான ஒரு வழக்கமாகும். அங்ஙனம் நேர்ச்சை செய்து கொண்டபின் மஞ்சள் ஆடை அணிந்து 'ஊர்கோலமாக' வந்து உண்டியல்களின் மூலம் பிச்சை எடுப்பார்கள். அப்பிச்சைப்பணத்தைக்கொண்டு போய்சன்னதி உண்டியலில் சேர்ப்பார்கள். சிலர் வயிற்றுண்டியிலும் சேர்த்து விடுவதுண்டு. இப்பிரார்த்தனையைப்போன்றே குழந்தைகளைக்கோயில் வாயில்களில் கிடத்திவிட்டுப் பிச்சை எடுப்பர், இப்பிச்சை எடுக்கும் பெண்மணிகள்—பெரும்பாலும் ஸ்திரீகள் தாம் இவ்வாறு செய்வர்—ஆடையாபரணாலங்கிருதராய் வாசனைத்திரவியங்களுமணிந்து அலங்கரிக்கப்பட்ட தங்கள் குழந்தைகளைக் கீழே தரையில் விரித்த துணியின் மீது கிடத்திப் பிச்சை கேட்பர். அப்பிச்சைப் பணமும் கோயில் உண்டியலுக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறதாம். இச்செயல்கள் ஹிந்து மார்க்கத்தினரால் தொன்று தொட்டனுசரிக்கப்பட்டு வருவனவாகும். ஆனால், இஸ்லாத்தில் இதுபோன்று பிச்சை எடுத்து நாகூருக்குப் போவதாக நேர்ச்சை செய்துகொண்டு அதைத் துண்டுப் பிரசுரத்தின் மூலம் வெளிப்படுத்தியவரின் செயலை நோக்கநோக்க நமக்கு விடா நகைப்பே உண்டாகின்றது. இஸ்லாத்தின்........ஹஜ் யாத்திரையையே ஆண்டவன் இயலாதவர்கள் மீது கடமையாக்கினானில்லை......

அவ்வாறிருக்க, ஒரு நாகூருக்குமார்க்க ஆதாரமே சற்றுமில்லாத ஒருசெயலாற்றுவான் வேண்டிப் புதிய மாதிரி பிரார்த்தனை யொன்றை மார்க்க முரணாக ஒரு முஸ்லிம் செய்வாராயின் அச்செயலைக் கண்டு கற்றறிந்தவர்களெனப்படும் மௌல்விகளும், உலமாக்களும், ஆலிம்களும் என்ன செய்யவேண்டும்? இத்தகைய மார்க்க முரணான—முற்றும் ஆகாத—செயல்கள் நடந்தேறிக் கொண்டிருக்க விடப்படுமாயின், உண்மை இஸ்லாம் இந்தியாவில் இல்லாமலே யொழிந்துவிடும் என்று நாம் கூசாது கூறுவோம். "இஸ்லாத்தின் மாண்பு, உயர்வு, ஏக வணக்கப் பெருமை, அகில உலக சகோதரத்துவம், சமரஸக்கொள்கை, சத்திய சன்மார்க்கம் மற்றெம் மதத்தில்மிளிர்கின்றன?" என்றுவீரம்பேசி வெளியில் வரும் மார்க்க அறிஞர்கள் அவை யனைத்துக்கும் முரணாக உள்ள இச் செய்கையினால் அவசியம் முட்டுக்கட்டை யிடப்படுவர். ....

அப்படியிருக்க, இத்தகைய புல்லுருவிகள் சில சேர்ந்து சந்தனக்குடம் வைப்பதும், கூடெடுப்பதும், தப்படிப்பதும், கொடியேற்றுவதும், கந்தூரி ஆக்குவதும், 10 நாள் உட்சவங்கள் செய்வதும், பேயாடுவதும், பிசாசோட்டுவதும், பீர்வைப்பதும், முத்துப் பல்லக் கெடுப்பதும் ரதமிழுப்பதும், சதுர்க்கச்சேரிகள் வைப்பதும், பிச்சையெடுத்து நாகூருக்கோ, முத்துப் பேட்டைக்கோ போவதும் இஸ்லாத்தின் மேற்கண்ட பெருமைகளை எவ்வெவ்வாறெல்லாம் இழிவாக்கிவருகின்றன வென்பதனை அறிந்தனரா? மார்க்க அறிஞர்கள் அறிந்து கொள்க.

ஹிந்துக்களுள் ஒரு சாரார் "ஹிந்துக்கள் செய்யும் உத்ஸவங்கள், தேவதாசி நடனங்கள், சங்கீதக் கச்சேரிகள், தேரிழுப்புகள், திருப்பதியாத்திரைகள் முதலியன மிகக் கேவலமானவை யென்றும் பாமரர்களுக்காகவே அவை செய்யப் படுகின்றன" வென்றும் கூறுகின்றனர். ஒரு சாரார் இவைகளில் பற்றின்றி இவைகளைக் கையாண்டு வரும் மக்களைச் சீர்திருத்தும் நோக்கங் கொண்டு, பற்பல சமாஜங்களும் இயக்கங்களும் கண்டு, சமூகத் தொண்டாற்றி வருகின்றனர்......

ஆனால் முஸ்லீம்கள் பின்பற்றும் இஸ்லாம் இத்தகையதாய் இல்லை. இஃது அறட் பெருஞ்ஜோதி, தனிப் பெருங் கருணையங்கடலாம் அல்லாஹுத்த ஆலா ஒருவனையே யன்றி வேறெவரையும் அவனுக்கு இணை வைத்து வணங்க விரும்பவில்லை; அவ்வாறிணை வைத்தலைப் பெரும் பாவமாகவும் கருதுகின்றது...எந்த விதமான உத்ஸவங்களோ, ஊர்வலங்களோ, சங்கீதக்கச்சேரிகளோ, சதுர்க்கச்சேரிகளோ செய்ய வேண்டுவது அவசியமில்லை; செய்யவே கூடாது. ஆனால் ஒரு சிலர் இவ்வாறு செய்து கொண்டு போவதை மார்க்க அறிஞர்கள் விட்டுக் கொண்டே போவதால் ஒரு நாளைக்கு இஸ்லாம் மதம், மூடப் பழக்க வழக்கங்களிலும், பல தெய்வ வணக்கத்திலும், அனுச்சார கொள்கைகளிலும், அவமதிப்பான செய்கைகளிலும், ஹிந்து மதத்தைத் தோற்கச் செய்துவிடும் என்றே நாம் அஞ்சுகின்றோம். இதில் எள்ளத்துணையும் எவரும் ஐயம் கொள்ளவே இடமில்லை......

எனவே வீரம் மிக்க முஸ்லீம் இளைஞர்காள்! சுயநலப்பற்றுமிகுந்து பணம் ஒன்றையே நாடி மார்க்க உயர்வைப் பலர் மறந்து வருங்கால் நீங்களும் சும்மா இருந்து கொண்டிருப்பதில் பயனில்லை. இஸ்லாத்தில் "கீர்த்தி வாய்ந்த "இந்து மதக் கொள்கைகள்" புகாதிருக்க வழி தேடுவது ஒவ்வொரு முஸ்லீம் இளைஞனின் தவிர்க்க மாட்டாக் கடமையாகும்.... ஆகவே முஸ்லீம்காள்! முனைந்து வாருங்கள்! இனி நம் மௌலானாக்களையும் மௌல்விகளையும் நம்பிப் பிரயோஜனமில்லை! இல்லை! முக்காலுமில்லை!

கோயிலும் சாதியும்.

வண்ணார்கூட தீண்டாதாரா?

29-10-31ௗ 'லோகோபகாரி'' தலையங்கச் சுருக்கம்.

மதுரை நகரசபையில் அங்கத்தினராயிருந்தவரும் ரஜகுலோத்தமர் [ஏகாலியர்-வண்ணார்] சங்கத்தின் தலைவருமான திருவாளர் சி. துரைசாமி என்பவர் நவராத்திரி திருவிழா கடைசி நாளன்று மீனாட்சி சுந்தரேசர் கோயில் கிளிக்கூட்டு மண்டபத்தினருகே செல்லும்பொழுது குருக்கள்மார் அவரைத்தடுத்து அவர் கோவிலுக்குள் சென்றதால் கோயில் தீட்டுப்பட்டுவிட்டதென்று அவரிடம் பத்தரை ரூபாய் சம்ப்ரோக்ஷணை செலவுக்காக வாங்கிவிட்டார்களென்று அறிகிறோம். இதைப்பற்றி துரைசாமி வாதாடியும் பயன் இல்லையாம். இதனையொட்டி வண்ணார்கள் சங்கம் கூடி பிராமணர்களுக்கு இனிச் சலவை செய்வதில்லை யென்று முடிவு செய்யப் போவதாகக் கேள்வி.

கோயில் சுவாமிகளின் பரிவட்டங்களை இந்த வண்ணார்களே வெளுத்துக் கொடுக்கிறார்கள். வண்ணார்கள் நமது அண்ணலிடம் அணுகக்கூடா'தென்று சொல்லும் கோயில் குருக்கள்மார்களும் அந்த வண்ணார்கள் வெளுத்துக் கொடுக்கும் ஆடைகளை உடுத்திக்கொண்டே சுவாமிகளுக்குப் பூசை செய்கிறார்கள். மேலும் ஒரு வண்ணார் திருக்குறிப்புத் தொண்ட நாயனாராகி எல்லாக் கோயில்களிலும் கல்லுருவில் விளங்கிக்கொண்டிருக்கிறார். அவருக்குப் பிராமணர்களே பூசை செய்கிறார்கள். ஆதித்திராவிட நந்தனாரும் இருக்கிறார்! வாணிய நாயனாரும் இருக்கிறார்! குலால நாயனாரும் இருக்கிறார்! அந்தணர் முதல் ஆதித்திராவிடர் வரையுள்ள சகல ஜாதி மக்களும் ஆண்டவனிடம் அற்புதமான பக்திசெய்து நாயன்மார்களாயும், ஆழ்வார்களாயும் நமது கோயில்களில் இடம் பெற்று நமது தெய்வங்களாக விளங்குகிறார்கள்.

எனவே, தென்னாட்டில் சில கோயில்களில் வண்ணார்கள், வாணியர்கள், நாடார்குல மக்கள் போகக்கூடாதென்று தடுப்பது மடமையாகும். அவ்வாறு இதுவரை வழக்கமாயினும் இனி அதனை ஒழிக்கவேண்டும். இத்தகைய அநியாயங்களைத் தடுக்காது இன்னும் நாட்டிலே வளர்த்துக்கொண்டிருக்க முடியாது. இத்தகைய அநியாயங்களை வளர்க்க விரும்புவோர் சைவர்கள் ஆகார். அவர்கள் நமது நாட்டு மக்களை சைவத்தை வெறுக்குமாறு செய்து பர சமயங்களில் புகுமாறு செய்யும் சைவவிரோதிகள் ஆவர். நீதி நெறியை அறியாமலும் காலப்போக்கை அறியாமலும் சைவப் பெரு மக்கள் நடப்பார்களானால் அவர்கள் வையமெல்லாம் பரவுதற்குறிய தெய்விகப் பெருஞ் சைவத்திற்குக் கேடு சூழ்கிறவர்கள் ஆவார்கள்.

வாலிப சங்கம்.

மேற்படி சங்கத்தின் கூட்டமொன்று 18-10-31 தேதி சங்கத்தின் தலைவர் திரு எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. 'குடிஅரசு' ஆசிரியர் திரு ஈ.வெ. இராமசாமி அவர்கள் உடல் நலமின்றி இருப்பதை அறிந்து இக்கூட்டம் வருந்துவதுடன், அவர் சீக்கிரத்தில் பூரணசுகமடையவேண்டுமென்று இக்கூட்டம் விரும்புகிறது,

குடி அரசு

ஈரோடு 1931 நவம்பர் 1௳

தீபாவளியும், காங்கிரசும்.

——:0:——

தீபாவளிப்பண்டிகைக்கு இன்னும் சில தினங்களேயிருக்கின்றன. நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பண நெருக்கடியின் மூலம் மிகச்செல்வவந்தர் என்று கருதப்படுகிறவர்களில் பலர் அன்றாடம் செலவிற்கு வகையின்றித் திண்டாடுகிறார்கள். ஏழைக்குடியானவர்களும் தொழிலாளிகளும் தானிய விலை குறைந்ததின் காரணத்தாலும் வேலையில்லாத்திண்டாட்டத்தின் காரணத்தாலும் ஏக்க முற்றிருக்கின்றனர். இந்த நிலையில் மதத்தின் பெயரால் அனுஷ்டிக்கப்படும் பழைய பழக்க வழக்கங்களில் நமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் குருட்டுப் பற்றுதலால் தீபாவளியின் போது ஏராளமான பொருள் நமது நாட்டில் வீண் விரயமாக்கப்படுகிறது.

அப்படிப்பட்ட வீண் செலவுகளில் பட்டாசு முதலிய வெடிகள் சுடுதல், பலகார தின்பண்டங்களை அளவுக்குமிஞ்சிச்சாப்பிடுதல், புது வஸ்திரங்கள் வாங்குவதில் தன்நிலைமைக்குஅதிகமாகச் செலவு செய்தல் முதலியன முக்கியமாகும். இவற்றில் வெடிகள் சுடுவதின் மூலம் நமது நாட்டுப் பொருள் சீனு முதலிய அந்நிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவ்வந்நியநாடுகளில் நமது நாட்டிலுள்ள மூட ஜனங்கள் தேவைக்கு வெடிகள் செய்வதென்று மனித நன்மைக்கு உபயோகமில்லாத ஒரு தொழில் வளர்க்கப்பட்டு வருகிறது. தீபாவளியில் தின்பண்டங்கள் தின்னவேண்டுமென்றிருக்கும் வழக்கத்தால் மக்களிடையே நோய் விருத்தியாகிறது. தின்பண்டங்களை ஒவ்வொருவரும் தனது தேக நிலைக்குத் தகுந்த அளவு நிரந்தரமாகப் புசித்து வரவேண்டுமேயொழிய வருஷத்தில் சில தினங்களை மாத்திரம் பண்டிகைகள் கொண்டாடும் விசேஷதினங்களென ஏற்படுத்திக்கொண்டு அந்த நாட்களில் மாத்திரம் அதிகமாகப்புசித்தால் நோயடைவது நிச்சயம். தமிழ் நாட்டில் அஜீரணத்தால் ஏற்படும் கால்ரா வென்னும் தொத்து நோய் ஒவ்வொரு வருஷமும் ஆரம்பமாவது தீபாவளி காலத்தில் தான் என்பதை சகலரும் அறிவர்.

தீபாவளியில் புதுவஸ்திரம் கட்டியாக வேண்டுமென்றிருக்கும் வழக்கம் மேற்கண்ட மற்ற இரண்டு தீங்குகளையும்விட மிகவும் பாதகமானது. மக்களுக்கு வஸ்திரம் அவசியமெனக் கொண்டாலும் ஒவ்வொருவரும் தனக்கு வேண்டிய வஸ்திரங்களை நாளடைவில் அந்தந்த சமயத்திலுள்ள தேவைக்குத் தக்கவாறும், தனது பொருள் நிலைமைக்குத் தக்கவாறும் வாங்கிக்கொள்ள வேண்டும். பழைய வஸ்திரங்கள் கிழியாமல் வேண்டிய அளவு இருக்கும்போது புதிதாய் வாங்க வேண்டியதில்லை. பொருள் கஷ்டம் ஏற்படுங்காலத்தில் கிழிந்த வஸ்திரங்களைக்கூடியவரையில்மறுபடியும் செப்பனிட்டுக் தைத்து உபயோகப்படுத்திக்கொள்ளமுயற்சிக்க வேண்டுமேயொழியபுதிய வஸ்திரம் வாங்கித்தான் ஆகவேண்டுமென்றநியதியைக்கொள்ளக்கூடாது. ஆனால் தீபாவளிக் கொண்டாட்டம் என்னும் மூட சம்பிரதாயத்தின் காரணமாய் ஒருவன் தன் வசத்தில் ஏராளமான வஸ்திரங்கள் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த போதிலும், தற்சமயம் அவசிய செலவுக்கே பணமில்லாமல் திண்டாடிக்கொண்டிருந்த போதிலும் பண்டிகை காலத்தில் புதுவஸ்திரம் வாங்கி உடுத்த வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறான். இதன் பயனாய் ஏழை மக்கள் தங்களுக்கு வேண்டிய துணிகளை தீபாவளி சமயத்தில் தவிர வேறு சமயங்களில் வாங்காமலிருக்கிறார்கள். துணிவியாபாரத்தில் ஒரு வருஷத்திய வியாபாரம் முழுவதும் ஒரு தினத்தில் நடத்தவேண்டியிருப்பதால் ஒரு நெருக்கடி ஏற்பட்டுத்துணி, விலை அதிகப்பட்டு ஏழைகளுக்கு நஷ்டமுண்டாகிறது. ஆகையால் நமது நாட்டு மக்கள் இவ்வித நெருக்கடியிலும், கஷ்டத்திலும் பட்டுழலாமலிருக்கவேண்டுமானால் தீபாவளிப்பண்டிகையைக் கைவிட வேண்டியதவசியம். தேச நலத்தைவிரும்புகின்றவர்களும், ஏழை மக்களின் அறியாமையை அகற்றப்பாடுபடுகிறவர்களும் தாங்கள் செய்கையில் தீபாவளியைக்கொண்டாடாமல்மற்றவர்களுக்குவழிகாட்டுவதும் தவிரதீபாவளியைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனப்பொதுமக்களிடை தீவிரப்பிரசாரஞ் செய்யவேண்டியதும் அவசியமாகும்.

பொது நன்மையைக்கோரும் அறிவாளிகளிடையில் இவ்விஷயத்தைப்பற்றி அபிப்பிராய பேதமிருக்க இடமில்லை. ஆனால் நமது நாட்டின் தற்காலத்திய பொது வாழ்க்கையில் இவ்விஷயத்தில் மாறுபட்ட அபிப்பிராய மேற்பட்டிருப்பதிலிருந்து எந்த அளவுக்கு நமது பொதுவாழ்க்கை பகுத்தறிவுக்கு முரண்பட்டிருக்கிறதென்று வெளியாகிறது. இவ்விஷயத்தில் காங்கிரஸ் கக்ஷிக்காரருடைய நிலைமேற்கண்ட நமது அபிப்பிராயத்திற்கு நேர் விரோதமாயிருக்கிறதென்பது வெட்ட வெளிச்சமாயிருக்கிறது. தாங்களே மற்றெல்லோரையும் விட தேசமக்களிடை செல்வாக்குப் பெற்றவர்களென்று காங்கிரஸ்காரர் வீருப்புப் பேசிக்கொள்ளுகிறார்கள். காங்கிரசின் சார்பாய் இங்கிலாந்து சென்றிருக்கும் காந்தியார், தானே இந்திய தேசத்திற்கு ஏகப்பிரதிநிதி யென்றும் இந்தியாவிலுள்ள எந்த சமூகத்தைப்பற்றியும் பேச மற்றெவருக்கும் உரிமையில்லை யென்றும் வட்டமேஜை மகாநாட்டில் மார்தட்டுகிறார். இவ்வளவு செல்வாக்கும், பிரதிநிதித்துவமும் பெற்ற கூட்டத்தார் தற்சமயம் பாமர மக்களிடையே எவ்வித பிரசாரஞ் செய்கிறார்களென்று உற்று நோக்க வேண்டியதவசியம்.

காங்கிரஸ் திட்டத்தில் தற்காலம் அமுலிலிருப்பது இரண்டே அம்சங்களாகும். ஒன்று குடியை ஒழித்தல், மற்றொன்று அன்னிய ஆடையை ஒழித்தல். இவ்விரண்டுக்கு மாக கடைகளின் முன் மறியல் செய்ய கொஞ்சகாலம் முயற்சி செய்யப்பட்டது. ஆனால் இப்பொழுது மதுபான மறியலும், அன்னிய ஆடை மறியலும் பிரயோசனமற்றனவென்று புலப்பட்டுவிட்டது. ஆகையால், தங்கள் திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவர காங்கிரஸ்காரர் புதிய இரண்டு வழிகளைக்கண்டுபிடித்திருக்கின்றனர். ஒன்று ஜாதிக்கட்டுப்பாடு, மற்றொன்று பண்டிகை. ஜாதிக்கட்டுப்பாட்டின் மூலம் குடியை நிறுத்துவதென்றும், பண்டிகைகள் கொண்டாடுவதின் மூலம் கதர் வியாபாரத்தைப் பெருக்கி அன்னிய ஆடையை பகிஷ்கரிப்பதென்றும் தீர்மானித்திருக்கின்றனர். நமது தேசமக்களிடையில் ஒற்றுமை யேற்படாமல் பிரித்துவைத்திருக்கும் நூற்றுக்கணக்கான ஜாதிகள், ஜாதிக்கட்டுப்பாடு என்னும் ஒரே ஆயுதத்தின் பலத்தால் தான் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஆயினும் நாளாவட்டத்தில் ஏற்பட்டுவரும் முன்னேற்ற உணர்ச்சியும், அறிவும் பொதுமக்களிடம் பரவுவதால் ஜாதிக்கட்டுப்பாடுகள் தளர்ந்து ஜாதிகள் மறைந்து போவதற்கு வசதிகள் ஏற்பட்டுவருகின்றன. ஒவ்வொரு ஜாதியிலும் கல்வி கற்று முற்போக்கடைந்த மக்கள் ஜாதிக்கட்டுப்பாட்டை எதிர்த்துப் போராடி வருகின்றனர். ஆனால் காந்தீயமென்னப்படும் வர்ணாச்சிரம தர்மத்தை அடிப்படையாகக்கொண்ட காங்கிரஸ் கக்ஷியோவெனில் முன்னேற்ற உணர்ச்சியை எதிர்த்து, மக்களின் அறிவுவளர்ச்சியைத் தடுத்து ஜாதிக்கட்டுபாடு என்னும் நாகரீகமற்ற மூட ஜனங்களின் பலவந்தச் செயல்களுக்கு ஆக்கந்தேடுகிறது. மதுவிலக்கின் பெயரால் வருணாச்சிரமத்தை நிலைநாட்டும் காங்கிரஸ் முயற்சியை எதிர்க்கவேண்டியது அறிவாளிகளின் கடமையாகும்.

காங்கிரஸ் திட்டத்தின் இரண்டாவது பகுதி பண்டிகைகள் கொண்டாடுவதின்மூலம்கதர்விற்பனையைப் பெருக்கி அன்னிய ஆடையைப் பகிஷ்கரித்தல். தற்சமயம்மூலைமுடுக்குகளிலெல்லாம் "தீபாவளிக்குக் கதர் வாங்குங்கள்" என்று துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திரு. ராஜகோபாலாச்சாரியார் தனது அறிக்கையில் "தீபாவளி நமது தேச மக்கள் அனைவருக்கும் பொதுவான பண்டிகை. ஏழை, பணக்காரர், ஆண், பெண், முதலியவர்கள், குழந்தைகள் எல்லோரும் அன்றையதினத்தைச்சந்தோஷமாகக் கொண்டாடுகிறார்கள். முக்கியமாக தீபாவளி விடுதலைக்கொண்டாட்டமாகும் அன்று நரகாசுரனிடமிருந்து உலகம் விமோசனம் பெற்ற நாள். ஆகையால் தீபாவளி என்பது விடுதலைக்கு அறிகுறி. தென்னாட்டில் நாம் அநாதி காலமாக புது ஆடைகள் வாங்கியணிந்து தீபாவளி கொண்டாடி வருகிறோம். ஆயிரக்கணக்கான வருஷங்களாக இவ்வாறு நடத்திவந்தோம். இவ்வருஷ தீபாவளி தமிழ் நாட்டில் கதர் அபிவிர்த்தியைச் சந்தோஷமாய்க் கொண்டாடும்பண்டிகையாயிருக்கவேண்டும்" என்று எழுதியிருக்கிறார். இதிலிருந்து நமது மக்கள்

தீபாவளிப்பண்டிகை கொண்டாடித்தான் ஆகவேண்டுமென்று காங்கிரஸ்காரர் எவ்வளவு அக்கரையாக வேலைசெய்கிறார்களென்பது வெளிப்படுகிறது. அப்படிக் கொண்டாடுவதிலும், புராணத்தில் இப்பண்டிகையைப்பற்றி கட்டிவிடப்பட்டிருக்கும் பொய்க்கதையில் நம்பிக்கை வைத்தே கொண்டாட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. தீபாவளி விடுதலைதினமென்றும், நரகாசுரன்கதையைப்பாமர மக்கள் நம்ப வேண்டுமென்றும் திரு. இராஜகோபாலாச்சாரியார் பிரசாரஞ் செய்ய முற்படுவது வெட்கக்கேடான விஷயமாகும்.

நரகாசுரன் கதையை திரு. இராஜகோபாலாச்சாரியார் நம்புவதில்லை. ஆனால் பாமர மக்கள் அந்தப்புரட்டில் நம்பிக்கை வைக்கவேண்டுமென்றும், இப்படி குருட்டு நம்பிக்கையை வளர்ப்பதின் மூலம் இந்து மதத்திலுள்ள மற்ற புரட்டுகளையும் ஜனங்கள் நம்ப இடமேற்படுமென்றும் இப்படி மத ஆதிக்கம் வலுத்து, வருணாச்சிரமம் தழைத்தால் பிராமண செல்வாக்கு நிலை நிற்குமென்றும் திரு. இராஜகோபாலாச்சாரியார் முதலிய காங்கிரஸ் கக்ஷிக்காரர் கருதியே இம்மாதிரி பிரசாரம் செய்கின்றார்கள் தனது தீபாவளி அறிக்கையில் மற்றோரிடத்தில் திரு. இராஜகோபாலாச்சாரியார் குறிப்பிடுவதாவது.

“ஆலைத் துணிகளை அணிந்து தீபாவளி கொண்டாடுவது சிரார்த்த பிண்டத்திற்கு சீமை பிஸ்கோத்து வைப்பது போலவேயாகும். ஹோமத்தீயில் நெய்க்கு பதிலாக கோக்கோஜத்தை விடுவது போலாகும்.” என்கிறார்.

இப்படிப்பிரசாரஞ்செய்வதின் மூலம் மக்கள் சிரார்த்தஞ்செய்யவும், ஹோமம் வளர்க்கவும் முற்படுவார்களென்றும் அதன்மூலம் தனது ஜாதியார் என்றென்றைக்கும் சோம்பேரிகளாய் வயிறு வளர்க்க இடமேற்படுமென்றும் திரு. இராஜகோபாலாச்சாரியார் கனவு காண்கிறார். உலக மக்களிடையேபகுத்தறிவுதோன்றிவிட்டதென்பதையும், தமிழ் மக்களிடையே சுயமரியாதை இயக்கம் பரவி வருகிறதென்பதையும் திரு இராஜகோபாலாச்சாரியாருக்கு நினைவூட்ட விரும்புகிறோம். நரகாசுரன் கதையில் நம்பிக்கைவைக்கும் காலம் மலையேறி விட்டது. திரு. ராஜகோபாலாச்சாரியார் தனது சுய ஜாதி மக்களின் நன்மையைக்கோருபவரானால் காலத்திற்கேற்றவாறு அவர்களதுதொழிலை மாற்றிக்கொண்டு மதத்தின் பெயராலும், வருணாச்சிரமத்தின் பெயராலும் பிறரைஏமாற்றி,பண்டிகைகளென்றும்,சிரார்த்தமென்றும், ஹோமமென்றும், ஏய்த்துப் பிழைக்காமல், அவரவர் சக்திக்கேற்ற நாணயமும், கண்ணியமும் வாய்ந்த தொழில்களில் ஈடுபடவேண்டுமென்று பிரசாரஞ் செய்வாராக.

தீபாவளியில் கதர் வாங்கவேண்டுமெனச்செய்யப்படும் பிரசாரத்தைப்பற்றி ஒரு வார்த்தை மட்டும் சொல்ல விரும்புகிறோம். கிராமத்தில் உண்ணஉணவின்றிப் பட்டினி கிடக்கும் ஏழைகள் நூற்று, நெய்து பிழைப்பதற்காகவே கதர்ப்பிரசாரம் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. தற்சமயத்தில் கதர் வேஷ்டி வாங்குவதென்றால் சுமார் கெஜம் ஒன்றுக்கு அணா ஒன்பது கொடுக்க வேண்டியதிருக்கிறது. ஆனால் இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்கும் ஆலைத்துணியில் இந்த கதரைவிட உயர்ந்த காடாத்துணி வாங்குவதென்றால் கெஜம் நான்கு அணாவுக்கு கிடைக்கிறது. கதருக்கு பதிலாக இந்த ஆலைத் துணியை வாங்குவதால் நமது நாட்டுப்பணம் வெளிநாட்டுக்குப் போவதில்லை யென்பதோடு கெஜம் ஒன்றுக்கு ஐந்து அணா மிச்சமும் ஏற்படுகிறது. கெஜம் ஒன்றுக்கு ஒன்பதணா கொடுத்து கதர் வாங்குவதில் ஏழைகளுக்கு நூற்பதில் இரண்டணாவும் நெய்வதில் இரண்டணாவும் கிடைக்கலாம். ஆலைத்துணி வாங்குவதால் ஏற்படும் ஐந்தணா மிச்சத்திலிருந்து இந்த நான்கணாவையும் நேரே நூற்கிறவர்களுக்கும், நெய்கிறவர்களுக்கும் மணியார்டர் மூலம் அனுப்பிவிட்டால் பாக்கி இன்னும் ஒரு அணா வேறு தர்மச் செலவுக்கு மிச்சப்படுகிறது. மேலும் ஆலைத்துணிக்குக் கொடுத்த நான்கணா மூலம் ஆலையில் வேலை செய்யும் எவ்வளவோ ஏழைத்தொழிலாளிகள் பிழைப்பார்கள். இப்படி ஒரு தர்ம பண்டு ஏற்படுத்தி கவர்ன்மெண்டார் மூலமோ அல்லது பொது ஜன நம்பிக்கை பெற்ற ஒருஸ்தாபனத்தின் மூலமோ ஏழைகளுக்கு உதவுவதே நாகரீக முறையாகும். அதை விட்டு விட்டு ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குமுன் மனித சமூகம் நாகரீகமடையாமல் காட்டு மிராண்டிகளாயிருந்த காலத்தில் துணிஉற்பத்தி செய்த முறையை இன்றையதினம் பின்பற்ற வேண்டுமென்றும், அதற்காக, கதரென்ற ஒரு தொழிலை சிருஷ்டி செய்து அதன் மூலம் ஏழைகளுக்கு உதவுவதாகச் சொல்லப்படும் பொருளில் ஒட்டிக்கிரட்டி பொது ஜனங்களை நஷ்டப்படச் செய்வது ஒழுங்கு முறையாகாது. உணவின்றி வருந்தும் ஏழைகள்நமது நாட்டில் மட்டுமல்லாமல் மற்ற நாகரிகமடைந்த தேசங்களிலுமிருக்கிறார்கள். தம்சமயம் ஏற்பட்டிருக்கும் வேலையில்லாத்திண்டாட்டத்தினால் உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் ஏழைகளின் தொகை பெருகி வருகின்றது. மற்ற நாகரிகமடைந்த தேசத்தார் ஏழைகளைப் பாதுகாக்க வேண்டி பல நவீன தொழில்களை நாகரீக முறைகளில் சிருஷ்டிக்கிறார்கள். அப்படியும் தொழில் கிட்டாத ஏழைகளுக்கு ஒருஉதவஒரு பண்டுஏற்படுத்தி அதிலிருந்து மாதா மாதம் உதவியளிக்கின்றார்கள். நமதுதேசத்தாரும் இவ்வித நாகரிகமுறையையே கைக் கொள்ள வேண்டும். கதர் என்பது தற்சமயம் நமது நாட்டாரை தேசியத்தின் பெயரால் அடக்கியாள முற்பட்டிருக்கும் ஒரு சிறுபான்மைக் கூட்டத்தாரின் சூழ்ச்சி யென்று எச்சரிக்கை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

S. R.

திரிகூடசுந்தரனார் திருமணம்.

நண்பர் உயர்திரு திரிகூடசுந்திரர் அவர்களுக்கு திருநெல்வேலியில் சுயமரியாதை முறைப்படி திருமணம் நடந்த சங்கதிமற்றொருபக்கம் பிரசுரித்திருக்கிறோம்.

அவர் ஒரு நாளும் சுயமரியாதைக் கொள்கைகளுக்கு எதிராக இருந்ததில்லை. நமது இயக்கத்தைப் பாராட்டி எழுதியிருக்கும் வியாசங்கள் அனேகம ‘குடிஅரசி’லும்,‘ரிவோல்ட்டி’லும்காணலாம்.

உடல் நலிவால் அவரது திருமண அழைப்பிற்குச் செல்ல நமக்கு வசதி ஏற்படவில்லையானாலும் அத்திருமணம் நடந்த முறையை அறிந்து நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைவதுடன் திரிகூடசுந்திரரை நாம் மிகுதியும் பாராட்டுகிறோம்.

மணமக்கள் சீர் திருத்தத்துறையில் தொண்டாற்றி மனித சமூகத்திற்கு விடுதலையையும்,சுயமரியாதையையும் உண்டாக்க ஆசைப்படுகின்றோம்.

சாமி சிதம்பரனார்.

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் உடல் நலிவுற்றிருப்பதின் காரணமாய் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியது மிக்க அவசியமாயிருப்பதால் ஆசிரியர் பொறுப்பை திரு. சாமி சிதம்பரனார் அவர்கள் கவனித்து வருவார்.

வெளியிடுவோர்

தமிழ் நாட்டுக்கத் தோலிக்கர்களே!

தக்கபதில்கூறுங்கள்.

[சத்தியவசனி சாற்றுவது]

புதுவை மாதா கோவில் அச்சுக்கூடத்தில் வெளியான ஞானோபதேசபர்வதம் 10-ம் அதிகாரத்தில் 6-ம் பிரிவில் ‘திருச்சபையியல்’ என்ற தலைப்பில் ‘புரோடஸ்டாண்டு புருஷனைக்கத்தோலிக்குப் பெண்பிள்ளைகள் மணம் செய்து கொள்ளச்சீமையில் திருச்சபை ஓரோர் சமயத்தில் உத்தரவு கொடுக்கிறதுண்டு” என்றும், ஆனால் பெரிய நியாயங்களைப்பற்றி அந்த உத்தரவுகொடுக்குமேயல்லாமல் அற்ப நியாயங்களை முன்னிட்டு அதைக் கொடுக்கவேமாட்டாது என்றும், புரோட்டஸ்டாண்டு மாப்பிள்ளைதனக்குப்பிறக்கும் பிள்ளைகள் எல்லோரையும் கத்தோலிக்குவேதத்தில் வளர்ப்பதாகவும், கத்தோலிக்கு வேதத்தை அனுசரிக்கத்தன் பெண்சாதிக்குப் பூரண உத்தரவைக் கொடுப்பதாகவும், சாட்சிகளுக்கு முன்பாகக்குருவிடத்தில் சத்தியம்செய்து சீட்டு எழுதுகிறான் என்றும், அந்தச் சத்தியத்தை அநேகர் நிறைவேற்றுகிறபடியால், திருச்சபை ஓரோர் சமயத்தில் அப்படிப் பட்ட கலியாணங்களுக்கு உத்தரவு கொடுக்கும் என்றும், தமிழ் நாட்டு புரோட்டஸ்டாண்டு மாப்பிள்ளைகளோவெனில், ‘ பத்துச் சத்தியங்களைச்செய்தபோதிலும், அவைகளை அனுசரிப்பார்களென்று நம்ப இடமில்லாதபடியால் அவர்களுக்குப் பெண்களைக்கொடுக்க மேற்றிராணியார்கள் உத்தரவு தரமாட்டார்கள்” என்றும் கூறப்பட்டிருக்கிறது.

அன்பர்களே! இது மத நீதியாகுமா? தமிழ் நாட்டுக்கு ஒரு சட்டமும், மேல்நாட்டுக்கு ஒரு சட்டமும் ஏற்படுத்துவது திருச்சபைக்கு அழகாகுமா? இந்நீதி, ஒருகுலத்துக்கொருநீதி கூறும்

மனுதரும சாஸ்திரநீதியா? அல்லது நம் நாட்டு மக்களை அடிமைப்படுத்தும் மதத்தலைவர்களின் சூழ்ச்சியா? என்றுதான் கேட்கின்றேன். மேலும் இங்குள்ள புரோட்டஸ்டான்டு மாப்பிள்ளைகள் பொய்யர்களா? அவர்கள் மூடப்பழக்கங்களை முற்றிலும் அகற்றிய பகுத்தறிவு பெற்ற கிறிஸ்தவர்களல்லவா’ பெரும்பாவங்களைச் செய்தாலும் குருமார்களிடம் பாவசங்கீர்த்தனம் செய்துவிட்டால் உடன் தீர்ந்துவிடும் என்று நினைத்துக்கொண்டிருக்கும் சில போலிக்கத்தோலிக்கர்களைவிட அவர்கள் மேலானவர்களல்லவா? சில கத்தோலிக்கரின் குருட்டு நம்பிக்கைகளைத் தெள்ளத்தெளிய எடுத்துக்கூறியதனாலன்றோ அவர்கள் ‘பதிதர்கள்’ எனப்பேர் பெற்றனர்? அப்பதிதர்கள் நம்மைப்போல் ‘மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா’ என்ற பழமொழிக்கு இணங்க நடக்கின்றவர்களா? அவர்கள் பல குருமார்களைப்போல் கல்வியறிவைக்கொடாமல் மதத்தைப்போதிக்கின்றார்களா? நம்மைப்போல் சுவிசேஷத்தை உணராமல் மந்திரங்களை குருட்டுத்தனமாய் மனப்பாடம் செய்கிறவர்களா? ஏழை மக்கள் இரத்தம் சிந்தி சம்பாதித்த பொருளைக்கொண்டு கட்டப்பட்ட கோவில்களையும், வாங்கப்பட்ட சொத்துக்களையும், கைவசப்படுத்திக்கொண்டு அவைகள் திருச்சபைச் சொந்தமென்றும், உங்களுக்கு அதிகாரமில்லையென்றும் கூறி ஏமாற்றும் சில குருக்களைப்போல் பதித மதத்தலைவர்கள் நடந்து வருகிறார்களா? என்றுதான் கேட்கின்றேன்.

ஆகையால் மேற் சொன்ன விஷயங்களை நன்கு ஆராய்ந்து சீமையில் நடந்துவரும் அச்சட்டத்தைத் தமிழ்நாட்டுக்கத்தோலிக்கரிடையிலும், நடைமுறையிலும் கொண்டுவர ஞானாதிகாரிகளிடம் விண்ணப்பம் செய்யுங்கள்! உங்கள் பகுத்தறிவைக்கொண்டு `இது நியாயமா? என்று யோசித்துப் பதில் கூறுங்கள்! சீர் திருத்தம் பெறமுன் வாருங்கள்.!

வாலிப முஸ்லீம் சங்கம் திரிச்சிநாப்பள்ளி.

ஷெ சங்கத்தின் ஆதரவில் “விடுதலை” என்ற வாரப் பத்திரிக்கையொன்று திரு. சாமிநாதன் என்கிற ஜனாப்மகமதலி அவர்களை ஆசிரியராகக் கொண்டு நாளது வாரமுதல் வெளிவரும் என ஒரு நிருபர் எழுதுகிறார்

தீபாவளி பண்டிகை அவசியமா?

(நித்திலம் வரைவது.)

நான் மதிப்பியக்கமாம் “சுயமரியாதை” ஜோதி உதயமாகிய இவ்வாண்டாய், ஆண்டுகள்தோறும் நம்மனோர்கள் கொண்டாடும், அர்த்தமற்றதும், பொருளற்றதும், பகுத்தறிவற்றதுமான பண்டிகைகளில் ஒன்றான “தீபாவளிப்பண்டிகையைப் பற்றியும், அதனால் விளையும் பயனையும், பொருள நஷ்டத்தையும், சுகாதாரக் கேட்டையும், பண்டிகை எதற்காக எந்த ஆதாரத்தின் மீது கொண்டாடப்படுகிறதென்பதையும் தெள்ளத்தெளிய நம் தலைவர்களும், நம் அறிஞர்களும், மக்களுக்கு நன்கெடுத்துக்காட்டி இருக்கின்றார்கள். அதேபோல் இவ்வாண்டும் ஒவ்வொரு சீர்திருத்த நன்னோக்கங்கொண்ட அன்பர்யாவரும், பொருளற்றதான பண்டிகையைப்பற்றி மக்களுக்கு எடுத்துணர்த்தி, அதன்பாலுள்ள நம்பிக்கையை அகற்றுவது அவசியமென நினைத்தே இக்கட்டுரைவரைந்ததின் நோக்கமாகும்.

சகோதரா! சகோதரிகளே!! இவ்வாண்டு “தீபாவளி”ப்பண்டிகையின் வரவானது, நம் நாட்டு பணக்காரர்களுக்கு ஓர் கொண்டாட்ட தினமாகவும்; ஏழைக்குடியானவர்களுக்கு ஓர் திண்டாட்டத்தினமாகவுமேயிருந்து வருகிறது.

பணக்காரர்கள் இப்பொழுதே பண்டிகைக்காக வேண்டிய மதுரை, கும்பகோணம், கொரநாடு, காஞ்சீவரம், பெங்களூர் முதலிய ஊர்களிலிருந்து நவ நவமான பட்டுகளும், சரிகை வேலைப்பாடுடையதுமான வேட்டி, சேலைகள் தருவித்திருப்பார்கள். “காசைக் கரியாக்க சீனி வெடி வாங்கிச் சுடு” என்பது நம் நாட்டுப் பழமொழி அதேபோல் நல்ல சத்தமுள்ள சைனீஸ் வெடிகளும் வாங்கி இருப்பார்கள். அல்லது வாங்கிச்சுடுவார்கள். பலகாரம் பட்சணங்களும் புதுப்புது மாதிரியாய் செய்வதற்கும், திறமையைக்காட்டுவதற்கும் அவர்கள் பெண்கள் யோசனை பண்ணிக்கொண்டிருப்பார்கள். இந்த முறையில் இவர்களுக்கு இந்தப்பண்டிகை [illegible] ஓர் கொண்டாட்ட நாளா[illegible]ருக்கலாம். ஆனால், ஏழை மக்களுக்கு இக்கொண்டாட்ட நாளானது அவர்கள் உயிரைக்கொள்ளை கொள்ளும் கூற்றுக்கொப்பாகவே இருக்குமென்பதில்லையய மில்லை. இவ்வேழை மக்கள் நல்லபலகாரபட்சணங்களுக்கும்; நவநாகரீகமான உடைகளுக்கும், சீனிவெடிக்கும் எங்கு போவார்கள், என்றாலும் மதத்தின்பேரால் ஏற்பட்டிருக்கும் பண்டிகையைக் கொண்டாடாதிருக்கலாமோ? அப்படியிருந்தால் மதத்துரோகி, நரகம் சித்திக்கும் என்னும் பயத்தால் விழுங்கப்பெற்ற நம் சகோதர! சகோதரிகள்! எப்படியாவது கடன் வாங்கியாவது ஒருவாறாய் பண்டிகை கொண்டாடி வருகிறார்கள்.

மேல் குறிப்பிட்ட இரு சாரார்களும் மதமென்னும் சாக்கடைக்குழம்பில் மூழ்கினவர்களாகவே இருக்கிறார்கள். இதில் ஒருவராகிலும் இப்பண்டிகை எந்த ஆதாரத்தின் மீது எதற்காக எந்தக்காலத்தில் யாரால் ஏற்பட்டனவென்பது அநேகமாய் தெரியவே தெரியாது. மதம், வேதம், சாஸ்திரம், புராணம், மோட்சம், நரகம் என்பனபோன்ற சூட்சிப்பாசத்தால் கட்டுண்டு, அதற்காகவே, பொருள் நஷ்டம், புத்தியீனம் சுகாதாரக்கேடு இவைகளைக் கவனியாது பண்டிகை கொண்டாடி வருகிறார்கள்.

உலகத்தில் “ரஷிய” போன்ற நாடுகள் முன்னணியில் நிற்பதற்கு காரணம், கடவுள் நம்பிக்கை, மத நம்பிக்கைகளை அறவே நீக்கியதோடமையாது கோயில்களை ஓர் கச்சேரியாகவும், சினிமா மேடையாகவும்தேநீர்ப்பானக்கடைகளாகவும் உபயோகித்து வருவதோடு, அக்கோவிலிலிருந்த சிலைகளைக்கொண்டு படிகள் கட்டியும், ஸ்நானஞ்செய்யுமிடத்தில் பூமியில் பதிந்து வைத்திருக்கிறார்கள். மேலும் மதநம்பிக்கைகளாய் உள்ள ஒவ்வொன்றையும் தூள் செய்கின்றனர். மதமோ, வேதமோ, கடவுளோ அவர்களுக்குப் பெரும் எதிரியாகும். அவர்கள் கூறுவது தன் நம்பிக்கையும், பகுத்தறிவுமேயாகும். ஆனால் நம்நாட்டில் ஒவ்வொரு விஷயமும் முறையே கடவுள், மதம், வேதம், சாஸ்திரம், புராண இதிகாசமென்னும் அஸ்திவாரத்தின் மீதே நடைபெற்று வருகிறது. எப்பொழுது இவ்வித நம்பிக்கை நம்மைவிட்டு நீங்குகிறதோ அன்றே நம் நாடு விடுதலை யெய்துவதோடு மற்ற நாட்டினரோடும் போட்டி போடமுடியும்.

கடவுள், மதம், வேதம், சாஸ்திரம், புராண இதிகாச முதலிய தமிழ் மறைகளை ஓதி உணர்ந்த நம் பண்டிதக்கூட்டங்கள் இவ்வாண்டு, அண்மையில் வரவிருக்கும் “தீபாவளி” பண்டிகைக்கு வாழ்த்துப்பா வாசிக்கப்போகின்றனர்களா! அல்லது நம் பார்ப்பனரல்லாத மக்களின் குருதியோட்டம் குறைத்துநிற்கும் ஒரு வகுப்பாரின் வாழ்க்கை நலனுக்கேற்ப பொய்யும் புனை உரைகளும் பொதிந்த சுவடிகளின் ஆதாரத்தின்மீது பண்டிகை கொண்டாடும் நயபாமரச் சகோதர! சகோதரிகளுக்கு! இப்பொருளற்ற தனத்தை, புத்தியீனத்தை எடுத்துச் சொல்லி மக்கள் கொண்டிலங்கும் பண்டிகை நம்பிக்கையை பறக்கடிப்பார்களா வென்பதும் ஒரு கேள்வியே யாகும்.

மேலும் இதுசமயம் ‘தீபாவளி’ பண்டிகைக்கு கதர் உடை அணிவதா! அன்னியஉடை அணிவதா! என்ற பெருங்கிளர்ச்சிக்கு இடையே சில ‚காங்கிரஸ்’ பக்தர்கள் ஆங்காங்கே அன்னிய உடை, கதர்உடை அணிவதின் பலன்களை விரிவாய் பிரசாரஞ்செய்வார்கள். அதனால் அன்னியத்துணி வியாபாரிக்குக் கொஞ்சம் வியாபார மந்தமும், கதர்க்கடை வியாபாரிக்கு நல்ல கொழுத்த வியர்பாரமும் ஏற்படலாகும். என்றாலும் பாதகமில்லை. அன்னியத்துணிகளை ஒழிக்கப் பிரசாரஞ் செய்யும் டக்தர்கள் ‘தீபாவளி’ பண்டிகையில் சுடும் சீனிவெடியும் ஒரு அன்னியச்சாமான் என்பதை உணர்ந்து அதையும் ஒழிக்கப்போதிய பிரசாரங்களை செய்வார்களானால் நாட்டில் பெரும் பொருள் தங்குவதற்கு போதிய ஏதுவுண்டாகும். அப்படிக்கில்லாது போலித்தனமான அன்னியத்துணி மறியல் கதர்ப்பிரசாரஞ் செய்வார்களானால் அது ஒரு சுயநலமேயாகும் என்பதையும் உணர்வதோடு எனதன்புக்குறிய உண்மைச் ‘சுயமரியாதை’ இளைஞர்கள் எதிர்ப்பிரசாரமாக அவர்களின் கதர்ப்பிரசாரத்தின் சுயநல சூட்சியை வெளியாக்குவதோடு மக்களின் செல்வநிலை

போக்கும் வறுமை நோயான பண்டிகையின் புரட்டையும் வெளியாக்கும்படி வேண்டுகிறேன்.

முடிவாக இவ்வாண்டு 'தீபாவளி' பண்டிகை தினத்தில், உண்மைச்சுயமரியாதை வீரர்களான எம் சகோதர! சகோதரிகள்! அதற்கென ஒரு பைசாவும் செலவு செய்யாதிருக்கும்படி வேண்டுவதோடு, நமக்கும் பண்டிகைக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பதை உணர்ந்து ஆங்காங்கேயுள்ள மற்ற நண்பர்களையும் அந்நிலைமையில் கொண்டுவரும்படி வேண்டுவதோடு இக்கட்டுரை முடிக்கின்றேன்.

சுயமரியாதைத் திருமணம்

தாலி இல்லை.

திருநெல்வேலி உயர் திரு பொ. திருக்கூடசுந்தரம் பிள்ளை எம். ஏ. பி. எல். அவர்களுக்கும் திருமதி கமலம் அம்மாள் அவர்களுக்கும் சிந்துபூந்துறையில் சுயமரியாதை முறைப்படி திருமணம் நடந்தது. இருவரும் வெவ்வேறு "ஜாதி"யைச் சேர்ந்தவர்கள். மணமக்கள் தாலிகட்டுதல் என்னும் அடிமைச்சடங்கை நீக்கி ஒருவருக்கொருவர் மாலை இட்டு மணத்தை முடித்துக்கொண்டார்கள் அதுசமயம் கரைக்குடி ஊழியன பத்திராதிபர் திரு ராய சொக்கலிங்கன் அவர்கள் சீர் திருத்தத்திருமணம் என்பது பற்றி பேசியதாவது:—

"ஸ்ரீமான் திருக்கூடசுந்தரத்தை அறியாதாரிருக்கமாட்டாரென்றும், தற்காலத்தில் விவாகங்கள் நடைபெறும் முறையும் அதனாலேற்படும் வீண்செலவுகளும் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாயிருக்கின்றனவென்றும் ஜாதிவித்தியாசம் ஒழிந்தாலொழிய தேசம் முன்னேற்றமடையாதென்றும் இந்த விவாகம் கலப்பு மணமென்றும், இதில் மத சம்மந்தமென்று சொல்லப்படும் எவ்விதச் சடங்கும் கிடையாதென்றும் பெண்ணுக்குத்தாலி கட்டுதல்கூட கிடையாதென்றும் ஏனென்றால் தாலி கட்டுதல் பெண்கள் ஆண்களுக்கு அடிமைகளென்று குறித்துக்காட்டுகிறதென்றும், ஸ்ரீமான்பிள்ளை தமது முன்னேற்றக் கொள்கைகளைத் தன் வாழ்க்கையிலேயே நடத்திக் காட்டுகிறார் என்றும், எல்லோரும் தம்பதிகளுக்கு ஆசி கூறவேண்டும்" என்றும பேசினார்.

சென்னையில் சுயமரியாதை பிரசாரம்.

—:0:—

சென்னையில் கடந்த 2,3, வாரங்களாக திருவாளர்கள் அ. பொன்னம்பலனார், என். பி. காளியப்பர் மற்றும் சில சுயமரியாதை தொண்டர்களும் புதுப்பேட்டை, சூளை, பெரம்பூர், சிந்தாதிரிப்பேட்டை முதலியவிடங்களில் பிரசாரம் செய்துவருகிறார்கள்.

இன்னும் சுமார் ஒரு மாதகாலம் இங்கு தங்கி இருப்பார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

தஞ்சையில் சுயமரியாதைத் திருமணம்

தஞ்சை கீழவாசல் பிள்ளையார் கோவில் வார்காரத் தெருவிலிருக்கும் ஆசிரியர் திரு. டி. ராஜகோபால் அவர்களின் சகோதரர் திரு. நடராஜன் அவர்களுக்கும், மன்னார்குடி திரு. முத்தையா அவர்கள் குமாரி சாரதாம்பாளுக்கும் 25-10-31 ஞாயிற்றுக்கிழமை சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்திற்கு தஞ்சையிலிருந்தும் மற்றும் பல இடங்களிலிருந்தும் பல சுயமரியாதை அன்பர்கள் வந்திருந்தனர். பல அன்பர்கள் சுயமரியாதைத் திருமணம் என்பதுபற்றி சொற்பொழிவாற்றியபின் திருமணம் இனிது முடிந்தது. திருமணத்திற்கு வந்திருந்த சுமார் 300 பேர்கட்கு சமபந்தி போஜனம் நடந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சேர்மன் எலக்ஷன்

கொடைக்கானல் முனிசிபல்சேர்மன் எலக்ஷன் 2-11-31 காலை 10 மணிக்கு திண்டுக்கல் சப் கலெக்டர் அவர்கள் தலைமையில் நடைபெறும். சேர்மென்ஸ்தானத்திற்குக்கீழ்க்கண்ட இரண்டு அபேட்சகர்கள் நிற்கின்றார்கள்.

திருவாளர்கள்:- சி. எஸ். ஸ்மித் அவர்களும் ! ஜேம்ஸ்-ஸ்டாப் அவர்களுமாவார்கள். இவர்களிருவர்களும் ஒவ்வொருவருக்கும் ஒன்பது ஓட்டுகளிருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த முனிசிபாலிட்டியிலிருக்கும் கௌன்சிலர்கள் [சேர்மன் பதவிக்கு நிற்கும் இருவரையும் சேர்த்து] பதினெட்டு பேர்களாகும் ஒவ்வொருவருக்கும் ஒன்பது ஓட்டுகளிருந்தால் மொத்தம் பதினெட்டுகௌன்சிலர்கள் அல்லவா இருக்கவேண்டும். இதை இரு அபேட்சகர்களும் யோசிப்பார்களாவென ஒரு ஓட்டர் எழுதுகிறார்.

திரு புருஷோத்தமமுதலியார் அவர்களும் மற்றும் அநேக கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

நாச்சியார் கோவில்.

16-10-31 வெள்ளிக்கிழமை யன்று மஸ்ஜித்தில் முஸ்லீம் மகாஜன பஞ்சாயத்துசபையின் தலைவர் ஜனாப் அமூர்தீன் சாயபு அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் முஸ்லீம் கூட்டம் நடைபெற்றது. அது போது கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்யது.

தீர்மானங்களாவன:—

"இஸ்லாத்தின் ஏக தெய்வ கொள்கைக்கு முற்றும் முரணாகவும் ஆண்டவனது கட்டளைக்கும் அவனது திரு. நபி (ஸல்) அவர்களின் வாக்கியத்திற்கும் விரோதமாகவும் இவ்வூர் மகல்லா நிதியிலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவிட்டு தர்கா பள்ளி என்ற கட்டிடத்தை நிர்மாணிக்கப் போவதை இம்முஸ்லீம் கூட்டம் கண்டிக்கிறது.

பார்ப்பனீயமொழிந்த கர்ணபூஷண முகூர்த்தம்.

ஈரோடு தாலூகா குன்னத்தூரிலிருக்கும் ஜின்னிங் பாக்டரி அண்டு கதர் ஸ்டோர் மானேஜர் திரு. மு. சென்னியப்ப முதலியார் அவர்கள் புதல்விக்கு 28-10-31 தேதி காலை 9 மணிக்கு சித்தோடு மண்டி திரு கே. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் சுயமரியாதை முறைப்படி பார்ப்பனீயமொழித்து "ரத்தினம்பாள்" என நாமமிட்டபின்பு வந்திருந்த யாவர்க்கும் சமபந்தி போஜனம் நடந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தீவிபத்து.

தஞ்சை ஜில்லா வல்லம் கிராமம் மூப்பத்தெருவிலிருக்கும் காங்கிரஸ் காரியதரிசி திரு. குழந்தைவேல் பிள்ளை அவர்கள் வீட்டில் 23-10-31 வெள்ளியன்று இரவு சுமார் 1 மணிக்கு தீப்பற்றிக்கொண்டது. வீட்டின் பின்புறத்திலுள்ள மாட்டுக் கொட்டடியிலுள்ள சுமார் 20, 30 மாடுகளும், 10, 20 ஆடுகளும் ஆவி இழந்தன. இன்னும் சுமார் 200 ரூ. மதிப்புள்ள சொத்துக்களும் சாம்பலாயின என ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

முதலாவது ஆண்டு விழா

அக்டோபர் மீ 31 ௨ நவம்பர் மாதம் 1 ந் தேதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் அலனம்மா பேட்டை ஸ்ரீ ராமநாதீஸ்வரர் ஆலய மண்டபத்தில் சென்னை செங்குந்த மித்திரன் பத்திராதிபர் உயர்திருவாளர் மே. ஷண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்கள் தலைமையின் கீழ் செய்யாறு தாலூகா அசனம்மா பேட்டை செங்குந்தர் அபிவிர்த்தி சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா நடைபெறுமென மே. தி. பொற்பாத முதலியார் தெரிவிக்கிறார்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஷம் அடைந்திருக்கவேண்டுமென்பதே. அதைத்தான் நமது இயக்கமும் போதிக்கின்றது. ஆகவே பண்டிகைகள் ஒழிந்து —அவைகளுக்குக் காரணமான மதங்களும் ஒழியுமானால், உயர்வு தாழ்வு வித்தியாசங்களும், ஏழை பணக்கார வேறுபாடுகளும், தாமே ஒழியும். அப்பொழுது எல்லா மக்களிடமும் மகிழ்ச்சியும், குதூகலமும் குடிகொண்டிருக்கும்.

ஆகையால் நாம் மதத்தின் பெயரால் நடத்தப்படும் எல்லாப் பண்டிகைகளையும் அடியோடு ஒழிக்கவேண்டியது அவசியமாகும். இப்பொழுது வருந் தீபாவளிப் பண்டிகையைச் சுயமரியாதைக்காரர்கள் எல்லோரும் பகிஷ்கரிக்கவேண்டியது அவசியமாகும். ஆகையால்மற்றவர்களுக்கும்பண்டிகை நாட்களால் வரும் தீமைகளைஎடுத்துக்கூறி அவர்களையும்பகிஷ்கரிககச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

சகோதரி M. சீதாலெட்சுமி
என்னும் கிரிஜாதேவி அவர்கள்
இயற்றிய

மோகனரஞ்சினி

அல்லது

சமூகத்தோற்றம்

என்னும் சீர்திருத்தநாவல்

எளிய தமிழ்! இனிய நடை!!
சிறந்தபொருள் !!!

பால்யமணம், ஆண்பெண், ஒருவருக்கொருவர் பிரியமில்லாது பெற்றோர் கட்டாயத்தின் மேல் நடத்தப்படும் மணங்களின் கதி, விதவைகளின் பரிதாபநிலை, பெண்களுக்கேற்படும் பலவிதமான துன்பங்கள், மதச் சட்டங்களின் கொடுமை, புரோகிதர்களின் வஞ்சகம், மடாதிபதி மோசம், ஜாதிக் கர்வம் முதலிய பற்பல விஷயங்கள் ஒவ்வொருவரையும் உண்மை மனிதராக்கும் சக்திவாய்ந்த இந்நாவலை சிறுவர் முதல் விருத்தர் வரையிலும் அவசியம் வாசிக்கவேண்டியது. சமூக முன்னேற்றங்கருதி 230 பக்கங்கள் கொண்ட அழகிய புத்தகத்தின் விலை ரூபாய் 1—0—0.

விலாசம்:—
சி. வ. பாலகிருஷ்ணன்,
88 அவதானம் பாப்பையர்தெரு
வேப்பேரி, சென்னை.

மதிப்புரைகள்.

ஈப்போவில் பிரசுரிக்கப் படும் "தமிழன்" என்னும் தமிழ் தினசரி பத்திரிகையின் வெளியீடுகள் வரப்பெற்றோம். இப்பத்திரிகையானது தேசத்திற்கும், மக்கள் சுயமரியாதைக்கும் வெகு காலமாக உழைத்து வரும் பெரியார் உயர்திரு. சுவாமி அற்புதானந்தா அவர்களை ஆசிரியராகக் கொண்டுள்ளது.

சமூக ஊழியமும், சமூக சீர்திருத்தமும் புரிவதே இப்பத்திரிகையின் பொது நோக்கமாயிருந்த போதிலும், தீண்டாதார், ஏழை, எளியவர்களின் குறைகளை முக்கியமாகத் தீர்ப்பதற்காக வெளிவந்துலாவும், ஓர்சிறந்த தமிழ் தினசரி இதுவேயாகும். தமிழ் மக்களுக்குள் புகுத்தப் பட்டிருக்கும் சாதிமத வித்தியாசங்களையும், பிறவியினாலேற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் கண்டித்து, தீண்டாமை, நெருங்காமை, பாராமை முதலிய அட்டூழியங்களை அறவே யழித்து, கலப்பு மணம், விதவை மணம், புரோகிதமற்ற மணம், புரோகிதமற்ற ஈமக்கடன் முதலியவைகளை ஆதரித்து, மக்களின் பகுத்தறிவை வளர்த்து, அவர்கள் முன்னேற்ற மடையும்படியான துறைகளில் ஈடுபட்டுழைத்தலு மாகிய அரிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, பாடுபட முன்வந்ததற்காக நாம் அதை முழு மனதுடனும் வரவேற்பதுடன், நமது வாசகர்களையும், இப்பத்திரிகைக்கு உடனே சந்தாதாரர்களாகச் சேர்ந்து, ஆதரிக்கவேணுமாய்க்கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நாடெங்கும் பணநெருக்கடியால் அல்லலுற்று, பரிதபித்துக் கொண்டிருக்கு மிக்காலத்தில், இத்தருணத்தில் நாடெங்கும் சமதர்மக் கொள்கைகளைப் பரப்பி, பாமரமக்களைத் தட்டியெழுப்பி, உற்சாகப் படுத்துவதற்காக முன்வந்த "தமிழ"னின்நிர்வாகஸ்தர்களுக்கு நமது வந்தனத்தை அளித்துக் கொள்ளுகின்றோம்

சுயமரியாதை இயக்கத்தை ஆதரித்து, மலாய் தேசத்தில் முதன்முதலாக வெளிவந்த தமிழ் தினசரி இதுவொன்றேயாகும்.

மாத சந்தா 1 ரிங்கி.
கிடைக்குமிடம்:—
மானேஜர்
"தமிழன்" தினசரி,
10, ஜெல்ப்ரோட்,
ஈப்போ.

தேசபக்தன்.

தேசபக்தன் என்னும் ஒருவாரப்பத்திரிகை சென்னை திரு. தண்டபாணி அவர்களால் துவக்கப்பட்டிருப்பதின் முதல் இரண்டு இதழ்கள் வரப்பெற்றோம். அவற்றின் முதல் இதழில் தனது கொள்கையைக் குறிப்பதில்,

"இப்போது தேசம் நெருக்கடியான சமயத்திலிருப்பதாலும் வெண்ணை திரண்டுவரும் சமயம் தாழியை உடைக்க சிலர் சதிகொண்டுபடியாத மக்களையும், ஏழைகளையும் ஏமாற்றி தேச காரியத்தையும் கெடுத்து மக்களின் கண்ணில் மண்ணைத்தூவி வேற்றுமையை வளர்க்க விரும்பினாலும் நாமினி வாளாவிருத்தல் கூடாதென நம்மாலான தேசபணி செய்ய முன் வந்துள்ளோம்" என்று காணப்படுகிறது.

இதன் விலை மூன்று பைசா.
விலாசம்:—
மானேஜர். தேசபக்தன்,
46. பிடாரியர் கோவில் தெரு,
சென்னை.

"விநோத விகடன்"

சென்னையினின்று புதுவை, திரு. நடராஜன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "விநோத விகடன்" என்றவாரப் பத்திரிகையின் முதல் இதழ்கள் வரப் பெற்றோம். இதில் பல சமூக, ராஜீய, மத விஷயங்கள் ஹாஸ்ய ரூபமாகவும், சம்பாஷணை ரூபமாகவும காணப்படுகின்றன. சாதாரண மக்களுக்குப் புத்தி புகட்டக் கூடிய பல துண்டுத் துணுக்குகளும், பழமொழிகளும் காணப்படுகின்றன. விகடன் சீர்திருத்தத் துறையில் முற்போக்குடன், தீவிர தொண்டாற்ற முனையுமென்று நம்புகிறோம்.

தனிப்பிரதி காலணா.
வருட சந்தா ரூ. 1—8—0
"விநோத விகடன்" ஆபீஸ்.
5. முருகப்பன் தெரு.
சென்னை.

இற்றலப் புரட்சி அல்லது கரிபால்டி

திரு. ஏ. எஸ். ஆனந்தம் அவர்களால் இயற்றப் பெற்ற மேற்கண்ட புஸ்தகம் ஒன்று வரப் பெற்றோம். இதில் இட்டாலி தேசத்து வாலிபர்களைத் தட்டி எழுப்பி, வீர உணர்ச்சியை உண்டாக்கி தன் தேசம் சுயேச்சை பெற அரிய தியாகம் செய்த வீரர் திரு. ஜோசப் கரிபால்டியின் பிறப்பு, வளர்ப்பு, நாட்டின் சுதந்திரத்திற்காக செய்த தியாகம் முதலியன விளக்கப்பட்டிருக்கின்றன. விலை அணா ஒன்று.

கிடைக்குமிடம்.
மானேஜர்,
"வெடிகுண்டு"
மதுரை.

உடற்பயிற்சி விளக்கம்.

வலம்புரி. திரு. ஆவி. சித. சொக்கலிங்கம் அவர்களால்இயற்றப் பட்ட மேற்கண்ட புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். உடற்பயிற்சியிற் தேர்ச்சி பெற்ற இதன் ஆசிரியர் உடலை நோயில்லாது, ஆரோக்கியத்துடன் வளர்க்க ஏதுவான முறைகளை விளக்கியும், தேகாப்பியாசங்களின் அவசியத்தை வற்புறுத்தியும, இனிய எளிய தமிழில் அனுபவ சாத்தியமான முறைகளை யாவரும் உணரும்படி எழுதியுள்ளார். திடசரீரிகளாய், ஆரோக்கியத்துடன் வாழ வேண்டுவது அவசியமாதலால் இத்தகைய அரிய நூலை ஒவ்வொருவரும் படித்துப் பயன் பெற வேண்டுகிறோம்.

இதன் விலை அணா 6.
கிடைக்குமிடம்:-
லெ. ரோமசுந்திரம் செட்டியார்,
கீழச்சீவற்பட்டி.

"இந்தியா" வாரப் பதிப்பு.

"இந்தியா" வாரப் பதிப்பின் இதழ் ஒன்று வரப் பெற்றோம். அதில் நல்ல வழு வழுப்பான காகிதத்தில் ஆர்ட் பேப்பர் சித்ர படங்களுடன் பல தேசீய ராஜீய கட்டுரைகளுடன் செய்திகளும் மாதர் பகுதி, சிறுவர் பகுதி, ஹாஸ்ய பகுதி முதலிய பல பிரிவுகளும் அறிஞர்களாலும் ஆராய்ச்சியாளர்களாலும் எழுதப்பட்ட பல ஆராய்ச்சி விஷயங்களும் காணப்படுகின்றன.

தனிப்பிரதி விலை அணா 2.
வருட சந்தா ரூ. 6-0-0
கிடைக்குமிடம்:-
மானேஜர், "இந்தியா"
11, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு,
மவுண்ட் ரோடு, சென்னை.

'சுயமரியாதை' கீர்த்தனாம்ருதம்.

மேற்குறித்த பெயருடைய ஒரு புத்தகம் சேலம் திரு. மு. சு. சதாசிவ மவர்களால் நமது பார்வைக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. இப்புத்தகத்தின் ஆசிரியர் பாளையங்கோட்டை திரு. பி. நா. சுப்பையா அவர்களாவார்கள். இப்புத்தகத்தில் புராணப்புரட்டு காந்திப்புரட்டு, மதப் புரட்டு, புரோகிதப் புரட்டு, ஆகிய வெகு நாள் புரட்டுகளை வெளிப் படுத்துவதோடு, ஆண் பெண், சமத்துவம் பொதுவுடைமை ஆகிய சுயமரியாதைக்கொள்கைகளை அடிப் படையாகக் கொண்டு புதிய வர்ணமெட்டுகளால் பாடியிருக்கிறார், இப்புத்தகத்திற்கு திரு: எஸ். குருசாமி பி. ஏ. அவர்கள் முகவுரை எழுதியிருக்கிறார். இப்புத்தகம் வேண்டுவோர்,

மு. சு, சதாசிவம்.
நெ. 20. பிரிஜ் தெரு,
ஸ்லேவ் ஐஸ்லெண்டு,
கொளும்பு.

என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

பண்டிகைகள் ஒழிந்தால் பகுத்தறிவு வளரும்.

விற்பனைக்குத்தயார்.

)O(

டியூடர் செடன் போர்டு மோட்டார் கார் 1928 மாடல்.

ஷை வண்டியானது விற்பனைக்குத் தயாராகயிருக்கின்றது. பார்வையிட விரும்புகின்றவர்கள் கீழ்கண்ட விலாசத்தில் அந்த வண்டியை பார்வையிடலாம்.

விலாசம்:—

எலக்ட்ரிக் ஸ்விச்சிங் ஸ்டேஷன்,
பெருந்துறை பழைய டோல் கேட் சமீபம்,
ஈரோடு.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்க வீடும், படிக்க கல்வியும் அடைந்தே போதும். இதற்குத் தான் எல்லா கட்சியாரும், அரசியல்களும் பாடுபடவேண்டும். இதை விட்டு விட்டு, கடவுளைப் பற்றியும், ஜாதியைப்பற்றியும் வீண்வாதமிட்டு, எளியோரை மயக்குவது மனிதரை துரோகம் செய்வதாகும். 'கடவுள்' மறைந்தவர் என்று சொன்னால், அல்லது மறைபொருளென்றாலும், அதைப்பற்றி ஏன் விசாரப்படவேண்டும்? உலகத்தை கற்பித வார்த்தைகளால் மயக்குங்காலம் போய்விட்டது. ஜாதியும் அதன் கதியே. உலகில் நிற்பதும், நிற்க போவதும், பசியும், பிணியும், அறியாமையுமே. இம்மூன்றையும் பெரும்பான்மையோரிடமிருந்து போக்க அனேக காலம் அனேகருக்கு பிடிக்கும். இந்த துறையில், நாம் ஈடுபடுவதுதான் புருஷத்தனமாகும். இது விஷயமாக சுயமரியாதைக் காரருக்கு பின்வரும் திட்டத்தை அமைக்க முன்வந்தோம். அதில் பூரணமுள்ளதாயின், அதனை கையாளவேண்டிக் கொள்கின்றோம்.

இந்திய சமதர்ம கட்சி.

1. சுயமரியாதைக்கட்சி, இனி, 'சமதர்ம' கட்சி என்று வழங்கப்படும்.

2. இதன் நோக்கங்களாவன [1] இந்தியாவிலுள்ள யாவரும் போதுமான உணவும், ஆடையும், வீடும் பெறவேண்டிய வழிகளை ஏற்படுத்தல் (2) முக்கியமாக நிலங்களையும், தொழிற்சாலைகளையும், வீடுகளையும், பாங்கி முதலிய வர்த்தக ஸ்தாபனங்களையும், போக்குவரத்து பெரும் சாதனங்களையும் பொதுவுடமையாக்க முயற்சித்தல்.

3. யாவருக்கும் தொழில் இருக்கும் படியான வசதிகளை உண்டாக்குதல்.

4. தொழிற்சாலைகளை, அதில் தொழில் செய்வோர் ஆட்சியில் வைத்து நடத்தும் முறையை ஆதரித்தல்.

5. ஒவ்வொரு கிராமங்களிலும், மதவேற்றுமை, ஜாதிவேற்றுமையை நீக்கி, யாவரும் கிராமநடவடிக்கைகளை பொது திட்டங்கள்படி நடத்தல்.

6. அரசியலின் காலத்திற்கும், சமயத்திற்கும் தக்கவாறு பொது உடமைக்குரிய நடவடிக்கைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரச் செய்தல். ஆரம்ப கல்வியும் உயர்தரக் கல்வியும் இலவசமாக யாவரும் பெறும் வகைகளை ஸ்தாபித்தல்.

7. உத்தியோக முறைமையிலும், பொதுஜன முறையிலும், ஜாதி சமய கோட்பாடுகளை முற்றிலும் விலக்கி மதத்திற்கும் ஜாதிக்கும் யாதொரு ஆதரவுமில்லாமற் செய்தல்.

8. அரசியல் சகல துறைகளிலும் நுழைந்து சமதர்மக் கொள்கைகளை பாராட்டச்செய்தல்.

9. தேசியத்தை ஒழித்து அகில தேச கூட்டுறவை நாடுதல்.

10. சமதர்ம கட்சியார் அரசாங்கத்தில் உத்தியோகத்தைப் பெற்றால் அதன் பலனாக பெரும்வருமானத்தில் மாதம் 50 ரூபாயிக்குமேல் தங்கள் சொந்தச்செலவுக்கு எடுத்துக்கொள்ளாமல் மீதியை கட்சிக்கே சேர்த்துவிடவேண்டும்.

11. சமதர்மம் தேசத்தில் நிலைக்கும்வரை அந்தந்த தொழிலாளருக்கு தகுந்த பிரதிநிதித்துவம் சட்டசபைகளில் பெற ஆதரவு அளித்தல்.

12. எந்த கட்சியிலேயும், எந்த அரசியல் துறையிலேயும் புகுந்து சமதர்மக்கொள்கைகளை அங்கீகரிக்க முயற்சித்தல் இதற்கு மாறாகவுள்ள நடவடிக்கைகளை எதிர்த்து வாதித்தல்.

13. ஸ்திரி புருஷாள் எத்தொழிலையும் செய்து பிழைக்க சம உரிமை உண்டாக்கி அவர்களுக்குத் தற்போது இருந்து வரும் சமூக வித்தியாசங்களையும், பொருளாதார வித்தியாசத்தையும் போக்கி சம உரிமையை ஏற்படுத்தல்.

14. பிறந்த குழந்தைகளை பொது ஜன சமூக ஆதரவில் கொண்டுவந்து இரட்சித்தல்.

15. நவீன நூல்களை பாஷை வித்தியாசமின்றி கற்பித்தல். மெய்ஞான நூல்களை தமிழில் மொழிபெயர்த்தல்.

16. உலகில், பல அரசாங்கங்கள் போர்க்களத்துக்கு வேண்டிய ஆயுதங்களை உலக நாசத்திற்கு தயாரித்து வருவதை தடுத்து தொழில் அபிவிர்த்திகளில் கவனத்தை செலுத்தி உலகத்தை சண்டையினின்று விலக்க வேண்டி முயற்சித்தல்.

குறிப்பு:— இந்த திட்டத்திற்குறிய நடவடிக்கைகளை அமுலுக்கு கொண்டுவர, பிரதி கிராமங்களிலும், தாலூக்காக்களிலும், பட்டணங்களிலும் சங்கங்களையும், கிளைச்சங்கங்களையும் உபசங்கங்களையும் ஏற்படுத்தி அன்றடம் உழைக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

மைலாப்பூர் நாடார் சங்கம்

6-10-31 தேதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு மைலாப்பூர் நாடார் சங்கவிசேஷக்கூட்டம்நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. ஏ.கே. குமரகுருபர ஆதித்தன் நாடார் அவர்கள் தலைமை வகித்தார்கள். பல அறிஞர்கள் பேசினார்கள். பின் பல தீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஓர் சுயமரியாதை சீர்திருத்த நாடகம்.

11-10-31ம் தேதி இராசிபுரம் சேணியத்தெருவு வாலிபர் முன்னேற்ற வாசகசாலை மாணவர்களால் கோலாட்டவிழா வெகு விமரிசையாய் நடைபெற்றது. பின்பு டி. னைட்ஸ்கூல் மாணவர்களால் அன்றிரவு 8 மணிக்குமேல் ஓர் சுயமரியாதை சீர்திருத்த நாடகம் (சுதந்திர வெற்றி) என்னும் நாடகம் நடத்தப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

வைட்டமின் (Vitamin) என்னும் ஜீவசத்துப்பொருள்.

(மயிலை. சீனி. வேங்கடசாமி)

மனித உணவைப் பற்றிய ஆராய்ச்சியில் நூதனமாகக் கண்டறியப் பட்டிருக்கும் பொருள் வைட்டமின் என்னும் ஜீவசத்துப் பொருளாகும். இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டவரையில் நான்கு விதமான ஜீவசத்துப்பொருள்கள் உண்டு. இன்னும் கண்டு பிடிக்கப்படாத ஜீவசத்துப்பொருள்கள் அனேகம் இருக்கின்றன. இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நான்கு வகை ஜீவசத்துப்பொருள்களும் தேக சுகத்துக்கு மிகவும் இன்றியமையாதவை. ஆகையால் அந்த ஜீவசத்துப்பொருள்களின் தன்மைகளையும் எந்தெந்த உணவுப்பொருள்களில் எந்தெந்த ஜீவசத்து இருக்கின்றதென்பதையும் இங்கு எழுதுவோம்.

ஜீவசத்துப்பொருள்கள் மனிதர் உடல் நலம் பெற்று சௌக்கியமாயிருப்பதற்கு மிகவும் இன்றியமையாதனவாகும். ஜீவசத்துப்பொருள்களில் முக்கியமானவை நான்கு விதம் என்று சொன்னோம். அவை ஆங்கிலத்தில் Vitamins A. B, C and D என்று சொல்லப்படும். இவைகளைத் தமிழில் 1-வது ஜீவசத்து, 2-வது ஜீவசத்து, 3-வது ஜீவசத்து, 4-வது ஜீவசத்து என்று சொல்லுவோம். இந்த நான்குவகை ஜீவசத்துப்பொருள்களில் உட்பிரிவுகளும் சில உண்டு. அந்த உட்பிரிவுகளைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை. ஆதலின் பொதுவாக ஜீவசத்துப்பொருள்களைப்பற்றி இங்கு ஆராய்வோம்.

Vitamin A என்னும் 1-வது ஜீவசத்து கண்களுக்கும், நுரையீரலுக்கும் (சுவாசப்பை) தீனிப்பைக்கும் குடல்களுக்கும் பலம் கொடுக்கிறது.

Vitamin B என்னும் 2-வது ஜீவசத்து மூளைக்கும், நரம்புகளுக்கும், தசை நார்களை முதலியவைகளுக்கும், இருதயம், தீனிப்பை, குடல்கள் இவற்றின் தசை நார்களுக்கும் (Muscles) உரமளிக்கிறது.

Vitamin C என்னும் 3-வது ஜீவசத்து இரத்தத்தில் வேலை செய்து உடம்பை நன்னிலையில் வைக்கிறது.

Vitamin D என்னும் 4-வது ஜீவசத்து தேகத்திலுள்ள எலும்புகளையும் பற்களையும், பலப்படுத்துகிறது.

மேற் சொல்லப்பட்ட ஜீவசத்துப்பொருள்கள், நாம் உண்ணும் ஆகாரப்பொருள்களில் கலந்திருக்கின்றன. ஆனால் ஒரே ஆகாரப்பொருளில் எல்லா ஜீவசத்துக்களையும் காண்பது அரிது. ஒரு உணவுப் பொருளில் இருக்கும் ஜீவசத்து இன்னொரு உணவுப் பொருளில் காணப்படுவதில்லை. இன்னொரு உணவுப்பொருளில் இருக்கும் ஜீவசத்து வேறொரு ஆகாரப்பொருளில் காணப்படுவதில்லை. இன்னும் உணவுப்பொருள்களைச் சமைக்கும் போது அவற்றிலுள்ள ஜீவசத்துக்கள் பெரும்பாலும் கழிந்துபோகின்றன. ஆகவே ஜீவசத்துக்கள் நீங்கிவிடாதபடி சமைக்கும் விதத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதைப்பற்றியும் இங்கு எழுதுவோம்.

1-வது ஜீவசத்து Vitamin A:- இது முதன்மையானதும் முக்கியமானதுமான ஜீவசத்துப்பொருள் தொத்து வியாதிகளைத்தடுப்பதற்கு அவசியமாக வேண்டியிருக்கிறது. உடல் நலத்தின் பொருட்டு இது எல்லோருக்கும் இந்த ஜீவசத்து அவசியமானதென்றாலும் முக்கியமாகச் சிறு குழந்தைகளுக்கு இது அத்தியாவசியமானது. ஆகவே கர்ப்பிணிகளுக்கும், தாய்மார்களுக்கும் இந்தஜீவசத்துள்ள ஆகாரங்களை அதிகமாக உண்ணக்கொடுக்கவேண்டும். இந்த ஜீவசத்து கண், நுரையீரல், தீனிப்பை, குடல் ஆகிய உறுப்புகளுக்குப் பலம் தருகிறதென்பதை முன்னமே சொல்லியிருக்கிறோம்.

இந்த ஜீவசத்து சூரிய வெளிச்சத்தில் (Sunlight இருக்கிறது. சூரிய வெளிச்சத்திலிருக்கும் இந்த ஜீவசத்தை மரம், செடி, கொடிகளாகிய தாவரங்கள் இலைகளில் கிரகித்துக்கொள்கின்றன

ஆகவே, பசுமையான இலைதழைகளிலும், கீரைவகைகளிலும் இந்தஜீவசத்து அதிகமாக உண்டு இலைதழைகளைத்தின்று ஜீவிக்கும் ஆடு, மாடு, மான், முயல் முதலிய உறுப்புகளில் இந்த ஜீவசத்து அமைந்து விடுகிறது. இலை தழைகளைத்தின்னும் ஆடு, மாடு, எருமை முதலிய பிராணிகளின் பாலிலும் இந்த ஜீவசத்து கலந்திருக்கிறது. ஆனால் ஒன்று கவனிக்கவேண்டும். பச்சையான இலைதழைகளில் மட்டுந்தான் இந்த ஜீவசத்து இருக்கிறதேதவிர காய்ந்துபோன வைக்கோல், சருகு முதலியவைகளில் இந்த ஜீவசத்து கிடையாது. ஆகவே, காய்ந்த வைக்கோலையும், சருகுகளையும் தின்னும் ஆடு, மாடு, எருமைகளின் பாலில் இந்த ஜீவசத்தை எதிர்பார்க்க முடியாது.

இந்த ஜீவசத்தைப்பற்றித்தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் இன்னொன்று என்னவென்றால், சூடுபட்டால் இந்த ஜீவசத்து அழிந்துபோகிறது என்பதே. அதாவது பாலைச்சூடேற்றிக் காய்ச்சினால் பாலிலுள்ள இந்த 1-வது ஜீவசத்து(Vitamin A) அழிந்து விடுகிறது. இலை, கீரைகளைச்சமைக்கும் போதும் சூடேற்றி வேகவைப்பதினால் அவற்றிலுள்ள இந்த ஜீவசத்து அழிந்துவிடுகிறது. ஆகவே, இலை, கீரைகளைச் சமைக்காமலே சாப்பிடவேண்டும் என்பது டாக்டர்களின் அபிப்பிராயம். இன்னும் இந்த ஜீவசத்து அடியோடு (Vitamin A) உள்ள உணவுப் பொருள்களோடு சோடாமாவைச்சேர்த்துச்சமைத்தாலும் இந்த ஜீவசத்து அடியோடு அழிந்து விடுகிறது. ஆகையால் ஆகாரப் பொருள்களோடு சோடாமாவைச்சேர்த்துச் சமைக்கவேகூடாது.

இந்த 1-வது ஜீவசத்து (Vitamin A) கீழ்க்கண்ட உணவுப்பொருள்களில் அதிகமாகக் காணப்படுகிறது:—மீன் எண்ணெய் (Cod-lever oil), முட்டை, மிஷின் வெண்ணெய், ஈரல் (Liver) குண்டிக்காய் (Kidney), காய்ச்சாத பால், வசலைக்கீரை (Spinach), முட்டைகோஸ் (Cabbage), முதலியன-மஞ்சள் முள்ளங்கி (Carrots), சீமைத் தக்காளி (Tomatoes), முளைவிடப் பட்ட பருப்பு தினுசுகள், மாமிசம் முதலிய மிருகக் கொழுப்புகள் இவைகளிலும் இந்த ஜீவசத்து இருக்கிறது.

இந்த 1-வது ஜீவசத்து (Vitamin A) எல்லோருக்கும் இன்றியமையாதது. குழந்தைகளுக்கு இது அத்தியாவசியமாகையால் தாய்மார் இந்த ஜீவசத்துள்ள ஆகாரத்தை அதிகமாக உட்கொள்ள வேண்டும். கர்ப்பமாயிருக்கும் போது இந்த ஜீவசத்து தாயின் தேகத்திலிருந்து குழந்தையின் தேகத்தில் சேர்கிறது. குழந்தை பிறந்த பிறகும் தாய்ப்பாலைக் குடிப்பதனால், அப்பால் வழியாக இந்த ஜீவசத்து குழந்தையின் தேகத்தில் சேர்கிறது. ஆகையால் தான் கர்ப்பிணிகளும் தாய்மாரும் இந்த ஆகாரத்தை அதிகமாக உட்கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது. தேகத்தில் இந்த ஜீவ சத்துக்குறைந்தால் குழந்தைகள் வளர்ச்சி குன்றி நறுக்கையாகி விடுவார்கள். (Stunting of growth) தேகத்தில் இந்த ஜீவசத்துக் குறைந்தவர்களுக்குக் கண் எரிச்சல், பார்வைமட்டுப்படுதல், க்ஷயம் முதலிய நுரையீரலைப் பற்றிய (சுவாசப் பையைப் பற்றிய) வியாதிகள், பேதி, சீதபேதி முதலிய குடலைப் பற்றிய வியாதிகள் உண்டாகும். அன்றியும் நீர்ப்பையில் கல் உண்டாகும்.

2-வது ஜீவசத்து (Vitamin B.) இது மூளைக்கும், நரம்புகளுக்கும், தசைக் கட்டுகளுக்கும், இருதயம், தீனிப்பை, சிறுகுடல்களின் தசை நார்களுக்கும் பலம் தருகிறது என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். முக்கியமாக, இந்த ஜீவசத்து பழங்களிலும் பருப்பு கொட்டை தானியம் முதலியவைகளிலும் அதிகமாய் காணப்படுகிறது. சிறு பிள்ளைகளின் தேக வளர்ச்சிக்கும், வளர்ந்த மனிதர்களின் தேகத்தில் ஏற்படும் அன்றாடத் தேய்வை நிறப்புவதற்காகவும் இந்த ஜீவசத்து மனிதருக்கு அவசியமானது. ஆகாரம் ஜீரணம் ஆவதற்கும், நரம்புகளும் தோலும் தத்தம் வேலைகளைச் சரிவரச் செய்வதற்கு இந்த ஜீவசத்து தேகத்திற்கு வேண்டியிருக்கிறது. இந்த ஜீவசத்தின் பெரும்பாகம் அதிக வேலை செய்கிற உறுப்புகளுக்கு அத்யாவசியமாயிருக்கிறது. இதனால் தான் இந்த ஜீவ சத்து மனிதர் மிருகங்களின் மூளை, இருதயம், ஈரல், ஜீரண உறுப்புகள் முதலிய பாகங்களில் அதிகமாகக் காணப் படுகிறது.

இந்த ஜீவசத்துகொட்டைகளிலும், தானியங்களிலும் இருக்கிறதென்று சொன்னோம். இன்னும் இலை தலைகளிலும் இது காணப்படுகிறது இலை தழைகளைத் தின்னும் ஆடு, மாடு, எருமைகளின் பாலிலும் இதுகாணப்படுகிறது. அன்றியும் தானியங்களைத் தின்று உயிர் வாழும் கோழி, புறா முதலியவைகளின் முட்டைகளிலும் இந்த ஜீவசத்து அதிகமாய்க் காணப்படுகிறது. ஆனால், தாவரக் கொழுப்புகளாகிய எண்ணெய். தேங்கா எண்ணெய், நிலக்கடலை எண்ணெய், ஆமணக்கு எண்ணெய் போன்றவைகளிலும் மிருகக் கொழுப்பாகிய நெய், வெண்ணெய் போன்றவைகளிலும் இந்த 2-வது ஜீவசத்து Vitamin B) கிடையாது.

நமது முக்கிய உணவாகிய அரிசியின் மேல் உள்ள தவிட்டில் இந்த ஜீவசத்து இருக்கிறது. ஆனால், அரிசியை மிஷினில் குத்தி உபயோகிப்பதனால் அரிசியில் உள்ள தவிடு முழுவதும் நீங்கிப் போய் விடுகிறது. ஆகையால் மிஷின் குத்தல் அரிசியைச் சாப்பிடுவதால் இந்த ஜீவசத்தை நாம் இழந்து விடுகிறோம். கைக்குத்தல் அரிசியில் தவிடு முழுவதும் நீங்கிப் போய் விடுகிறதில்லை. எனவே, மிஷின் குத்தல் அரிசியைச் சாப்பிடாமல் கைக்குத்தல் அரிசியைச் சாப்பிடுவது உடம்புக்கு அதிக நன்மை தரும்.

தவிட்டோடு கூடிய கைக்குத்தல் அரிசியை உபயோகித்தாலும் கூட இந்த ஜீவசத்து போதுமான அளவு நமக்குக் கிடைக்க முடியாது. ஆகையால், சாதத்துடன் இந்தஜீவசத்துள்ள வேறு ஆகாரப் பொருளையும் உபயோகிக்க வேண்டியது அவசியம். அவை பருப்பு தினுசுகள், கீரை, காய் கறிவகைகள் முதலியன. சாதத்துடன்சீமைத் தக்காளிக்காயை (Tomatoes) உபயோகிப்பது மிகவும் சிறந்தது.

கீழ்க்கண்ட உணவுப்பொருள்களில் இந்த ஜீவசத்து அதிகமாகக் காணப் படுகிறது:— முட்டை, ஈரல், சீமைத்தக்காளி, வசலைக்கீரை, தவிடு போக்காத கோதுமை, சோளம், கம்பு, கேழ்வரகு, பட்டாணி, பருப்பு தினுசுகள், வாதுமைப் பருப்பு முதலிய கொட்டை வகைகள் வெங்காயம், மஞ்சள் முள்ளங்கி, ஈளை, பால் முதலியன. இந்த இரண்டாவது ஜீவசத்து (Vitamin B) அழிந்து போகிறதில்லை.

3-வது ஜீவசத்து (Vitamin C) இந்த ஜீவசத்து இரத்தத்தில் வேலை செய்கிறதென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். இரத்தத்தைச் சுத்தமாகவும் சரியான முறையில் வைக்கவும் இது அவசியமாகும். இன்னும் இந்த ஜீவசத்து பலவிதத்திலே தேக சுகத்தைக் காப்பாற்றுகிறது. பற்களை நல்ல நிலைமையில் வைத்திருப்பதற்கும் இது அவசியமானது. இந்த ஜீவசத்து முக்கியமாக கீரை இலைகளிலும் பழவகைகளிலும் காணப் படுகிறது. இந்த ஜீவ சத்து சூடு பட்டால் அழிந்து விடும் தன்மையுடையது. இதனால் கீரைகளைச் சமைத்து உண்பதனால் இந்த ஜீவ சத்தை எதிர்பார்க்க முடியாது. ஆகையால் கீரைகளைச் சமைக்காமலே சாப்பிட வேண்டும் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். கீரைகளைச் சமைக்காமல் சாப்பிட்டுப் பழக்கமில்லாத நாம் தாராளமாகப் பழங்களைச் சாப்பிடலாம்.

இரத்த பலந்தரும் இந்த மூன்றாவது ஜீவசத்து மாமிசம், கொழுப்பு, வெண்ணெய் முதலியவைகளிலும் அரிசி, பருப்பு முதலிய தானியவகைகளிலும், எண்ணெய், தேங்கா எண்ணெய் போன்றவைகளிலும் காணப்படவில்லை. இலை, கீரைகளிலும் பழவகைகளிலும் இது காணப்படுகிறது. இலை கீரைகளையும் சமைத்து விடுவதால் இந்த ஜீவசத்து அழிந்து போகிறது. ஆகையால் பழவகைகளைச் சாப்பிடுவதால் மட்டுமே இந்த ஜீவசத்தை நாம் பெறக்கூடும்.

இரத்த பலந்தரும், மூன்றுவது ஜீவசத்து அதிகமாக உள்ள உணவுப் பொருள்களாவன:— சமைக்கப்படாத வசலைக்கீரை (Spinach), முட்டைகோஸ், லெமன் என்னும் எலுமிச்சப்பழத்தின் ரசம், (எலுமிச்சையில் Lime என்றும் Lemon என்றும் இரண்டு விதம் உண்டு. சாதாரண எலுமிச்சையில் இருப்பதைவிட Lemon என்னும் எலுமிச்சையில் இந்த ஜீவசத்து அதிகமாய் உண்டு). ஆரஞ்சிப்பழ ரசம், சீமைத்தக்காளிபபழம் (Tomatoes), இளசாக உள்ளதும் சமைக்கப்படாததுமான மஞ்சள் முள்ளங்கி, அஞ்சிப்பழ ரசம் முதலியன.

பாலிலும் இந்த ஜீவசத்து இருக்கிறது. ஆனால், பாலைக் காய்ச்சிவிட்டால் இந்த ஜீவசத்து அழிந்துவிடுகிறது. ஆகையால், குழந்தைகளுக்குக் காய்ச்சிய பாலைக் கொடுக்கும் போது அதனுடன் ஆரஞ்சிப்பழ ரசத்தைப் பிழிந்து புகட்டுவது குழந்தைகளின் தேக

சுகத்துக்கு மிகவும் நல்லது.

4-வது ஜீவசத்துப் பொருள் (Vitamin D) இந்த ஜீவசத்து எலும்புகளும், பற்களும் பலமுடைய இன்றியமையாது வேண்டப்படுகிறது என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். இந்த ஜீவசத்து சூரிய வெளிச்சத்தில் ஓடி ஆடி விளையாடுவதால் சூரிய வெளிச்சத்திலுள்ள இந்த ஜீவசத்து அவர்கள் உடம்பில் பாய்ந்து அவர்களின் எலும்புகள் பலமடைய ஏதுவாகிறது. ஆனால், சிறுவர்களைக் கடும் வெயிலில் இதற்காக விளையாட விடுவது தவறு என்பதையும் கவனிக்கவேண்டும். சூரிய வெளிச்சத்திலுள்ள இந்த ஜீவசத்தை (Vitamin D) தாவரங்கள் கிரகித்து இலைகளில் சேர்த்து வைக்கின்றன. ஆகவே, அந்த இலை தழைகளைத்தின்னும் மிருகங்களின் உறுப்புகளிலும் இந்த ஜீவசத்து காணப்படுகிறது.

இந்தியாவில் சூரிய வெளிச்சம் போதுமான அளவு இருப்பதனால் இந்தியர்களுக்கு எலும்பைப்பற்றிய வியாதிகள் அதிகமாகக் காணப்படுவதில்லை. சூரிய வெளிச்சம் போதுமான அளவு இல்லாத ஐரோப்பா போன்ற கண்டங்களில போதுமான அளவு சூரிய வெளிச்சம் இல்லாதபடியால் அங்கு எலும்பைப்பற்றிய நோய்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அத்தேசங்களில் வெய்யிலில் காய்வதற்கென்றே Sun Bath] பல சங்கங்களும் சாலைகளும அமைக்கப்பட்டிருக்கின்றன. அச்சங்கங்களில் சேர்ந்தவர்கள் வெய்யில் காயும்போது வெற்றுடம்புடன் தரையில் சாய்ந்தும், கிடந்தும் உடம்பில் சூரிய வெளிச்சத்தை ஏற்றுகிறார்கள். ஆனால், இந்தியாவில வசிக்கும் நமக்கு அவ்விதமுறைகள் அவசியமில்லை. ஆனால், கோஷா எனப்படும் படுதாமுறையை அனுசரிப்பவர்கள் சூரிய வெளிச்சம்படாத இருட்டறையில் இருப்பதால் அவர்களுக்கு எலும்பைப்பற்றிய ரோகங்கள் காணப்படக்கூடும். ஆகவே, அவர்கள் இந்த 4-வது ஜீவசத்து Vitamin D உள்ள ஆகாரப் பொருள்களை உண்ண வேண்டும்.

இந்த ஜீவசத்து Cod-Lever oil என்னும் மீன் எண்ணெயில் அதிகமாகக் காணப்படுகிறது. வெண்ணெய், முட்டையின் மஞ்சட்கரு, ஈரல், இவைகளிலும் சிறிதளவு இந்த ஜீவசத்து இருக்கிறது. ஆனால், காட்லீவர் ஆயில் என்னும் மீன் எண்ணெயில் தான் இது அதிகமாகக்காணப்படுகிறது. மேற்சொல்லப்பட்ட நான்கு வகை ஜீவசத்துக்களும் நாம் உண்ணும் ஆகாரத்தில் கலந்திருந்தால் நமது தேகம் சௌக்கியமாகவும் திடமாகவும் இருக்கும், தேகசுகத்தை விரும்புவோர் இதனை ஆராய்ந்து அனுசரிப்பாராக. இன்னும் Vitamin E, என்னும் 5-வது ஜீவசத்து ஒன்று உண்டு அது பிள்ளை உற்பத்தியைத்தரத்தக்கது என்று சொல்லுகிறார்கள். இந்த 5-வது ஜீவசத்து கோதுமை மூளையிலும் ஈரல் என்னும் [Liver] என்னும் மாமிசத்திலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தென் இந்தியாவில் கோதுமையை உணவாக உபயோகிப்பதில்லையாகையால் கோதுமை மூளையை உண்பவர் கிடையாது. ஆனால், மாமிசம் உண்போர் தென் இந்தியாவில் இருக்கிறார்கள். இதனால் தான், மரக்கறி ஆகாரம் உண்பவர்களை விட மாமிச உணவு சாப்பிடுகிறவர்களுக்கு அதிகமான குழந்தைகள் பிறக்கின்றன என்று சொல்லுகிறார்கள். இதனால் மாமிசம் உண்போர் 5-வது ஜீவசத்து [Vitamin E.] உள்ள ஈரல் என்னும் மாமிசத்தை அடிக்கடி உண்பதினால் அவர்களுக்கு அதிக குழந்தைகள் பிறப்பதாகவும், மரக்கறி உண்போர் இந்த ஜீவசத்து உள்ள கோதுமை மூளையைக்கூட உபயோகிக்காமலிருப்பதால் அவர்களுக்குக் குழந்தைகள் அதிகமாகப் பிறக்கிறதில்லை என்றும் ஏற்படுகிறது.

———

(5ம் பக்கத்தொடர்ச்சி)

கைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதற்கு நம் அவர்களுக்குள்ள ஏதாவதொரு மதபக்தியோ அல்லது மத நம்பிக்கையோ தான்காரணமாகுமெனவும்யெண்ணிக்கொள்ளுவோம்.

திருவாளர்கள் ராம்மோஹன் ராய், கேசப்சந்தர்சென், ஈஸ்வரசந்தர் வித்தியாசாகர், வீரேசலிங்கம், விவேகானந்தா, மகாத்மா காந்தி, ரவீந்திரநாத் டாகூர், ஆகியவர்களைப்போன்றவர்களும், இன்னும் ஏனைய சீர்திருத்தவாதிகளும் வெற்றியடைவதற்கு அடிப்படையான காரணமாயிருந்ததும்மதந்தான்யெனயெண்ணி அம்மதத்திற்கு கௌரவத்தையும், கீர்த்தியையும், செல்வாக்கையும் வேண்டுமானால், நாம் ஒப்புக்கொள்ளலாம்.

மதத்தால் நாமடைந்துகொண்டுவந்த இலாபங்களைமட்டும் மேல் கண்டவிஷயங்களில் இருந்து நாமிதுவரையிலும் கணக்கிட்டுக கொண்டுவந்திருக்கிறோம் என்று வைத்துக்கொண்டு இனி மேலால் அதே மதத்தால் நமக்கு ஏற்பட்ட, நஷ்டமுண்டாக்கிய நஷ்டங்களையும் கவனிக்கும்படியாக நான் தங்களை வேண்டிக்கொள்ளுகின்றேன். தாழ்த்தப்பட்டிருக்கும் மக்களை, மதத்தின் பெயரால் உயர்த்துவதாகக் கூறிக்கொண்டு, பிரசாரம் செய்துகொண்டுவரும்ஒவ்வொரு ரவீந்திரநாதர்களுக்கும் ஆயிரக்கணக்கான குண்டர்கள் தங்களுடையமதத்தைக் காப்பாற்றுவதற்காகவும், இரக்ஷிப்பதற்காகவும் என்றே கொள்ளையடிக்கவும், சூறையாடவும், கொலைசெய்யவும் வெறியுடன் பிரவேசிக்கின்றார்கள்.

மகாத்மாகாந்தி அவர்கள், கடவுளை தனக்கு உதவிபுரியும்படியாக வேண்டிக்கொள்ளும் ஒவ்வொரு சமயங்களிலும், இரத்தவெறி பிடித்த மதப்பிரியர்களைத் திருப்திசெய்விப்பதற்காக ? வண்டி ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியிடப்பட்டு வருகின்றன.

மக்கள் யாவரும் சிநேகமாகவும், அன்னியோன்னியமாகவுமிருக்க வேண்டுமென மகாத்மா காந்தி அவர்களால் மழமழப்பாகவும், இனிமையாகவும் கூறப்படுவதற்கு மதமே காரணமாக விளங்கினால், அப்பொழுது கான்பூர் கலவரத்தின் போது நடைபெற்ற குரூரமானதும், இரத்த மயமானதுமான சம்பவங்களுக்கும் அதே தான்காரணமாகுமல்லவா?

தாழ்த்தப்பட்ட மக்களின்மீது இரக்கத்தையும், பரிதாபத்தையும், மன உருக்கத்தையும் திரு. ரவீந்திரநாத் டாகூர் அவர்கள் வெளிப் படுத்துவதற்கு மதபக்தியும், மத ஆவேசமும்காரணமாகுமானால், அப்பொழுது சிட்டகாங் பிரதேசத்தில் எல்லாவிதப் பாவங்களையும் அஞ்சாமல் செய்கின்றவர்களையும், மக்களின் கழுத்துகளை சலியாது அறுத்துக் கொண்டு வருபவர்களையும் உண்டாக்கியதற்கு அது காரணமாகாதா?

மதம் அவைகளுக்குக் காரணமாகாதெனவும், ஆனால் அம்மதத்தையே நாம் தப்பிதமாக உணர்ந்து, அனர்த்தம் செய்து கொண்டு வந்ததினால் தான் இத்தகைய கொலைகளும், வீடுகளுக்கு நெருப்பிட்டுக் கொளுத்திய செய்கைகளும் தோன்றுவதற்குக் காரணமாகயிருந்ததெனவும், மதத்தைச் சரி வரவும், குற்றமின்றியும் உணர்ந்ததின் காரணமாகத் தான் காந்திகளும், தாகூர்களும் தோன்றினார்களென உரைத்து வெறும் வேஷம் போடுவதினால் மட்டு மேற்படக் கூடியபலனொன்றுமில்லையே.

மகாத்மாக்களால் எவ்வளவு உருக்கமாகவும், ஆவலாகவும் மதங்களின் நாமதேயங்கள் கூறப்பட்டு வருகின்றதோ அவ்வளவு உருக்கமாகவும், ஆவலாகவுந்தான் எத்தகைய பழிபாவங்களுக்கு மஞ்சாப்பாதகர்களாலும் சமாதானம் கூறப்பட்டுவருகின்றது. மதபக்தியால்நிரம்பியுள்ளவர்களும், மத வைராக்கியம் பூண்டவர்களும் தாகூர் தங்களைச்சேர்ந்தவரெனவும், சொந்தமானவரெனவும் கூறுவதாயிருந்தால், குண்டர்களின் உத்தர வாதத்தையும், காரியப் பொறுப்பையும் அவர்கள் ஏற்று, அங்கீகாரம் செய்து தான் தீர வேண்டும். சில சீர்திருத்த வாதிகளின் செய்கைகளுக்கும், வெற்றிக்கும் மதம் தான் காரணமென யெண்ணி, கௌரவத்தையும், செல்வாக்கையும், மதிப்பையும் "மாடர்ன் ரிவ்யூ" என்னும் பத்திரிகையானது அம்மதத்திற்கு அளிக்குமேயானால், அப்பொழுது, பரிசுத்தமாக கருதப்படும் மதத்தின் பெயரால் ஒருகாலத்தில் சிலுவையின் காரணமாய் கிறிஸ்துவர்களால்செய்யப்பட்ட க்ருசேட்யுத்தங்களினுடையவும், ஏனையமதங்களின் பேரால்நடைபெற்றுவந்தஜிகாத்முதலிய யுத்தங்களினுடையவும் உத்தரவாதத்தையும், பொறுப்பையும்கூட ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதுடன் மதத்தின் பெயரால் நடைபெற்ற சித்தர வதைகள், சிறைவாசங்கள், தோலை உரித்தெடுத்தல், நெருப்பிலிட்டுவாட்டுதல் ஆகிய செய்கைகளின் பொறுப்பையும் உத்தரவாதத்தையும்கூட ஏற்றுக் கொள்ளவும், ஒப்புக் கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும்.

கடைசியாக, சுயமரியாதை இயக்கமானது பிராமணர்களுக்கு விரோதமாக இருப்பதாகக் கூறப்படும் தங்களுடைய ஆட்சேபனையானது உண்மையானக் கூற்றாகாதென்பதை எடுத்துரைக்க அனுமதியளிக்க வேண்டுகிறேன். மத சம்பந்தமாக நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானத்தில் பிராமணன் என்னும் பெயரே அதில் குறிப்பிடப் படவேயில்லை. கர்ண பரம்பரையாக ஏனைய மக்களின் மீது பிராமணர்களால் செலுத்தப்பட்டு வரும் ஆதிக்கத்திற்கு உதவியளித்துக் கொண்டு வரக்கூடிய பிராமணீயத் தன்மையை அறவே ஒழித்தாலல்லாமல் தீன்

டாமையைப் போக்குவது சாத்தியமாகாதென வருணாச்சிரமத்தைக் குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது உறுதியாய்கூறுகின்றது. சுயமரியாதை இயக்கமானது பத்ததிகளையும், முறைகளையு மட்டும் தாக்குகின்றதேயல்லாமல் மக்களைத் தாக்கவில்லை. வருணாச்சிரமத் தருமத்தை நிராகரித்தும், துரத்தியுமடித்தவர்களுமான பிராமணர்கள் எல்லாரும் எங்களுடைய கூட்டாளிகளே யாவார்கள்.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பானங்களை அறிந்து கொள்ளுவதில் அதிக ஊக்க முள்ளவர்களாகக் காணப்பட்டு வருவதனாலுமே தான் மதத்தின் போராலும், ஜாதியின் போராலும் யேற்படுத்தப் பட்டிருக்கும் அனேககொடிய தடைகளும், நிர்ப்பந்தங்களும் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டே வந்து, தங்களுடைய ஜாதியைச் சாராத ஏனைய வகுப்பினர்கள்பார்த்துக் கொண்டிருக்கும் போதும், அவர்களுக்கு எதிரிலேயும், அவர்களுடன் கலந்தும், அவர்களுக்குச் சமமாகவும் உட்கார்ந்து அதாவது சமபந்தி போஜனம் செய்ய ஆரம்பித்திருக்கின்றார்கள்.

(தொடரும்.)

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

களை அடிப்படையாக வைத்து அவர்கள் தலையில் மற்ற சமூகங்களை கோபுரம்போல் படிப்படியாய் வைத்து இருக்கிறபடியால் தொழிலாளர்கள் உணர்ச்சிபெற்று தலை தூக்கும்போது மற்ற சமூகத்தார் தலை கீழாக வீழ்ச்சி அடைய வேண்டியவர்களாகின்றார்கள். தொழிலாளர் இயக்கமானது ஒரு தேசத்தை மாத்திரம் பொறுத்ததாய் இல்லாமல் சகல தேசங்களிலும் ஒரே விதமாக வியாபித்திருந்தபோதிலும் ஒவ்வொரு தேசத்து தொழிலாளர்களும் முதன் முதலாக அந்தந்த தேசத்து முதலாளிகளுடன் மாத்திரம் தான் போர் தொடங்கமுடியும்.

இதுவரையில் தொழிலாளர்கள் இயக்கத்தின் அபிவிர்த்தியை மேற்கண்டபடி விவரித்து வந்ததில் தற்காலம் அமைக்கப்பட்டிருக்கும் சமூகத்தில் உட் கலகங்கள் விருத்தியாகி வருவதையும் அக்கலகங்கள் நாளுக்கு நாள் முற்றி முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் நடக்கும் ஒரு பெரும் போராட்டமாக முடிவதையும் அப்போரின் பயனாக ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டு தொழிலாளிகளின் ஆதிக்கம் ஆரம்பமாவதையும், விவரித்துச்சொன்னோம்.

இதுவரையில்ஏற்பட்டிருந்த சமூக அமைப்புகளிலெல்லாம்ஒருவகுப்பார் மற்றொருவகுப்பார் மீதில் விரோதம் காட்டுவதையும் ஒரு வகுப்பார் மற்றொருவகுப்பாரை அடக்கி ஆளுவதையும் அறிந்தோம்.

ஆனால் ஒருவகுப்பார் மற்ற வகுப்பாரை நிரந்தரமாக அடக்கி ஆள வேண்டுமென்றால் அடக்கப்படும் வகுப்பார் ஜீவித்திருப்பதற்கு எதாவது ஒரு மார்க்கம் இருந்துதான் ஆகவேண்டும். ஜமீன்தாரர் இடம் அடிமைப்பட்டிருந்த குடியானவனுவது நாளாவட்டத்தில் சொத்து சேர்த்து கிராம பஞ்சாயத்தில் அங்கத்தினராக தெரிந்தெடுக்கப்படும் உரிமை வரையில் அடைய முடிகின்றது. கொஞ்சம் முதலை வைத்து வியாபாரம் செய்கின்ற சிறு வியாபாரிகளும்கூட நாளடைவில் பெரிய பணக்காரர்களாக ஆவதற்கு இடமிருந்தது.

ஆனால் தற்காலத்திய தொழிலாளியின் நிலைமையோ தொழிலபிவிருத்தியின் மூலம் முன்னேற்றமடையாமல் தொழில்விருத்தியாக ஆக க்ஷீண நிலை அடைய வேண்டியதாகவிரு முன்னேறுவதற்கு இடமேஇல்லாததாய் இருக்கின்றது. தொழிலாளிஎப்போதும் பாப்பராக ஆகிவிடுகிறான். ஜனத்தொகை பெருகும் வேகத்தையும் விட செல்வம்பெருகும் வேகத்தையும் விட, தொழிலாளிகளுக்கு ஏழ்மைத்தனமே (பாப்பர்தனம்) உலகில் அதிவேகமாக பெருகுகிறது. தற்சமயம் அமுலில் இருந்துவரும் பணக்காரத்தத்துவமானது சமூகத்தைக்கட்டுப்படுத்த சக்தி அற்று வீழ்ச்சி அடைகின்றது. பணக்காரத்தத்துவத்திற்கு அடிமைப்பட்ட ஜன சமூகத்தைக்காப்பாற்றிவரும் தொழிலாளிகள் தாங்கள் முன்னேற்றமடைய முடியாமலும் தாங்கள் சமூகத்தை ஆதரித்து வருவது நாளடைவில் குறைந்து சமூகமானது தங்களை ஆதரித்தாகவேண்டும் என்கின்ற நிலைமைக்கு அவர்கள் க்ஷீணித்துவருவதால் இப்படிப்பட்டசமூக அமைப்புக்குகாரணமாய்இருக்கும் முதலாளி தத்துவமானது கண்டிப்பாய் ஒழிக்கப்படவேண்டியதாகிறது. இனிமேல் ஜன சமூகமானது முதலாளிகளுக்குள் அடங்கி ஜீவித்திருக்க முடியாது.

அதாவது, ஜன சமூகம் ஜீவித்திருப்பதற்கே முதலாளி தத்துவம் ஆபத்தானதாக இருக்கின்றது. முதலாளிகள் என்கின்ற ஒரு வகுப்பு உண்டாயிருப்பதற்கும் அது மற்ற வகுப்பார்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கும் காரணம் 'முதல்' என்பதாக ஒன்று ஏற்பட்டு அது நாளடைவில் பெருகிவருவதே யாகும். அப்படி முதல் என்பதாக ஒன்று ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் மனிதன் கூலிக்கு வேலை செய்வது என்னும் முறை ஏற்பட்டிருப்பதாகும். அப்படி மனிதர்கள் கூலிக்கு வேலை செய்வதற்கு காரணம் தொழிலாளிகள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் போட்டி போடுவதே யாகும். அப்படி போட்டிபோடும் தொழிலாளர்கள் இடையே தொழிலபி விருத்தியை முன்னிட்டு தோன்றும் முதலாளிகள் சிதறிக் கிடக்கும் தொழிலாளிகளை ஒன்று சேர்த்து நவீன தொழில் முறையில் ஈடுபடச்செய்வதன் மூலம் அவர்களிடம் ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் உண்டாக்குகிறார்கள்.

முதலாளிகள் தாங்கள் லாபம் சம்பாதித்துக்கொள்வதை உத்தேசித்து நவீனதொழில் முறைகளைக் கையாளுகிறார்கள். அந்தப்படி நவீன தொழில்முறைகளைக் கையாளுவதன் மூலம் தங்களுக்குள் ஒற்றுமை இன்றி போட்டி போட்டுக்கொண்டிருக்கும் தொழிலாளிகளை ஒன்று சேர்க்கின்றார்கள். ஆகையால் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் தொழில் முன்னேற்றத்தில் ஈடுபடும் காரணமாக முதலாளிகள் தங்களுடைய முதலாளிதனத்திற்கு தாங்களே ஆபத்தை தேடிக்கொள்ளுகிறார்கள். முதலாளிகளுடைய முயற்சியெல்லாம் கடைசியில் தங்களைப் போட்டுப் புதைக்க தாங்களே ஆட்களை உண்டாக்கிக் கொண்டதாக முடிகின்றது. முதலாளிகளுடைய வீழ்ச்சியும், தொழிலாளிகளுடைய வெற்றியும் எதிர்கால சரித்திரத்தில் தடுக்க முடியாததான சம்பவங்களாகும்.

இத்துடன் முதல்பாகம் முடிந்தது இனி இரண்டாம்பாகம் வரும்.

ஹிந்துக்கள் கடைமுன் மறியலாம்.

ஆகஸ்ட் 21ந் தேதிமாலை 5-30 மணிக்கு சென்னைக்கடுத்த சேத்துபட் கருக்காத்தம்மன் கோவில் சேரியிலிருக்கும் ஆதிதிராவிடர்கள் மேற்படி ஊரிலிருக்கும் இந்துக்கள் கடைகளில் கடைக்கு ஒவ்வொருவராக நின்றுகொண்டு வியாபாரம் செய்பவரும் ஆதிதிராவிடர்களை இந்துக்கள் கடைகளில் சாமான் வாங்கக்கூடாதென்றும், மகமதியர்கள்கடைகளில் வாங்கிக்கொள்ளும்படியும் சொல்லிக்கொண்டிருந்ததும் தவிர சுமார் 20,30 ஆதிதிராவிடர்கள் மேற்படி ஊர் ஸ்பர்டாங் ரோட் கார்பரேஷன் டோபிகானா எதிரில் நின்றுகொண்டு, அந்த வழியாக கதர் அணிந்துகொண்டு போகிறவர்களை அடிப்பதும், கதரைப் பிடுங்கி கொளுத்துவதுமாகவுமிருந்தார்கள் என்று "இந்தியா" பத்திரிகை எழுதுகிறது.

அகில இந்திய தாழ்த்தப் பட்டவர்கள் மகாநாடு.

திரு. எம். சி. ராஜா தலைவர்.

அகில இந்திய தாழ்த்தப்பட்டவர்கள் ஒன்பதாவது மகாநாடு பாஞ்சாலத்தில் சர்கயான் கண்டோண்ட்மெண்டில் அக்டோபர் 31வயும், நவம்பர் முதல் தேதி நடைபெறும்.

மகாநாட்டுக்கு இந்திய சட்ட சபை அங்கத்தினர் ராவ்பகதூர் எம். சி. ராஜா எம். எல். ஏ. தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

25 அத்தியாயங்கள் 50 சித்திரப்படங்கள்

200 பக்கங்களடங்கியது.

ஸ்டீம் இன்சின்களிலும், ஹைட்ராலிக் முறைகளிலும், ஆயில் இன்சின்களிலும், மின்சார சக்தியிலும், காசோலைன் மோட்டார்களிலும், 30 வருஷ அனுபவமுள்ள

ரா. கன்னியப்ப நாயக்கர் அவர்களால் இயற்றப்பட்ட

மோட்டார் கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபவப் பயிற்சி முறையும்

இப்புத்தகம் தற்கால நிலையையும், முறையையும், அனுசரித்து, மோட்டாரின் ஒவ்வொரு இயந்திர பாகங்கள், அவற்றில் ஏற்படும் தவறுகள் முதலியவற்றை எளிதில் அறிந்து, மோட்டார் சொந்தக்காரர்களும், டிரைவர்களும், பிறர் உதவியின்றி தாமாகவே பிரித்துப் பழுது பார்த்துச் சரிப்படுத்திக் கொள்வதற்கும் விசேஷ உதவியானது. இது வரை ரகசியமாயிருந்து வந்த பல அரிய நுட்பங்களை 25 பாகங்களாக 50 படங்களுடன் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தைச் சர்க்கார் இஞ்சினீர்கள் 14 பேர்களும் அநேக நிபுணர்களும் பாராட்டி, சர்டிபிகேட்டு கொடுத்திருப்பதே இதன் மேன்மையையும் உபயோகத்தையும் விளக்கும்.

விலை ரூபா 2-0-0

கிடைக்குமிடம்:-

குடியரசு புத்தகசாலை, ஈரோடு.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி.	...	0—8—0
மநு நீதி மருமம்	...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு.	...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு.	...	0—2—0
சோதிடப் புரட்டு.	...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு)	...	0—2—0
சுயமரியாதைப் பாடல்	...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.	...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	...	0—4—0
ஞானசூரியன்	...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்		0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம்	...	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)		0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி	...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	...	0—2—0
* இயற்கைமதம்	...	0—8—0
* சிதம்பர ரகசியம்	...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.		0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள்	...	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது]	...	0—6—0
* ஈ. வெ. இராமசாமியின் போட்டோ படம்		0—8—0
* மாதர் சுதந்திரம்.	...	0--10--0
* ஆராய்ச்சி அணிகலம்		0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட்	...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.

இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

WANTED Candidates for Electrical Engineering and wireless. Preparation for London City and Guilds Examination. Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India. Ltd., Bombay No. 10.

தாதி தேவை.

சுமார் 30 வயதிற்குட்பட்டவரும், சுகாதார முறையும், சிசுக்களை வளர்த்து அனுபோகமும் தெரிந்திருக்கவேண்டும். சாப்பாட்டுடன் சம்பளமும் தரப்படும், விவரத்திற்குஎழுதவும்.

YX

C/o குடி அரசு ஈரோடு.

கெந்தகமே—இந்தயுகம்.

டாக்டர் T. K. வெங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தகரசாயனம்.

(மாத்திரைரூபமாய், வெள்ளிக்கவசம்பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் துர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-வித்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி இரணமாகி, (இரத்தம் முசிந்த சீழ்) வெளியாகும் 217 வித வெட்டை வியாதிகள், 21 வித கிரந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மர்மஸ்தான கொருக்கு, இரணம், புத்தவகைகள், தொண்டைத்தூரு, அண்டப்புத்து, பௌத்திரம், குதகவாய்வு, உதிரவாய்வு, க்ஷயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவிலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல் கிரந்தியும், பல சிற்றின்ப சேர்க்கையாலோ, அதிகவிசனத்தினாலோ, அகால போஜனத்தினாலோ அன்னதுவேசமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாகி ஜெனிக்கும் வியாதிகளையும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு தளர்ந்ததினாலோ, தளர்ச்செய்துக் கொண்டதினாலோ, சூதகம் சரிவர, வெளியாகாமல், இடுப்பு, ஜப்பை, சந்துக்களிலும், அடிருசி, வாய்வு சம்பந்தப்பட்டவுடன் குனிய நிமிர முடியாமல், இருப்பதர்க்கு சந்துகட்டு என்பதற்கும் தடையின் இரத்த ஈரம்பு வழியாக சென்று முழங்கால், முட்டி முதல் பாதம் வரை உபாதையுடன் வீக்கமும் கண்டு நடமாட சௌகரியம் கொடுக்காத இளம் பிள்ளை வாதங்களையும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, தாது ஸ்கலித, முதலிய வியாதிகளையும் 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, தாது என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தையூட்டி முருக்கேற்றும் வன்மையுடைய தோழன். உந்தி குளிர (கர்ப்ப இரணங்களை ஆற்றக் கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 6—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,

(கால்ராவைபரி)

கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

காந்தீயம் வருணாச்சிரமத்தை வளர்ப்பது.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

The Selanger Stamp Co.,
Market Street.

S. S. Abdulkadir,
South Indian Bookstore,
122, Pitty street, penang

Serojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.

The Central stores
81, Jalan Ibrahim,
Johore Bharu.

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Surgei Pattani
Kedah, F. M S.

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.
"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட், சிங்கப்பூர்

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு „ 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற்கண்ட 6-9-31ந் தேதி குடி அரசில் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

100 புஸ்தகம் விலை 0-12-0

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)
சி. சுவாமி சிவப்பிரகாசம்,
"சன்மார்க்கன்" பழனி.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

ஆசிரியர்:- சொ. முருகப்பா.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—2—0
தனிப்பிரதி	ரூ. 0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
ஆறுமாதம் ...	ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சினாப்பள்ளி

சுயமரியாதை தலைவர்

போட்டோ படங்கள்.

சுயமரியாதைத்தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் போட்டோ படம்

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி 1-க்கு 0—8—0
டஜன் 1-க்கு 6—0—0

$8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ காப்பி 1-க்கு
தபால் செலவுடன் ரூ. 1—4—0
வெளிநாட்டுக்கு „ 1—8—0

உள். ஷ டஜன் 1-க்கு
தபால்செலவுடன் ரூ. 15—0—0

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி 1-க்கு வெளிநாட்டுக்கு தபால் செலவுடன் ரூ. 0—13—0

மற்ற தலைவர்களுடைய படங்களும் கிடைக்கும்.

ஒருகாப்பி வேண்டுவோர் 0-11-6 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் 15 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

குறைந்த விகிதத்திற்கு போட்டோபிடித்துக்கொடுக்கப்படும்.

பாலு & Co.,
ஓரியண்டல் போட்டோ ஹவுஸ்,
4நெ கோர்ட் வீதி, ஈரோடு.

கைவல்யம் அல்லது கலைக்யானம்.

விலை அணா 0—8—0.

இராமாயண ஆராய்ச்சி அயோத்யாகாண்டம்.

விலை அணா 0—8—0.

கிடைக்குமிடம்—குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.